www.tamilarangam.net

பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம் - இலங்கை



OLETARIAT, VANGUARD'S ORGANAIZATION (PROVO)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்

### உள்ளே


★ நமது கண்ணோட்டம்
★ மேதினச் செய்தி
★ சந்திரிகா அரசின் சமாதானம் யுத்தம்
★ அமைதியும் போரும்
★ மாவோ நூற்றாண்டை நினைவு கூர்வோம்
★ மக்கள் பிரச்சனையும் மதமும்
★ எம்.எல். உறவும் ம.ஜ.இ.க. வெளியீடும்


---

### பண்பான வாசகர்களுக்கு!

இனவாத அரசினதும், அராஜக இயக்கங்களதும் கடுமையான கெடுபிடிகளுக்கு, தடைகளுக்கு மத்தியில் "நவசகாப்தம்" உங்கள் கையில் எல்லைகளைத் தாண்டி கிடைக்கிறது. இதழை புதிய தோழமை உள்ளங்களின் கைகளுக்கு மாற்றுங்கள். உளப்பூர்வமான ஆலோசனைகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். இதழின் தொடர்ச்சிக்கு, வளர்ச்சிக்கு அன்பளிப்பு செய்யுங்கள். நன்றி!


தொடர்பு முகவரி:

P. FERNADAEZ, 390, DAWES ROAD,
1204 EAST YORK, M4B 2E5, ONTARIO, CANADA.


---

PROLETARIAT VANGUARD'S ORGANIZATION



## ☆ நமது கண்ணோட்டம் ☆

1970-களின் நடுப்பகுதியில் அமெரிக்க வல்லரசின் வியட்னாம் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக சந்திரிகா, பிரான்சின் தெருக்களில் நடந்த எதிர்ப்பு ஊர்வலங்களில் படிக்கும் காலத்தில் கலந்து கொண்டார். இனவெறி பிடித்த ஒரு புத்த பிக்குவின் துப்பாக்கிக் குண்டுக்கு தந்தையைப் பறிகொடுத்தார். U.N.P. க்கூலிப்படையின் அழித்தொழிப்புக்கு கணவர் குமாரதுங்காவை இழந்து இளம் விதவையான சந்திரிகா; இலங்கையின் இனப்பிரச்சனைக்கும் யுத்தத்தின் கொடூரங்களுக்கும் சமாதான தீர்வைக் கொடுபபார் என பிரச்சாரம் செய்து சிறீலங்காவின் ஆளும் வர்க்கங்களும் வல்லரசுகளும் அவரை ஆட்சிக்கு கொண்டு வந்தனர். பிரச்சனை தீர்ந்து விடாதா என்று ஆதங்கத்தில் வாழ்ந்து வரும் மக்களும் நம்பி வாக்களித்தனர். மகாத்மா காந்தி கைத்தறிக் கோவணத்தை கட்டிக் கொண்டு வாழ்ந்தும், போராடியும் கூட இந்திய மக்களுக்கும் நாட்டுக்கும் விடுதலை கிடைக்கவில்லையோ; அதேபோல் இந்த விதவைகள் தமது சொந்த வாழ்வில் இழப்புகளையும் துன்பங்களையும் எதிர் கொண்டார்கள் என்பதால் மட்டும் தேசத்தினதும் மக்களதும் எதிர்காலம் தீர்மானிக்கப் படுவதில்லை. அவர்கள் எந்த வர்க்கத்தின் நலனுக்காக அரசியலுக்காக நிற்கிறார்கள் என்பதே தீர்மானிக்கின்றது. அதற்கு ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுத்துள்ள தலைவர்கள் மட்டும் விதிவிலக்காகி விட முடியாது.

சந்திரிகா பதவிக்கு வந்து 10 மாதங்கள் கழிவதற்குள் இலங்கை மக்கள் முன் அவரது கொள்கையின் வெளிவேசங்கள் வேகமாக கலைந்து கொண்டிருக்கின்றது. அய்க்கிய இலங்கை, யுத்த நிறுத்தம், அமைதி, சமாதானம் என்பது கண்கட்டி விளையாட்டல்ல என்று தெரிகிறது. மக்கள் கூட்டணி அரசின் பொருளாதார, அரசியல் கொள்கைகள் காலவரம்பற்ற முறையில் வல்லரசுகளும் உள்நாட்டு தரகு வர்க்கங்களும் சிறீலங்கா தேசத்தை, மக்களை ஒட்டச் சுரண்டி கொள்ளையடிக்க மேலும் வழி வகை செய்துள்ளது. அமெரிக்காவின் குரல் வானொலிக்கும் சர்வதேச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகாசுரக் கொம்பனிகள் முதலிட, சுரண்ட பழைய சுதந்திர வர்த்தக வலயங்கள் போதாத நிலையில் சந்திரிகா இரண்டு புதிய சுதந்திர வர்த்தக வலயங்களை அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் உருவாக்கி கொடுத்துள்ளது. இயற்கை மூலவளங்கள் அனைத்தையும் மூலை முடுக்கெல்லாம் தேடித் தேடிக் கண்டுபிடித்து ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சம்பாதிக்க ''ஏற்றுமதிக் கிராமங்கள்'' அமைக்கப்பட்டு வருகின்றது. மலையக மக்கள் வாழும் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றது. இதுவரை அரைவயிறு, கால்வயிற்றுக்கு உழைத்து வாழ்ந்த தொழிலாளர்கள் வேலை இன்மையால் பட்டினிச் சாவுக்குள்ளாகின்றனர். விவசாயிகள் கடன் சுமைகளாலும் விவசாயத்திற்கான மானியம் இன்மை, இடுபொருட்களின் விலையேற்றம் போன்றவற்றால் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்கின்றனர். தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னமும் குடியுரிமை வழங்க முடியவில்லை. அடையாள அட்டை, உணவு பங்கீட்டு அட்டைகள் வழங்குவதில் அதிகார வர்க்கத்தின் கெடுபிடிகளுக்கு அளவே இல்லை. (அரசியல் யாப்பு திருத்தப்பட போவதாக அரசு வேறு அறிவித்துள்ளது) உலக வர்த்தக கழகத்தில் கையெழுத்திட்ட (டபிள்யு.ரி.ஓ.) உலக மகா கொள்ளையர்களின் பல் தேசியக் கொம்பனிகளுக்கும் தேசங்கடந்த தொழில் வாணிப கழகங்களுக்கும் நாட்டைத் திறந்துவிட்டுள்ளது. பெரும் ஏகபோக மூலதனத்துடன் போட்டி போடும் சக்தியற்ற நடுத்தர, சிறிய தொழில், வணிக நிறுவனங்கள் மூடப்பட்டு வருகின்றது. அரசு மீண்டும் வடக்கு, கிழக்கில் நடத்தும் யுத்தமும் அதற்கான செலவுகளும், மனித இழப்புக்களும் சிங்கள மக்களை மேலும் மேலும் வாட்டி வதைக்கத் தொடங்கியுள்ளது. மக்கள் கூட்டணி அரசின் இத்தகைய தேச விரோத, மக்களுக்கு துரோகம் இழைக்கும் கொள்கைகளும் அவற்றின் விளைவுகளும் சிறீலங்கா மக்களை போராட நிர்ப்பந்தம் செய்கிறது. இப்போது புரிகிறது தமிழ் தேசத்தில் மட்டுமல்ல, சிறீலங்காவிலும் அமைதியின்மை சமாதானமின்மை ஏற்படவும், யுத்தம் வெடிக்கவும் யார் காரணம்? தேசத்தின் சுதந்திரத்திற்கும் மக்களின் விடுதலைக்கும் வழிகாட்டும் புரட்சிகர தேசபக்த மக்கள் இயக்கங்களா? இல்லை சிறீலங்காவின் ஆளும் வர்க்கங்களும் வல்லரசுகளும், சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி அரசாங்கமா? இதற்கான பதிலில் யார் எந்த வர்க்கத்தின் நலனுக்கு, அதன் அரசியலுக்காக, நீதியான யுத்தத்திற்கா? அநீதியான யுத்தத்திற்கா? ஆதரவாக நிற்கின்றார்கள் என்பதிலிருந்து காட்டிக் கொடுத்துவிடும்.



சிறிலங்கா தேசத்தை சுரண்டுகின்ற மாதிரி, அடக்கியொடுக்கி அதிகாரம் செலுத்துவது போல் தமிழீழ தேசத்தை தம் கைக்குள் கொண்டு வர முடியாதிருக்கின்றது என்பதுதான் சிறிலங்கா சிங்கள பேரினவாத சந்திரிகா அரசாங்கத்தினதும் ஏகாதிபத்தியங்களினதும் கவலை. இந்த தேசத் துரோகிகளின், மக்கள் விரோதிகளின் சுரண்டலும் ஒடுக்குமுறையும் தமிழ் தேசிய இனம் முழுவதன் உயிர் நாடியை நசுக்கத் தொடங்கியபின், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை இனக்கலவரம், இனப்படுகொலை, இன ஒடுக்குமுறை யுத்தம் மூலம் ஒடுக்கத் தொடங்கிய பின் வெடித்தெழுந்த பேராட்டமே. பிரிந்து போகின்ற உரிமை உள்ளிட்ட தேசிய சுயநிர்ணய உரிமைக்கான நீதியான யுத்தம் தேசிய இன விடுதலை யுத்தம்.

இந்தப் பிசாசுகளின் அநீதியான யுத்தத்தால் தமிழீழ மக்களின் நீதியான யுத்தத்தை இதுவரை தோற்கடிக்க முடியவில்லை. நமது போராட்டத்தை திசை திருப்பிவிட சந்திரிகா அரசாங்கத்தைக் கொண்டு வேறுவழிகளில் கையாண்டு மீண்டும் நசுக்கிவிட முயல்கின்றனர். மோதல் நிறுத்தமும் பேச்சு வார்த்தையும் இதன் வெளிப்பாடுகளே. புலிகளுக்கும் அரசுக்கும் நடந்த பேச்சு வார்த்தை, மோதல் நிறுத்தம் சித்திரை 19-இல் புலிகளால் முறிக்கப்பட்டது. 25-இல் அரசின் ''வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை''கள் தொடங்கியது. 27-இல் பிரான்சில் நடந்த இலங்கைக்கு கடன் வழங்கும் 12 நாடுகள், 5 நிதி நிறுவனங்கள் நடந்திய கூட்டத்தில் இலங்கை நாட்டையும் மக்களையும் மேலும் மேலும் கடனாளியாக்க வல்லரசுகளுக்கு நாட்டை அடகு வைக்க தான் தயாராக இருப்பதை விளக்கி சொல்ல சந்திரிகா சென்றார். 28-இல் 20 பெரும் சர்வதேச முதலீட்டு நிறுவனங்களைச் சந்தித்தார். அவர்களுடைய முதலீட்டுக்கும் சுரண்டலுக்கும் உகந்த முறையில் அமைதியையும் சமாதானத்தையும் யுத்த நிறுத்தத்தையும் ஏற்படுத்திவிட முடியும் எனக் கூறினார். புலிகள் தங்களது யுத்த வரலாற்றில் முதன் முதலாக எஸ்.எ.7-பி ரக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தி அரசின் இரண்டு விமானங்களை பலாலியின் சுட்டு விழ்த்தினர். 100 மேற்பட்ட அரசு துருப்புக்களும் வெளிநாட்டு நிருபர்கள் 2 பேரும் இதில் கொல்லப்பட்டனர். இது சிறிலங்கா இராணுவத்திற்கும் அரசுக்கும் பேரிடியைக் கொடுத்துள்ளது. இந்த ஏவுகணைத் தாக்குதலால் அரசுக்கும் வெளிநாட்டுக் கடன் வாங்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற புலிகளின் கணக்கு பிழைத்தது. முன்னதாகவே முடிவு செய்யப்பட்ட கடன் பணத்தை பெற்று விரைவாக நாடு திரும்பினார் சந்திரிகா. புலிகளுக்கு இராணுவ ரீதியில் வெற்றி, அரசுக்கு கடன் வாங்குவதில் வெற்றி. இதன் மறுதலையாக நோக்கினால் இருவரின் மற்றைய நோக்கங்களுக்குத் தோல்வி. புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் சிறிலங்கா அரசை மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் வல்லரசுகளுக்கும் சந்தேகத்தை, அச்சுறுத்தலை தந்துள்ளது. அரசின் கூட்டுப் படைத் தலைமையகம் விழி பிதுங்கியுள்ளது. விமானப்படை விமானங்கள் வடக்குக்கு வருவது நிறுத்தப்பட்டது. பலாலி, ஆனையிறவு, பூநகரி முகாமில் இருந்து 20,000 இராணுவத்திற்கு உணவும், ஆயுத விநியோகமும், இராணுவ துருப்புகள் இடமாற்றமும் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. வவுனியா விமான தளம் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இராணுவத்துள் சலசலப்பு ஏற்பட்டது. புலிகளின் முற்றுகை பற்றியும் இறுதிப் போர் பற்றியும் புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் பெருமிதப்பட்டனர்.

சந்திரிகா இந்திய அரசிடமும் வல்லரசுகளிடமும் கையேந்தி காப்பாற்றக் கோரினார். பலன் கைமேல் கிடைத்தது. இந்திய அரசு வரையறுக்கப்பட்ட இராணுவ உதவிகள் செய்ய ஒப்புக் கொண்டுள்ளது. இராணுவத் தளவாடங்கள், விமானங்கள், இராணுவத்திற்குப் பயிற்சி, கண்ணிவெடி புதைக்கும், அகற்றும் இயந்திரங்கள் விமானப்படையின் மறைமுக உதவிகள், பாக்கு நீரிணைப் பகுதியில் கப்பல் படையின் நேரடியான உதவி புலிகளின் ஏவுகணைகளுக்குத் தப்பி தாக்கி அழிக்க கூடிய அமெரிக்கா, பிரிட்டனின் விமானங்களை வாங்க ஆலோசனை எனத் தொடர்கிறது. நேரடியாக இந்தியா இராணுவத்தை அனுப்பி உதவ முன்வராமைக்கு 87-இன் படிப்பினையும் அடுத்து வர



இருக்கும் பொதுத் தேர்தலும் முக்கிய காரணங்கள். ''அய்ரோப்பிய பொருளாதார சமூக நாடுகள்'' 19-5-95 வெளியிட்ட அறிக்கையில் ''புலிகளுக்கும் ஏனைய தமிழ் தீவிரவாத குழுக்களுக்கும் ஆயுத விற்பனை செய்வதை உறுப்பு நாடுகள் கடுமையாகத் தடை செய்ய கோரியுள்ளது.'' சார்க் நாடுகள் புலிகளை மீண்டும் பேச்சு வார்த்தைக்கு வர அழுத்தம் கொடுக்கவும் வேண்டியுள்ளது. ஆசியான் அமைப்பில் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனிசியா புலிகளைக் கடுமையாக கண்டித்துள்ளது. புதுடெல்லியில் நடந்த சார்க் நாடுகளின் 8வது மாநாடும் தமது குறிக்கோள்களில் ஒன்றாக தெற்காசியாவிலுள்ள தீவிரவாத பயங்கரவாத சக்திகளை அழிக்க பரஸ்பரம் கூட்டிணைந்து செயல்படும் 84இன் தீர்மானத்தை உறுதியாக கடைபிடிக்க முடிவு செய்துள்ளது. (பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் நடக்கும் பனிப்போரில் இவர்களால் இக்கொள்கைகளை கடைபிடிக்க முடியாது.) அமெரிக்கா நேரடியாக இராணுவ உதவிகள் அரசுக்குச் செய்ய முன் வந்துள்ளது.

சர்வதேச நிலைமைகள் சந்திரிகாவுக்கு இப்படி சாதகமாக கைகொடுக்கின்றன. மறுபுறம் புலிகளை பேச்சு வார்த்தைக்கு திரும்ப வருவதற்கு அழுத்தம் கொடுக்கின்றன. 90-இல் அரசையும் புலிகளையம் பேச வைக்க முயன்ற அவுஸ்ரேலியா இப்போது மீண்டும் சில முயற்சிகளை செய்ய முன் வந்துள்ளது. வல்லரசுகள் புலிகளை முற்றாக அழிப்பதை விட சமரசதுக்கு உட்படுத்தவே விரும்புகிறார்கள். சந்திரிகா அரசாங்கத்துக்கு இரண்டு வகையிலும் உதவி வருகின்றன. (புத்திசாலியான வல்லரசிய கொள்கை அதைத்தான் செய்ய முடியும்) தற்போது சிறீலங்கா அரசு ''புலிகள் மீது யுத்தப் பிரகடனத்தை'' அறிவித்துள்ளது. விமானங்களின் குண்டு வீச்சுக்கள் வடக்கில் மழைபோல் பொழியத் தொடங்கியுள்ளது. கிழக்கில் பொத்துவில் கிராமத்தில் 100-க்கும் மேலான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மக்கள் உயிருடன் கொழுத்தப்பட்டனர். கிளாலி போக்குவரத்து தடை, பொருளாதாரத் தடை, மீன் பிடிக்கத் தடை என மீண்டும் முழு அளவில் எல்லாம் தடை செய்யப்பட்டுள்ளது. கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் சுற்றி வளைத்து தேடுதலும் கைதுகளும் தொடர்கின்றது. வடக்கிலும் கிழக்கிலும் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீதும் மக்கள் மீதும் யுத்தம் மும்முரமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. 15,000 மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தற்போது ஏனைய துரோகக் குழுக்களுடன் பேச்சும் நடைபெறுகின்றது.

இலங்கையில் தமிழீழ தேசிய இன மக்களின சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்ற புலிகள் உட்பட அனைவருக்கும் முன்னால் உள்ள கேள்வி ஒன்றுதான். நாம் நடத்தும் நீதியான யுத்தத்திற்கு குறைந்தபட்ச அடிப்படையான அரசியல் கோரிக்கையான திம்புக் கோரிக்கைகளையாவது முன்னிறுத்தி பேச்சுவார்த்தைக்குச் செல்வதா? அல்லது திம்புக் கோரிக்கைகளைக் கூட கைவிட்டு மக்களுக்கும் தேசத்திற்கும் துரோகம் செய்து சமரசப்படுத்துவதா? இந்த இரண்டில் ஒன்றுதான் நமக்கு முன்னேயுள்ள வழி. இலங்கையின் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும் முதலாவது வழியைத்தான் முன்னிறுத்த வேண்டும். அதையே உள்நாட்டு மக்களிடமும் உலக மக்களிடமும் பிரச்சாரம் செய்ய வேண்டும். சமரசவாதத்தை தேசிய அடிமைப்பாட்டு வாத வழியை உறுதியாக எதிர்க்க வேண்டும். முதலாவது வழியை உயர்த்திப் பிடிக்க முன்வரும் புலிகள் உட்பட எவருடனும் கூட்டிணைந்து போராட தயாராக இருக்க வேண்டும்.

ஆசிரியர் குழு

★

நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். ஆனால் ஏகாதிபத்தியம் போரை நடத்துவதில் விடாப்பிடியாக நின்றால், நாமும் உறுதியான தீர்மானத்துடன் போரை நடத்திவிட்டு, பின்னர் நிர்மாணத்தில் ஈடுபடுவதன்றி, வேறு வழியில்லை. நீ தினம் தினம் யுத்தத்திற்கு அஞ்சினால் பின்னர் யுத்தம் வரும்போது யாது செய்வாய்? கீழ்காற்று மேல்காற்றை வெல்கிறது. யுத்தம் வெடிக்க மாட்டாது என்று நான் முதலில் கூறினேன். இப்பொழுது யுத்தம் வெடித்தால் ஏற்படும் நிலைமை பற்றி இந்த விளக்கங்களை மேலும் கொடுத்துள்ளேன். இவ்வாறு இரண்டு சாத்தியப்பாடுகளும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.

மாசேதுங்



## ☆ மே தினச் செய்தி ☆

உலகம் முழுவதும் தொழிலாளர்களின் தின வேலை நேரம் 8 மணி நேரம் என அங்கிகரிக்கப்பட காரணமாக இருந்தவர்கள், முதாலலி வர்க்கத்தையும், ஆளும் அரசையும் எதிர்த்து போராடிய சிக்காக்கோ நகர தொழிலாளர்களும், இரத்தத்தில் முகிழ்த்து எழுந்து நிற்கும் செங்கொடியும், மே முதலாம் திகதியும் அதற்கு இரத்த சாட்சியங்களாகும். மே தினம் சர்வதேச தொழிலாளி வர்க்கமும், அதன் முன்னணிப் படை வீரர்களும் தமது மூதாதையர்களின் போராட்டங்களை, தியாகங்களை நினைவு கூர்கின்ற தினமாகும். சமகாலத்தில் தத்தமது தேசங்களில், நாடுகளில் உலகளவில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களை சீர்தூக்கி பார்ப்பதற்க்கும், பெருமைப்படவும், போராட்ட அனுபவங்களில் கிடைத்த சாதக - பாதக அம்சங்களுடே மேலும் சரியான பாதையில் முன்னேறும் வழிகளை கண்டறியவும், இறுதிவரை இலட்சியத்தில் உறுதியாக போராட்டவும் புத்துணர்ச்சி பெறும் நாள். இவற்றுக்கெல்லாம் வழிகாட்டும் சித்தாந்தமாக மார்க்சிய - லெனினிய, மாஓ சிந்தனையை தமது வழிகாட்டும் தத்துவமாக உயர்த்திப் பிடிப்பதில் திடசங்கற்ப்பம் பூண வேண்டிய தினம் ''மே தினம்''

வரலாற்றில் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணம் வெளிப்பட்ட இத்தினத்தை திரிபுவாத இடதுசாரிக்கட்சிகள், முதலாளித்துவ கட்சிகளின் தொழிற்சங்கங்கள், ஏன் ஆளும் பாசிச அரசுகள் கூட தொழிலாளி வர்க்கத்துக்கும், நாட்டு மக்களுக்கும் எதிரான தங்களின் சுரண்டல்களை ஒடுக்குமுறைகளை மறைத்து, முகமூடியிட்டு தாங்களும் மே தின நாயகர்களாக காட்டிக் கொள்கின்றனர். ஒரு நாள் விடுமுறையும் இனிப்புகளும் வழங்கிவிடுவதுடன் மே தினத்து மகிமையை, தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான முதலாளித்துவ சகதிக்குள் மூழ்கடிக்க முயல்கின்றனர்.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி உணர்வு பெற்ற தொழிலாளி வர்க்கம் தனது மே தின சிறப்பை புரட்சிகரப் போராட்டங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் ஒரு பகுதியாக பார்க்கிறது. தொழிலாளி வர்க்கம் முழுவதையும் உணர்வு பெற்றெழச் செய்யவும், வர்க்க அய்க்கியத்தை கட்டியெழுப்பவும், புரட்சிகர தொழில்சங்கங்களை நிறுவவும், வளர்த்தெடுக்கவும், தொழிலாளி வர்க்கத்தை அணிதிரளக் கோருகிறது இம் ''மே தினத்தில்.''

இலங்கையில் யூ.என்.பி. அரசு போனபின்பு மக்கள் கூட்டணி அரசு (சந்திரிகா அம்மையார்) வந்ததும், இனப்பிரச்சனையே தீர்ப்பார், யுத்தத்தை ஒழிப்பார், சமாதானத்தை வரவழைப்பார், இலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மூலம் சீரழிந்த நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிலை நிறுத்துவார். தொழிலாளிகள், விவசாயிகள், மீனவர்கள்... என எல்லா பிரிவு உழைக்கும் மக்களின் வாழ்நிலைக்கு, சுதந்திரமும், அமைதியும் உத்தரவாதமும், சுபிட்சமும் அளிப்பார் என கதையளக்கப்பட்டது. தொடர்ந்தும் கதையளக்கிறார்கள். (மந்திரவாதிகளின் கண்கட்டி வித்தைகள் போல்தான் இதுவும்)

மக்கள் கூட்டணி அரசின் முதலாவதுமே தின கொண்டாட்டம், ஆர்ப்பாட்டமாக ஆடம்பரமாக நடத்தப்பட்டது. ''சந்திரிகா அரசு! தொழிலாளர்களின் அரசு, பாட்டாளிகளின் அரசு'' என தொழிலாளி வர்க்கத்தின் இரட்சகராக சந்திரிகாவைக் காட்ட ஆளும் வர்க்க அரசியல்வாதிகளும், தொடர்பு சாதனங்களும் படாதபாடு பட்டனர். (தமிழீழ மக்களுக்கு சமாதானம் கொண்டு வந்த பாப்பரசர் போல்) 5 ஆண்டு திட்டத்தில் 20,000 நடுத்தர சிறிய தொழில் முயற்சி மூலம் 2,50,000 வேலை வாய்ப்பை அளிக்கப் போவதாக அறிக்கை விட்டனர். தொழில் துறையில், வர்த்தகத்தில் நடக்கும் ஏகபோகம் அழிக்கப்பட்டு ''சுதந்திர போட்டி பொருளாதாரம்'' ''மனிதாபிமான முதலாளித்துவத்தை'' இலங்கையில் கட்டி வளர்க்கப் போவதாக சந்திரிகா அம்மையார் பிரகடனம் செய்திருக்கிறார்.

உண்மையில் நாட்டின் வரவு செலவு திட்டத்தில் முதலீட்டு பிரிவில் 75% அன்னிய முதலீட்டாளர்களுக்கு வழங்கியதன் வாயிலாகவும், காட் ஒப்பந்தத்தில் (W.T.O. இப்போது) கையெழுத்திட்டதன் மூலம் உற்பத்தியிலும், வர்த்தகத்திலும் பெரும் சர்வதேச பல்தேசிய கொம்பனிகளுக்கும், தேசங்கடந்த தொழில் கழகங்க



ளுக்கும் இலங்கையின் உற்பத்தி உரிமங்களை, சந்தையை அகலத் திறந்து விடும் 'கொள்ளை' கொள்கைக்கு சந்திரிகா அரசு உத்தரவாதமளித்துள்ளது.

இதன் விளைவு உள்நாட்டில் பெரும் அன்னிய மூலதனங்களுடன் சங்கமிக்கும் சக்தியுள்ள உள்நாட்டு தரகு முதலாளிகளைத்தவிர மற்றைய போட்டி போடும் சக்தியற்ற நடுத்தர சிறிய மூலதனங்களும் அதன் கீழ் உள்ள தொழிற்சாலைகளும் மூடப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த ''மனிதாபிமான முதலாளித்துவத்தை, சுதந்திர போட்டியை'' உருவாக்க கனவு காணும் சந்திரிகாவின் 8 மாத ஆட்சியில் 60 நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டது. தொழிலாளர்களின் வேலையிழப்பு வளர்கிறது. ஏற்கனவே 14% பேர் வேலையில்லாமல் உள்ளனர். ''நவீனமயமாக்கல்'' பணியிலிருந்து தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு இன்றி பணியிழப்பை அதிகப்படுத்துகிறது ''சர்வதேசிய மயமாக்கல்'' கொள்கையின் விளைவு அன்னிய முதலீட்டாளர்களும், நிதி வழங்கும் நிறுவனங்களும் தொழிலாளர்களின், தொழிற்சங்கங்களின் உரிமைகளில் கடுமையான சட்டங்களை போட நிர்ப்பந்திக்கிறது. ''நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தாராள மயமாக்கல் கொள்கைக்கு வெற்றி கிடைக்க வேண்டின், இரண்டு ஆண்டுகளுக்கு தொழிலாளர்கள் எந்தப் போராட்டங்களும் இன்றி, பணியில் ஒழுங்காக ஈடுபட வேண்டும்'' சந்திரிகாவின் வாயின் மூலமாக இதைப் பிரகடனப்படுத்திவிட்டார்கள்.

இவை எல்லாம் எதைக்காட்டுகிறது அய்க்கிய தேசிய கட்சியும் சரி, மக்கள் கூட்டணியும் சரி எல்லாம் உள்நாட்டு பெரும் பண முதலைகளுக்கும், அதிகார வர்க்கத்துக்கும், சர்வதேச ஏகபோக மூலதனத்துக்கும் தலையாட்டும் பொம்மைகள், நாட்டிற்க்கு துரோகம் செய்யும் தேசிய கட்சிகள் என்பதையே, இவர்கள் தொழிலாளி வர்க்கத்துக்கும், நாட்டு மக்களுக்கும், தூக்கு கயிற்றை மாட்டி விடும் எமதூதர்கள். இலங்கை தொழிலாளர் அமைச்சர் கடந்த மாதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று திரும்பினார். 25,000 பேருக்கு தொழில் வாய்ப்பை தேடி வந்துள்ளதாக அறிக்கைவிட்டார். மத்திய கிழக்கு நாடுகளில் பிரதானமாக வீட்டு பணிப்பெண்களாக 30,000 சிங்கள, தமிழ் பெண்கள் உள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னர். லெபனானில் மட்டும் ஆண்கள் - பெண்கள் என 60,000 தொழிலாளர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு சம்பளம் சரியாக கிடைப்பதில்லை, கிடைக்கும் சம்பளத்தில் ஒப்பந்தப்படி முகவர்களுக்கு ஒரு பகுதி, வேலைக்கு குறைந்தபட்ச நிரந்திரம் கூட இல்லை. தொழிலாளர்களுக்கான விசேட நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை.

கூடவே மனோவியல் ரீதியான துன்புறுத்தல்கள் குறிப்பாக வீட்டுப் பணிப் பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படல் என மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள தொழிலாளர்களின் கடின வாழ்க்கை ஆண்டுக்கு 1000-க்கு 2 பேர் என்றளவில் அங்கேயே தற்கொலை செய்கிறார்கள். வெளிநாட்டு தொழிலாளர்களின் இப்பிரச்சனைக்காக மத்திய கிழக்கு பக்கம் தலை வைத்து படுக்காத அரசும், அமைச்சர்களும் வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்களில் 70% ஆனவர்கள் ''இலங்கையின் வெளிநாட்டு தொழிலாளர் ஆணையகத்தில்'' பதிவு செய்து செல்லததால் சட்டப்படி அரசுக்கு கிடைக்க வேண்டிய அன்னியச் செலாவணி வரி அரசுக்கு கிடைக்காமல் போகிறதாம். இதை தடுக்க 'லெபனான் அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளார் தொழிலாளர் அமைச்சர்'. இலங்கையின் அன்னியச் செலாவணியை அதிகரிக்க காட்டும் ஆர்வத்தில் நூறில் ஒரு பங்கை அன்னிய நாடுகளிலுள்ள தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில், நலன்களைக் காப்பதில் அக்கறை காட்டவில்லை இந்த அம்மையாரின் அரசு. அவர்களுக்கு தேவையானது எல்லாம் அன்னியச் செலாவணியும், ஆட்சியதிகாரமும் தான்.

மலையகத்தில் தோட்டங்கள் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து, சிங்கள, தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் குரல் கொடுக்கிறார்கள். குறிப்பாக தமிழ் தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள் இங்கே தொழிலாளி வர்க்க சுரண்டல், ஒடுக்குமுறையுடன் இனப்பாரபட்சமும் கைகோர்த்து நிற்கிறது. அவர்களது போராட்டங்களை (தொழில் உத்தரவாதம், கூலி உயர்வு வீட்டு வசதி, தொழிற்சங்க உரிமைகள்...) சீர்திருத்தவாத சுயேட்சைகள் உட்பட தொண்டமான் தொடங்கி - தேசியக்



கட்சிகள் எல்லாம். வடக்கு கிழக்கு மக்களின் தனிநாட்டு கோரிக்கை பயங்கரவாதம் மலைய மக்களிடம் ஊடுருவி வருவதாக கூறி அம்மக்களின் போராட்ட அடிப்படையை, நியாயத்தை திசை திருப்புகிறார்கள். மற்றைய பகுதி மக்களிடம் இருந்து விசேடமாக சிங்கள தொழிலாளி வர்க்கத்திடமிருந்து அன்னியப்படுத்துகிறார்கள்.

இப்படியாக சந்திரிகா அரசு, அய்க்கிய தேசியக் கட்சி அரசின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, நாட்டை அன்னியர்களுக்கு அடகு வைக்கும் கொள்கைகளில், நாடு தழுவியளவிலான வர்க்க சுரண்டல் ஒடுக்குமுறை தளத்தில் இன, மத ஆதிக்க வடிவங்களை கலந்து விடுவதில் சிறிதும் வேறுபட்டு நிற்கின்ற அரசு அல்ல இது. சந்திரிகா அரசின் அரசியல், பொருளாதார கொள்கைகளால் உடனடியாக பாதிக்கப்பட்ட, மற்றும் அய்க்கிய தேசியக் கட்சியால் கைவிடப்பட்ட பல சமூகப் பிரச்சனைகளும், உடனடியாக கார்த்திகை மாதம் போராட்டங்களாக வெளிப்பட்டன. பல கோரிக்கைகளை முன்னிறுத்திய தொழிலாளர் போராட்டங்கள் வீதிக்கு வந்தது. பல்கலைக் கழக மாணவர்களின் விடுதிப் பிரச்சனைக்கான போராட்டம், கோட்டல் ஊழியர்கள் வேலை நிறுத்தம், பதிவு செய்யப்படாத உதவி மருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தம், இவை சந்திரிகாவின் புதிய சனரஞ்சக அரசியலுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. உடனே அம்மையார் தனது அரசு எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு யூ.என்.பி.யின் 17 ஆண்டு கட்சியை சுட்டிகாட்டுவது போல் தொழிலாளர்களின், மாணவர்களின், மருத்துவர்களின் நியாயமான தீர்வு காண முயற்சி எடுக்க வேண்டிய போராட்டங்களை யூ.என்.பி. தூண்டிவிடுவதாக அறிக்கை விட்டு தனக்குள்ள பொறுப்பை தட்டிகழித்து சுயரூபத்தை வெளியிட்டார்.

கூடவே கூட்டணி அரசிலுள்ள ட்ரொஸ்கிய திரிபுவாத தொழிற்சங்கங்களின், சுயேட்சை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பை பயன்படுத்தி அறிக்கை விட்டு கண்டிக்க செய்தார். சுயநலத்துக்காகவும், திரிபுவாத, ட்ரொஸ்கிய கொள்கைகளால் முதலாளி வர்க்கத்துக்கு வால்பிடிப்பதையோ தொழிலாக கொண்ட இத்தொழிற்சங்க தலைமைகள் ''தீய நோக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்ட அரசியல் சக்திகளின் வலையில் வீழ்ந்து விடாதிருக்குமாறும், வேலைத் தலங்களில் சட்டத்துக்கு புறம்பான போராட்ட நடவடிக்கைகளில் தொழிலாளர் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும், போராட்டங்களை நிறுத்தி புதிய அரசுடன் பேசித் தீர்க்கலாம்'' நக்கி பிழைத்து வாழும் அரசியலை, போராடும் தொழிலாளர், மாணவர்களுக்கு முன் நிறுத்தி தமது துரோக பாரம்பரியத்தை மீண்டும் நிரூபித்தன.

இவ்வாறு சிறீலங்காவிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் பிரிவு மக்கள் ஒருபுறம் ஆளும் அரசின் சுரண்டல் கொள்கைகளால் அரசு இயந்திரத்தின் ஒடுக்குமுறைகளால் பாதிக்கப்படுகையில், மறுபுறம் முதலாளித்துவ, திரிபுவாத கட்சிகளின் தொழிற்சங்கவாத தலைமைகளால் ஏமாற்றப்படுவதும் தொழிலாளி வர்க்கம் பிளவுபடுத்தப்படுவதும், தொழிலாளர்களின் போராட்டங்கள் சீர்திருத்த, சுயநல தலைமைகளால் இடைநடுவில் காட்டிக் கொடுக்கப்படுவதும் கைவிடப்படுவதும் தொடர்ச்சியாக நடத்தேறி வருகிறது. இப்போராட்டங்கள் வழியாகவும் பாடம் கற்றுக் கொண்ட புரட்சிகர தொழிலாளி வர்க்க சக்திகள் தொழிலாளி வர்க்கத்துக்கு முன் உள்ள இந்த இழிநிலையை மாற்ற புரட்சிகர தொழிற்சங்ககளை தோற்றுவிப்பதும், வளர்ப்பதும் உடனடிக் கடமையாகிறது. புரட்சிகர தொழிற்சங்கங்கள் வானத்தில் இருந்து வந்துவிடப் போவதில்லை. பிற்போக்கு தொழிற்சங்கங்களின் அரசியல் அம்பலப்படுத்தப்படல் வேண்டும், இத்தொழிற்சங்களுக்கு வழிகாட்டும் ட்ரொஸ்கிய, திரிபுவாத மார்க்சிய அரசியல் கட்சிகளின், முதலாளித்துவ கட்சிகளின் அரசியல் கோரிக்கையும், வர்க்க நலனும் வேறுபட்டவை அல்ல என்பதை தொழிலாளர்களுக்கு அடையாளம் காட்டி தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர அரசியல் கோரிக்கைகளும், போராட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். புரட்சிகரமான பாட்டாளி வர்க்க கட்சியின் தோற்றம் வளர்ச்சி, வாழ்வு இவற்றுடன் மிகமிக இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. புரட்சிகர தொழிற்சங்கங்களின் தோற்றமும், வளர்ச்சியும், வாழ்வும், இலங்கை கொம்யூனிஸ்டு கட்சியின் ஒரு அனுபவத்தை நாம் மறந்து விடக்கூடாது. தொழிற்சங்க இயக்கத்தை கட்டுவதில் எடுத்த அக்கறை, கட்சியை கட்டுவதில் காட்டத் தவறியதும்,



தொழிற்சங்க இயக்கத்தை புரட்சிகர போராட்டங்களில் வளர்த்தெடுப்பதை கட்சியை கட்டுவதற்கு சமனாக மதிப்பிட்டதும் மிகப்பெருந்தவறு என்பதை தோழர் சண்முகநாதனின் சுயவிமர்சன குறிப்பு சுட்டுகிறது.

தமிழீழப் பகுதிகளில் தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்து பிரிவு மக்களும், அவர்களது வாழ்நிலைமைகளும் சிறீலங்கா அரசின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறை யுத்தத்தால், பொருளாதார தடைகளால் அடுத்த வேளை உணவுக்கே ஏங்கவைத்துள்ளது. இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இனசமத்துவம் தேசிய சுதந்திரம் - சமத்துவத்துக்கான போராட்டத்தில் இவ் உழைக்கும் பிரிவு மக்களின் இரத்தம் சிந்தும் - இரத்தம் சிந்தா பங்களிப்பு மதிப்பிடற்கரியது. தேசியப் போராட்டத்தில் புலிகள் இயக்கத்தில் நிலை கொள்ளல் உட்பட அனைத்துக்கும் தமிழீழ உழைக்கும் மக்களின் தியாகங்கள் உரமேற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் தேசியப் போராட்டத்தின் பலாபலன்களை அனுபவிப்பதில் புலிகள் இயக்கம் உட்பட அனைத்து இயக்கங்கள் மூலமும் தமிழீழ முதலாளி வர்க்கமே தனது வர்க்க நலனுக்கும், சுரண்டலுக்கும், ஆதிக்கத்துக்கும் பயன்படுத்தி வருகிறது, பயன்படுத்தும்.

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழீழ தேசியப் பேராட்டத்தில் தொழிலாளிகளும், விவசாயிகளும், மீனவர்களும் பிற உழைக்கும் மக்களும் தங்களது வர்க்க நலனை பேணுவதிலும், விடுதலையைப் பெறுவதிலும் தேசியப் போராட்டத்தினுடே, தம்மை திடப்படுத்திக் கொள்வதற்கும், சுதந்திரமான சுயேட்சையான அரசியல் இயக்கத்தை நிலைபெறச் செய்வதில் தோற்றுப் போயுள்ளனர். அத்துடன் போர்கள நிலவரம் நின்றுவிடவில்லை இன்று தமது சுதந்திரமான அரசியல் கருத்து தெரிவிப்புக்கள், சங்கம் கட்டும் உரிமைகளை எல்லாம் இழந்துள்ளனர். புலிகள் உட்பட அனைத்து முதலாளித்துவ அராஜக இயக்கங்களும், தொழிலாளி வர்க்கத்தின், புரட்சிகர சக்திகள் சனநாயக சக்திகளின் சிந்தனைகள், செயல்பாடுகளுக்கு தடைவிதித்துள்ளனர். இத்தகைய உரிமைகளுக்காக குரல் எழுப்புபவர்களை கைது செய்வது சித்திரவதைப்படுத்துவது, ஏன் கொலை செய்வதிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ் இயக்கங்கள் தங்கள் நடமாட்ட பகுதிகளில், கட்டுப்பாட்டு பகுதிகளில் தனி இயக்க பாசிச சர்வாதிகாரத்தை அமுல்படுத்தி வருகின்றனர்.

மே தின கொண்டாட்டங்கள் அவர்களுக்கு மட்டுமே (முதலாளித்துவாதிகளுக்கும், அராஜக இயக்கங்களுக்கும்) உரித்தான சொத்தாக நினைத்து சுயேட்சையான சுதந்திரமான மாற்று அரசியல் கருத்து கொண்ட மே தின நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்துத் துள்ளனர். தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கிறது. விவசாய விளை நிலங்கள் எரியூட்டப்பட்டிருக்கிறது. மீனவர்களின் கடல் வலைய சுதந்திரம் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை சிறீலங்கா இனவாத அரசின், படைகளின் தேசிய ஒடுக்குமறை வெளிப்பாடுகள் எனின், தொழிலாளர்களும், விவசாயிகளும், மீனவர்களும் பிற உழைக்கும் மக்களும், மாணவர்களும், இளைஞர்களும் யுவதிகளும் தேசிய விடுதலை யுத்தத்தில் போர்முனையிலும், போருக்கான தயாரிப்பு சேவைகளிலும், உற்பத்தியிலும் பெரும்பங்கு வகிக்கிறார்கள். ஆனால் அவ் உழைக்கும் மக்களின் நலனை கவனத்தில் எடுக்கும் பேச்சுக்கு, எழுத்துக்கு சுதந்திரம் இல்லை. கூட்டம் கூடும், சங்கம் கட்டும் உரிமை இல்லை. உழைக்கும் மக்களின் நலன்கள், விடுதலை பற்றி சிந்திப்பதற்கு கூட தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது தேசி விடுதலை போராட்டத்தில் உள்ள தமிழீழ முதலாளி வர்க்கத்தின் கட்டளை. விடுதலைப்புலிகள் இயக்கம் முதல் எல்லா முதலாளித்துவ வர்க்க பிரதிநிதித்துவ இயக்கங்களின் இலட்சியங்கள். தமிழீழ தொழிலாளி வர்க்கமும், பரந்துபட்ட தமிழீழ மக்களும் ஒன்றில் புலிகளின் தேசியத்துள் சுவாசிக்க வேண்டும், இல்லையெனில் துரோக இயக்கங்களின் தேசியத்துள் சுவாசிக்க வேண்டும் இது தான் தமிழீழ முதலாளி வர்க்கத்தின் சட்டம்.

15 ஆண்டு கால தேசிய விடுதலைப் போராட்டம் தந்த படிப்பினையை புரிந்து கொண்டுள்ள உணர்வு பெற்ற தமிழீழ தொழிலாளி வர்க்க சக்திகளும், விவசாயிகளும் பிற பிரிவு மக்களும் தங்கள் மேல் பூட்டப்பட்டுள்ள விலங்குகளின் வகை மாதிரிகளை புரிந்து கொண்டுவிட்டார்கள். சிறீலங்கா அரசுக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியாக போராடிக் கொண்டே, உழைக்கும் மக்களின் வர்க்க நலனுக்காக முன்னின்று போராடும் பாட்டாளிவ ர்க்க கட்சியை உருவாக்குவது, வளர்ப்பதற்கான செயலில் ஈடுபடுகிறார்கள். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொடர்பு இன்றியும், பரஸ்பர புரிதலை வேண்டியும் நிற்கும் முன்னணிப்படை சக்திகளின் அய்க்கியத்தையும் உருவாக்க முயல்கிறார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போரின் இதுவரை காலமும் - இனியும் உழைக்கும் மக்களின் பங்களிப்பை, தியாகத்தை தமிழீழ முதலாளி வர்க்கம் சமரசத்தின் மூலமும், பிறவழிகள் மூலமும் பறித்துக் கொள்வதை, துரோகத்துக்கு இட்டுச் செல்வதை அனுமதிக்கப் போவதில்லை என இம் மே தினத்தில் உறுதி எடுத்துக் கொள்வோமாக!



சிறீலங்காவிலும் தமிழீழத்திலும் உள்ள அகதி முகாம்களின் உள்ள தமிழீழ தொழிலாளர்களும், விவசாயிகளும், மீனவர்களும் தங்கள் அடிவயிற்றுக்கு கூட போதாத

"உலர் உணவு வேண்டாம்"

தொழிற்சாலைகளை திறவுங்கள்!

விளைநிலங்களில் பயிரிட அனுமதியுங்கள்!

கடலில் மீன்பிடிக்க தடையை நீக்குங்கள்!

எங்களின் அடிப்படை உரிமைகளை பேசும், எழுதும், கூட்டம் கூடும், சங்கம் கட்டும் உரிமை எங்களுக்கு வேண்டும் என முகாம்களுக்கு பார்வையிட வரும் அதிகாரிகளிடம் கோருகின்றனர்.

பெர்னாண்டஸ்

★

மார்க்சிச - லெனினிசத் தத்துவத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட சுயவிமர்சன முறையைப் பயில்கின்ற, பொது மக்களுடன் தொடர்புடைய, சிறந்த கட்டுப்பாடுடைய ஒரு கட்சி, இத்தகைய ஒரு கட்சியின் தலைமையிலுள்ள ஓர் இராணுவம், இத்தகை கட்சியின் தலைமையிலுள்ள புரட்சிகர வர்க்கங்கள், புரட்சிக் குழுக்கள், எல்லாவற்றினதும் ஓர் அய்க்கிய முன்னணி; இந்த மூன்றும் தான் நாம் எதிரியைத் தோற்கடித்த மூன்று பிரதான ஆயுதங்கள்.

"மக்கள் சனநாயக சர்வாதிகாரம் பற்றி"
மாசேதுங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ☆ சந்திரிகா அரசின் சமாதானம்! யுத்தம்! பற்றி ஒரு பார்வை ☆

இலங்கையில் கடந்த 12 ஆண்டுகளாக நடந்து வரும் சிறிலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்து தமிழீழ மக்கள் நடத்தி வரும் தேசிய விடுதலைப் போர் 7000 புலிப் போராளிகளை, 34,000 தமிழ் மக்களை, இயக்க மோதல்களில் 1,300 போராளிகளை தமிழீழ மண்ணுக்கு உரமாக்கி கொண்டுள்ளது. உயிர் இழப்பு உடமைகள் இழப்புடன் தங்கள் வாழ்விடங்களை இழந்து உள்நாட்டில் மொத்தம் 7 இலட்சம் அகதிகள், இந்தியாவில் முகாம்களில் 60,000, 36,000 பேர் முகாமுக்கு வெளியில், சிறப்பு முகாம்களில் 1500, அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் 2 இலட்சம் பேர் என அகதிகளாகவுள்ளனர். சிறீலங்கா அரசு வடக்கு கிழக்கு மீதான இன ஒடுக்குமுறை யுத்த செலவுகளுக்கு தினம் ஒன்றுக்கு 5 கோடி ரூபாய் செலவு செய்கிறது. 12 ஆண்டுகளில் எத்தனை கோடி ரூபாய்க்கள்? சிறீலங்காவில் 1988-90 இடையில் ஜே.வி.பி. இயக்கத்தை நசுக்குவதாக கூறி 60,000 சிங்கள மக்கள், போராளிகள், இராணுவத்தாலும், போலீசாலும் படுகொலை செய்யப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர். பாடசாலை மாணவர்களை கூட 'பயங்கரவாதிகளாக' சித்தரித்து குழிதோண்டி புதைத்த 'சூரியகந்த' சம்பவங்கள் பல. இவற்றையெல்லாம் செய்து முடிக்க சிறீலங்கா அரசு பாதுகாப்பு துறைக்கு நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதியை ஒதுக்குகிறது. 1993-இல் 19.8 பில்லியன் ரூபாயும், மேலதிகமாக 8 பில்லியன் ரூபாய் என செலவு செய்திருக்கிறது. வடக்கில் மட்டும் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் 35,000 பேர்.

இவை எல்லாம் இலங்கையில் சிறீலங்கா அரசை எதிர்த்து போராடும் சிங்கள மக்களை, மலைய மக்களை, அடக்கி ஒடுக்குவதற்கு, தமிழீழ மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தொடர்ச்சியான ஒடுக்குமுறை யுத்தத்தின் மூலம் நசுக்குவதற்குமேயாகும். தமிழ் தேசிய இன மக்களின் தேசிய உரிமைகளை பறிப்பதிலும், இன ஒடுக்குமுறை - இனக்கலவரங்களை கட்டவிழ்த்து விடுவதில், சிங்கள மக்களை பௌத்த பேரினவாத வெறிக்கு பலியாக்குவதில், மதப்பிரிவுகளுக்கு இடையில் மோதல்களை தூண்டிவிடுவதில் யூ.என்.பி.யும், எஸ்.எல்.எப்.பி.யும் போட்டி போட்டு தமது ஆட்சியதிகாரத்தை பிடிக்க, நீட்டிக்க ஒவ்வொரு முறையும் செயற்பட்டு வந்தது. இலங்கையின் அதிகார மாற்றத்துக்கு பிந்திய 45 வருட இலங்கை வரலாறு இதை தெளிவாக காட்டுகிறது. கடந்த 17 ஆண்டுகளாக (சிறீமாவை) எஸ்.எல்.எல்.பி.யை வனவாசம் அனுப்பிவிட்டு 1979-94 வரை பாசிச - காட்டுமிராண்டி அரசை நடத்தி வந்த யூ.என்.பி.தான் கடந்த 12 ஆண்டுகளாக உள்நாட்டில் தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு தலைமை கொடுத்து வந்துள்ளது.



1994-இல் பிற்பகுதியில் நடந்த பாராளுமன்ற தேர்தல், சனாதிபதி தேர்தல்களில் மீண்டும் சந்திரிகா தலைமையிலன 'மக்கள் கூட்டணி அரசு' (எஸ்.எல்.எப்.பி.தான் கூட்டணிக்குள் பிரதான கட்சி) அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததுள்ளது.

''இனப்போரை முடிப்பது, இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது, அய்க்கிய இலங்கையில் அமைதியை சமாதானத்தை நிலைநிறுத்துவது, அரசு நிலையில் லஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகத்தை களைவது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பது'' என்ற இலட்சிய தேர்தல் திட்டத்துடன் பதவிக்கு வந்தது சந்திரிகா அரசு (விதவைகளின் தேர்தல் போட்டியில் விதவைகளே வென்று விதவைகளின் தலைமையிலான அரசு வந்துள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் விதவைகளின் கண்ணீருக்கு முற்றுப்புள்ளி வைப்பார்கள் இந்த விதவைகள், என முதலாளித்துவ ஏரிக்கரை அரசியல் நிபுணர்கள் எழுதினர்)

### மோதல் நிறுத்த ஒப்பந்தமும் - மோதலும்

சந்திரிகா அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் 1995 தை 8-லிருந்து (பண்டார நாயக்க நினைவு தினம்) அமுலுக்கு வந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ் ஒப்பந்தம், இரு பகுதிக்கும் இடையில் நடந்த மூன்று மாத கால ராஜதந்திர ரீதியிலான மோதலுக்கு பின், சித்திரை 19 நள்ளிரவில் புலிகளால் திருகோணமலையில் கடற்படை மீதும் அடுத்த தினங்களில் மட்டகிளப்பில் இராணவ முகாம் மீதும் நடந்த தாக்குதலையடுத்து, மீண்டும் இராணுவ ரீதியிலான மோதல்களாக மாறிவிட்டது. சிறீலங்கா இராணுவம் வடக்கு பகுதியில் புலிகளின் தளங்கள் மேலும் மக்களின் வாழ்விடங்கள் மீதும் ''வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள்'' என்ற பெயரில் தரைப்படை, வான்படை, கடற்படைகளின் கூட்டு தாக்குதல் மூலம் மீண்டும் இன ஒடுக்குமுறை யுத்தத்தை தொடங்கியுள்ளனர். புலிகளும் இதுவரை கால யுத்தத்தில் முதன்முதலாக எஸ்.ஏ. 7-பி ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பாவிக்க தொடங்கியுள்ளனர். பலாலியில் அரசின் இரண்டு இராணுவ விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளனர். 100-க்கும் மேலான இராணுவத்தினர் அழிக்கப்பட்டுள்ளனர். மக்கள் கூட்டணி அரசு முதன்முதலாக இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு தலைமை தாங்கவும், யுத்தத்தை எதிர் கொள்ளவும் முன் வந்துள்ளது. வாழ்க சந்திரகா அரசின் சமாதானமும் அமைதியும்.

ஆட்சிக்கு வந்ததிலிருந்து கடந்த எட்டு மாதங்களாக சந்திரிகாவின் சமாதானமும், அமைதியும், புலிகளின் சமாதானமும், அமைதியும் பற்றிய கொள்கை அறிவிப்புகளால், பிரச்சாரங்களால் உண்மையாகவே இலங்கையில் சமாதானமும், அமைதியும் வந்துவிடும் என நம்பிய, தமிழீழ, சிறீலங்கா மக்களும், உலக மக்களும் யார் சமாதானம், அமைதியின் எதிரிகள் என்பதை கண்டு பிடிக்க தலையை போட்டு உடைக்கிறார்கள். புலிகள்தான் மோதலை அநியாயமாக தொடக்கியுள்ளனர். இவர்களின் வேலையே இதுதான். சந்திரிகாவின் அருமையான சமாதான, அமைதி திட்டத்தை 'புலி தின்றுவிட்டது' என ஒருபுறமும் அமெரிக்கா, கனடா, அய்ரோப்பிய ஒன்றியம், நேபாளம், வங்களா தேசம், இந்தோனிசியா, அவுஸ்ரேலியா என அரசுகளும் புலியை கண்டித்து, மீண்டும் சமாதன வழிக்கு வர அறிக்கை விட்டுள்ளன. மறுபுறம் ''புலிகளின் தாகம் தமிழீழம்'' அவர்களது இராஜ தந்திர நடவடிக்கையில் தப்பு இல்லை. அவர்களிடம்



வல்லரசு எதிர்ப்பு குணாம்சம் ஏதோ ஒரு அளவில் இருக்கிறது. அவர்கள் போராடுவார்கள் என நம்புகிறோம். தமிழ் மக்களின் தேவைகளை (பொருளாதார தடை, மீன்பிடிக்கத் தடை) முழுமையாக அரசு தீர்க்க தவறியதால் புலிகள் மீண்டும் இறுதுச்சமரில் (எத்தனை தடவை இறுதிச் சமர் வந்து போயுள்ளது) ஈடுபடுகின்றனர். இப்படி பல கருத்துக்கள் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது.

இந்நிலையில் தமிழீழ புரட்சிகர சக்திகள் தமது கண்ணோட்டத்தை முன்வைப்பது மிகமிக அவசியமானது. இன்று உலகளவில் ''யுத்தம் - சமாதானம்'' பற்றிய நிலைப்பாடுகள் விளக்கங்கள் தொழிலாளி வர்க்கத்திடமும், பரந்துபட்ட மக்கள் திரளிடமும் தவறாக பிரச்சாரப்படுத்தப்படுகிறது. வல்லரசுகளும், உள்நாட்டு பிற்போக்கு அரசுகளும், மத நிறுவனங்களும் சீர்திருத்தவாத சக்திகளும், எதிர் புரட்சி அமைப்புகளும் இவை எல்லாவற்றின் தொடர்பு சாதனங்களும் இதில் முக்கிய பங்காற்றுகின்றன. ஒரு போராட்ட இயக்கத்தையும், அதன் தலைமையையும் யுத்த வெறியர்களாக சித்தரிக்கவும், தேவையானால் அவர்களை சமாதானத்தின் நோபல் பரிசு வீரர்களாக காட்டவும் முடியும் என இந்த மக்கள் விரோத கூட்டம் நம்புகின்றது. இவர்களின் எல்லையில்லா சுரண்டல், ஒடுக்குமுறை, நிரந்தர ஆதிக்கம் சார்ந்த ''யுத்தம் - சமாதானம்'' பற்றிய கொள்கைகள், பிரச்சாரங்களை அவற்றை எதிர்த்த புரட்சிகர மக்களின் உறுதியான போராட்டங்களும் அவற்றுக்கு தலைமை வழிகாட்டிய தொழிலாளி வர்க்க புரட்சிகர, மார்க்சிய தத்துவமும், மக்களின் வீரஞ்செறிந்த போராட்டங்களும், அவற்றை முறியடித்து மக்களின் நீதியான யுத்தம் - சமத்துவத்தின் மேல் சமாதானம், அமைதியை ஏற்படுத்தியதும், ஏற்படுத்த போராடுவதுதான் இன்று வரலாறு விளங்குகிறது.

மோதல் நிறுத்த ஒப்பந்தம் முறிந்து மோதல் தொடங்கியுள்ள நிலையிலும் சந்திரிகா அரசு ''போர் நிறுத்தத்துக்கும், சமாதான பேச்சுக்களுக்கும் அரசியல் தீர்வுக்குமான சாத்தியப்பாடுகள் இன்னமும் இருக்கின்றது'' ''விடுதலை புலிகள் போன்ற உலக பிரசித்தி பெற்ற கொரில்லா இயக்கங்கள் அவ்வுளவு விரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக இலகுவில் சமாதான வழிக்கு திரும்பிவிடும் என எதிர் பார்க்கவில்லை'' என்கிறது. புலிகளோ ''அரசு தனது நிலைப் பாட்டை மாற்றி தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்ப ளிக்க வேண்டும். பேச்சு வார்த்தைக்கும், சமாதானத்துக்குமான தங்களது கதவுகள் திறந்தே யிருக்கின்றன'' என்கிறது. அடிப்படையில் சந்திரிகா அரசுக்கும், புலிகளுக்கும் பின்னாலுள்ள ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார, சமூக அதிகார நலன்களும், முரண்பாடுகளும், கோரிக்கைகளும் தீர்க்கப்பட அவர்கள் பின்பற்றி வரும் மார்க் கங்களே யுத்தமாகவும் - சமாதானப் பேச்சுக்கான முயற்சிகளாக வெளிப்படுகிறது. இவ்வர்க்கங்களுடன் பொருளியல் வாழ்வில் இரண்டறக் கலந்தும், தொடர்பு பட்டும், உள்ள சர்வதேச எச மான வல்லரசியங்களும் பிராந்திய நண்பர்களும் தங்களது நலன் கள், தேவைகளை ஒட்டி யுத்தம் - சமாதானம் குறித்த அழுத்தங் களை உதவிகளை நேரடியாக முறைமுகமாக கூட்டிக் குறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே சந்திரிகா அம்மையாரின், தம்பி பிரபாகரனின் தனிப்பட்ட வாழ்வின் விருப்பு, வெறுப்புக்கள், விசேட குணாதி யங்களிலிருந்து நாட்டின் யுத்தமும் சமாதானமும் தீர்மாணிக்கப் படுவதில்லை. ஆனால் இவர்களுக்கு பின் உள்ள சுரண்டும் வர்க் கங்களும், அவற்றின் தொடர்பு சாதனங்களும் சந்திரிகாவினதும் பிரபாரகனினதும் தனிப்பட்ட ஆளுமைகள் இவற்றை தீர்மா னிப்பதாக நேரடியாவே, எதிர்நிலையிலோ கூறுகின்றன. இதன் மூலம் தங்களது சுரண்டும் வர்க்க மோதலை, முரண்பாடுகளை அதிகார மோதலை மறைத்துக் கொள்கின்றன. தொழிலாளிவர்க் கத்தையும், பரந்துபட்ட உழைக்கும் மக்களையும், ஒடுக்கப்ப டும் தேசிய இன மக்களையும் மிக சாதுரியமாக இவ்வாறு ஏமாற் றுகின்றன. சந்திரிகா அரசுக்கும் - புலிகளுக்கும் பின்னுள்ள வர்க் கங்களை அவற்றின் நடவடிக்கைளை சிறிது பார்ப்பது அவசி யம். இவை எவ்வாறு தங்கள் - தங்கள் தேசிய இன தொழிலாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும் அவர்களது புரட்சிகர மான தேசிய உணர்வுகளையும் தமது சுரண்டும் வர்க்க நலனுக்கு வல்லரசிய சார்புக்கு இசைவான முறையில் பயன்படுத்துகிறார்



கள். தொழிலாளி வர்க்க சக்திகளும் அவர்களது இயக்கமும் ஒடுக்குகின்ற சிங்கள தேசிய இன முதலாளிகளின் அரசின் பெருந்தேசிய இனவாத, கொள்கைகளுக்கு பலியாவதில் இருந்து விடுபட்டு அதை எதிர்த்து போராடுவதுடன், ஒடுக்கப்ப டும் தேசிய இனத்தின் தமிழீழ முதலாளி வர்க்கங்களின் குறுந்தே சியவாத, தேசிய வெறிக் கொள்கைகளுக்கும், அவர்களின் வல்ல ரசிய எதிர்ப்பு குறித்த கண்கட்டி வித்தைகளிலிருந்தும் தம்மை விடுவித்து சர்வதேசிய கண்ணோட்டத்திலிருந்து தேசிய சுதந்தி ரத்தை, சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தும் பிரிந்து போவது உள்ளிட்ட தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன் னேடுத்து செல்ல முடியும். தொழிலாளி வர்க்கத்தினதும், பரந்து பட்ட மக்களதும் நலன்களை உத்தரவாதம் செய்யும், உண்மை யான தேசிய சுதந்திரத்தை, விடுதலையை நிலைநாட்டும் புதிய சனநாயக புரட்சி போரை நடத்த முடியும்.

சிங்கள தரகு முதலாளிகளும் வல்லரசுகளும், பௌத்த சிங் கள பேரினவாத நிறுவனங்களும் சிறீலங்கா அரசின் தன் மையை, அதனை ஆளும் கட்சிகளின் கொள்கைகளை தீர்மா னித்து வருகின்றன. சிறீலங்கா அரசின் ஆளும் கட்சிகளின் தமிழ் தேசிய இன ஒடுக்குமுறை கொள்கை உட்பட அனைத்தும் மேற் கூறிய ஆதிக்க சக்திகளின் அரசியல், பொருளாதார, சமூக அதி கார தேவைகள், நலன்களுக்கு சேவை செய்வதை நோக்கமாக கொண்டிருக்கிறது.

''யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்''

''இலங்கையில் இருப்பது இனப்பிரச்சனையல்ல, பயங்கர வாத பிரச்சனை''

''இனப் பிரச்சனைதான் சமாதான வழியில் தீர்வு காண முயல்வோம்'' ஜே.ஆர். ஜெயவர்த்தனா, விஜயதுங்கா, சந்திரிகா வரை வேறுபட்ட வார்த்தைகள். இவை எல்லாம் ஒரே ஆளும் வர்க்கத்தின் அவற்றுடன் கூட நிற்கும் வல்லரசுகளின் வேறு பட்ட அணுகுமுறைகள். இது அவ்வர்க்கங்கள் முதற்கொண் டுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் பொருளாதார வல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லமை, நெருக்கடிகளிலிருந்து மாற்றிக் கொள்ளும் அனுகுமுறை வடிவங்கள் கொள்கைகள். இவற்றை பிரச்சாரம் செய்யுமாறும் அரசு இயந்திரத்தை பயன்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்துமாறும் ஆளும்கட்சிகளுக்கு இவ்வர்க்கங்களும், வர்க்க சித்தாந்ததமும் வழிகாட்டுகிறது'' அதேவேளை சிங்கள தேசிய இனத்தின் தொழிலாளி வர்க்கத்தை பரந்துபட்ட மக்களை இடைவிடாது சுரண்டிக் கொண்டு, அடக்குமுறை செய்து கொண்டும், சிறீலங்கா தேசத்தை வல்லரசுகளுக்கு ஒப்படைத்து விட்டு - இவற்றை மறைக்க சிங்கள இனவாதத்தையும், பௌத்த மதவாதத்தையும், பெருந்தேசிய வெறியையும் ஊட்டி சிங்கள மக்களை தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக திருப்பிவிட்டுள்ளனர்.

இதுபோல்தான் சிறீலங்கா அரசின் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் தமிழ் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கங்களும், மத நிறுவனங்களும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான பேராட்டத்தில் தமது அரசியல், பொருளாதார தேவை, வல்லமை, நலன்கள், நெருக்கடிகளில் இருந்து ''தனித் தமிழீழம், மாவட்ட சபை, மாகாண சபை, சமஷ்டி, சுயாட்சி, கௌரமான தீர்வு'' என தமது வர்க்க பிரதிநிதித்துவ கட்சிகள், இயக்கங்கள் மூலம் பிரச்சாரம் செய்யவும், போராடவும், கைவிடவும், சமாதானம் செய்து கொள்ளவும், வழிகாட்டிக் கொடுக்கின்றனது. கூடவே தமிழீழ தொழிலாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட உழைக்கும் மக்களையும் ஒரு கணமேனும் இடைவிடாது சுரண்டிக் கொள்ளவும், அடக்கி வைத்திருக்கவும் தமது சுரண்டலை, ஒடுக்குமுறையை திசை திருப்ப குறுந்தேசிய வெறியையும், மத வழிப்பட்ட முரண்பாடுகளை முசுலீம் - இந்து என மக்களிடம் வளர்க்கின்றனர். தொழிலாளி வர்க்கத்தின், மற்றும் புரட்சிகர வர்க்கங்களின் சுதந்திரமான தேசிய ஒடுக்குமுறை எதிர்ப்பு போராட்ட அமைப்புக்களை தடை செய்கிறார்கள். ''தேசிய விடுதலையை வெல்ல ஒரே தலைமையின் கீழ் கட்டுப்பாட்டுடன், ஒரே இயக்கமாகத் தான் செயற்பட வேண்டும்'' என்ற கொள்கையை காட்டி தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் தான் தொழிலாளி வர்க்கமும், பரந்துபட்ட தமிழீழ மக்களும்



போப்பரசரின் இலங்கை வருகை சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக என்று கூறப்பட்டது. பொஸ்னியாவிற்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் ஜோன்போல் சென்ற பின்பு தான் சமாதானம் ஏற்பட்டதாகவும், அதே போல் இலங்கை வருகையும் பிரமாண்டமான பிராத்தனையும் சமாதானத்தைக் கொண்டு வர என கூறப்பட்டது. பொஸ்னியாவினதும் லத்தீன் அமெரிக்க நாடுகளினதும் இன்றைய நிலை என்ன என்பது போப்பரசர் ஜோன்போல் உட்பட உலக மக்கள் எல்லோருக்கும் தெரியும்.

குடாநாட்டில் இருந்து போப்பரசரைத் தரிசிக்கவென்று சுமார் 4000 பேர் வரை கொழும்புக்கு வருவதற்கு எல். ரீ.ரீ.ஈ., அனுமதி கொடுத்து இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு மக்கள் சென்று வருவதற்கு தடைவிதிக்கும் எல்.ரீ.ரீ.ஈ. போப்பரசரை தரிசிப்பதற்கு மட்டும் எந்த வித கெடுபிடியும் இன்றி அவர்கள் பின்பற்றி வரும் போக்குவரத்து சட்டவிதிகளும் மாற்றியமைக்கப்பட்டு போக்குவரத்துக்கும் பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். கூடவே போக்குவரத்துக் கட்டணத்தையும் சரிபாதிக்கு மேல் குறைத்து போப்பரசரின் வருகைக்கு பச்சைக் கொடி காட்டினர். சில வேளை போப்பரசர் வத்திக்கானில் (ரோம்) இருந்து சமாதானத்தை எடுத்து வந்திருப்பார் என அவர்களும் நம்பியிருக்கலாம்.

சமூக பொருளாதார ஒடுக்கு முறையாலும் தேசிய, இன அடக்குமுறைகளாலும் மக்கள் தமது விடுதலைக்கான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் போது, அதற்கான காரணங்களை மக்கள் ஆராயவிடாது மதம் என்ற போர்வையில், மக்களை அறியாமையில் மூழ்கடித்து, போராட்டங்களின் நியாயத்தை திசை திருப்பி விடுவதையே தமது வாழ்வின் விதியாகக் கொண்டவ எல்லா மத நிறுவனங்களும் சுரண்டும் வர்க்கங்களும் அரசுகளும் எந்தக் காலத்திலும் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

இலங்கையில் போப்பரசரின் வருகையை எதிர்த்து போராட்டம் நடத்திய பௌத்த சங்கங்கள் மதவாத, இனவாதக் கருத்துக்களை முன்னிறுத்தியே இயங்குகின்றன. ஆளும் அரசுகளுடன் தம்மைக் கூட்டிணைத்துக் கொண்டு, தமிழ் தேசிய இன மக்கள் மேல் இன ஒடுக்கு முறை யுத்தத்தை நடத்திக் கொண்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருக்கடியில் சிக்கியுள்ளது. விலைவாசி உயர்வு, நாணய மதிப்பிறக்கம், வேலையில்லாப் பிரச்சனை, வரவு செலவு திட்ட பற்றாக்குறை அதிகரிப்பு, வெளிநாட்டு கடன் வட்டி பெருமளவு உயர்ந்திருப்பது, அன்னியச் செலாவணி பற்றாக்குறை, இராணுவத்துக்கு செலவிடும் தொகை எல்லையின்றி உயர்வது, கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம், மானியங்களுக்கு வழங்கி வந்த நிதி உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் இவற்றின் கட்டளைக்கு அடி பணிந்து பெருமளவு வெட்டு செய்தது. இவற்றுடன் யுத்த பாதிப்புக்கள் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் இவை எல்லாம் சமூக பொருளாதார நெருக்கடியை, மக்களின் கொந்தளிப்பை வேகப்படுத்தியது. 1977-இல் யூ.என்.பி. கொண்டு வந்த ''திறந்த பொருளாதார கொள்கை, தாராள இறக்குமதிக் கொள்கை, சர்வதேசியம் மயமாக்கல், நவீன மயமாக்கல் கொள்கை, அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கல், அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்க்கு முன்னுரிமைக் கொள்கைகள்,'' இவை இலங்கையின் பொருளாதாரத்தில் கடந்த 17 ஆண்டுகளில் கடைபிடிக்கப்பட்டு வந்தவை. இக்கொள்கைகள் உள்நாட்டு பொருளாதாரத்தை என்றுமில்லாதவாறு நிலைகுலையச் செய்துள்ளது. சர்வதேசளவிலும், பிராந்தியளவிலும் நடந்து வரும் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் பொருளியல் போட்டியில் தாக்கு பிடிக்க முடியாத இலங்கையின் தொழில், வணிக முதலாளி வர்க்கமும், நிதி நிறுவனங்களும் தங்களது நெருக்கடியை சீர் செய்து கொள்ள வேண்டியிருந்தது. வல்லரசு நாடுகளின் பல்தேசிய கொம்பனிகளும், தேசங்கடந்த தொழில் கழகங்களும் மூன்றாம் உலக நாடுகளுக்கு கடன் வழங்கும் நிதி நிறுவனங்களும், நாடுகளும் தங்களது நவகாலனிய பிடிப்புக்குள் இலங்கையை மேலும் இறுக்கி கொள்வதற்கு தங்களது பொருளாதார சுரண்டலை, அதிகாரத்தை விஸ்தரிப்பதற்கு அதற்கு தடையாகவுள்ள, யுத்தத்தை - சமூக பிரச்சனைகளை வரையறைக்குட்பட்டு சுரண்டல், ஒடுக்குமுறை நோக்கில் சீரமைத்துக் கொள்ள விரும்பகின்றன. இதன் மூலமே நாட்டிலுள்ள இயற்கை வளங்களை தேடித்தேடி கொள்ளையிடவும், உற்பத்தியில் சுரண்டலையும், சந்தையில் அதிகலாபத்தை அதி



கப்படுத்தவும் முடியும். இதற்கு மையப்பட்ட ஆட்சி அதிகாரத்தை நிலைக்க வைப்பதும் அவசியமாகிறது.

இவர்களின் தேவையை நிறைவு செய்ய, ஒரு புதுவிதமான தலைமை எல்லாப் பாத்திரங்களிலும் சிறப்பாக நடிக்க கூடிய ஒரு நடிகரின் மனைவி அதுவும் இலங்கை மக்களின் தாய்மார்களின் சோகமான யதார்த்த வாழ்நிலைமையை மானோவியல் ரீதியாக கவ்விப் பிடிக்கக் கூடிய விதவைத் தலைவியாக சந்திரிகா கிடைத்தார். ''சந்திரிகா சின்ன வயதில் தந்தையை இழந்தவள், இளம் வயதில் கணவனை இழந்தவள், பயங்கரவாதத்தின் கொடூரத்தை உணர்ந்தவள், எனவே யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் கண்ணீரை, இதயச் சுமையை நிறுத்த சமாதானத்தை கொண்டு வருவார்'' இப்படி மக்களின் உணர்வுகளை தொடும் ஆற்றல் மிக்க தலைமையாக சந்திரிகா முன்னிறுத்தப்பட்டார். ஆனால் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிகளையோ, நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் மாற்றங்களையோ முன்வைத்து ஆட்சிக்கு வரவில்லை. மாறாக இனப்பிரச்சனையை தீர்ப்பது பற்றிய மேலோட்டமான வார்த்தை ஜாலங்களை அன்னிய முதலீட்டை மேலும் ஆழப்படுத்துவது, சந்தைப் பொருளாதார கொள்கை, ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை, மொத்தத்தில் யூ.என்.பி.இன் 1977 பொருளாதார கொள்கையை உறதியாக அமுல்படுத்துவது இதனை ''மனிதாபிமான முதலாளித்துவத்தை''தான் கட்டி வளர்க்கப் போவதாக அறிவித்தது. தேர்தலுக்கு முன்னதாகவே உலக வங்கி தலைவர்களை சிங்கப்பூரில் சந்தித்து சந்திரிகாவும், சிறீமாவும் மேற்கண்டவற்றை உறுதிப்படுத்தியது உலக இரகசியமல்லவே. இதனால்தான் மக்கள் கூட்டணி அரசின், சந்திரிகாவின் வெற்றி சமாதானத்தின், அமைதியின் வெற்றியாக உலகளவில் பிரச்சாரப் படுத்தப்பட்டது 'சந்திரிகா சமாதானத்தின்' இரகசியம் இதுவே.

தொடர்ந்து வரும் இன ஒடுக்குமுறை யுத்தத்தால், பொருளாதார தடைகளால் தமிழீழ மக்கள் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார தடை மலைபோல் விலைவாசி உயர்வு, வருமான வழிகள் இன்மை, யுத்தத்தால் திக்குமுக்காடும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடப்பெயர்வுகள். பொது சமூக வாழ்வில் இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகள். புலிகளின் ஏதேச்சதிகாரம், உள்நாட்டில் தமிழ் சுரண்டும் வர்க்கங்கள் சந்திக்கும் நெருக்கடிகள், யுத்தத்தினூடே இவர்கள் நடத்தும் பகல் கொள்ளை, முக்கியமாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலுள்ள அகதிகளின் சந்தையை பயன்படுத்தி கொள்ளை இலாபம் அடித்து செழிப்புற்று நிற்கும் வணிக முதலாளிகளின் சுரண்டல் விஸ்தரிப்பு தேவைகள், சிறீலங்காவில் தங்கி நிற்கும் பெரும் தமிழ் தரகு முதலாளிகளின் சர்வதேச வல்லரசிய தொழில், வணிக வலைப்பின்னல் தொடர்பு கொண்ட இவர்கள் அதிகமாகவும், புதிதாகவும், சிறீலங்காவில் முதலீடு செய்துள்ளனர். பல்தேசிய, தேசங்கடந்த நிதி நிறுவனங்களில் இவர்களின் மூலதனங்கள் இணைக்கப்பட்டிருக்கிறது. தேசிய எல்லைகளை கடந்து தொழில், வணிகக் கூட்டுக்களை கொண்டுள்ளதும், அன்னிய மூலதனங்களுடன் தம்மை இணைத்துக் கொள்ளவும், புதிய தொழில், வணிக வாய்ப்புக்களை உருவாக்கவும் சுரண்டிக் கொழுக்கவும் தயராகவுள்ள தமிழ் தேசிய இனத்திலுள்ள அனைத்து முதலாளிகளும், மூலதனங்களும் அய்க்கிய இலங்கை கட்டமைவுக்குள் ஒரு சமாதானத்தை செய்து கொள்ளும்படி புலிகள் உட்பட தமது வர்க்க பிரதிநிதிகளை கோருகின்றனர். இதுவரை கால போராட்டத்தின் மூலம் பெற்ற பலாபலன்களை தாம் அடைய சிறீலங்கா அரசுடன் - பேரம் பேசும் ஆற்றலை கொண்டு வடக்கு, கிழக்கில் தமது அதிகாரங்களை தீர்மானிக்க, தமதாக்க, பேணக் கூடிய ஒரு ''சமாதான சரணடைவுக்கு'' தயாராக இருக்கின்றனர். இதை தமது வர்க்க நலன் பேணும் இயக்கங்கள், கட்சிகள் மூலம் வெளியிட்டு வருகின்றனர். புலிகளும் இயக்க தலைமையில் ஏற்பட்டுள்ள உள்மோதலாலும், மக்களுக்கும் தமக்கும் இடையில் வளர்ந்து வரும் இடைவெளியை கண்டும், சர்வதேச மாற்றங்களை பார்த்தும் சந்திரிகாவின் வெற்றி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் என நம்பி தாங்களாகவே முன்வந்து மோதலை நிறுத்தி பேச்சு வார்த்தைக்கு சைகை கொடுத்தனர்.

*19-9-94*-இல் புலிகளின் அறிக்கை ''இலங்கை இனப் பிரச்சனைக்கு தீர்வுகாண தமிழீழக் கோரிக்கையை கூட நாங்கள் கைவிடத் தயாராகவுள்ளோம். ஆனால் அதற்கு ஈடாக, தமிழர்களின்



பிரதேசங்களுக்கு தன்னாட்சி தந்து அதை இலங்கை அரசியல் சட்டத்தாலும் சர்வதேச சமூகத்தாலும் அங்கரிக்க வேண்டும்'' என்றது. சந்திரிகாவின் யுத்த நிறுத்த, சமாதான திட்டத்துக்கு புலிகள் ''புலிகளின் தாகம் தமிழீழ தாகம்'' என்ற இலட்சிய கோரிக்கையையும் கைவிட்டு கீழ் இறங்கிவரத் தயாராக இருந்ததை தெளிவு படுத்தியது. ''தமிழ் மக்களின் விருப்பம்'' என்ற பெயரில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் சமரச நிலைப்பாட்டை முன்வைத்து முழுத் தமிழீழ தேசிய இனத்தின் நிலைப்பாடாக பிரச்சாரம் செய்தனர். குறைந்தபட்சம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைக் கூட கோரவில்லை. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் சமரசமடைந்த, அடிமைப்பாட்டுவாதிகளாக மாறிய தமிழ் இயக்கங்களை, தமிழீழக் கோரிக்கையை கைவிட்ட துரோகிகளாக புலிகள் குற்றம் சாட்டினர், தாங்கள் மட்டுமே 1977 தமிழீழ மக்கள் வாக்களித்தபடி 'தமிழீழ இலட்சியத்துக்கு' நிற்பதாக கூறினர். இன்று தாங்கள் தமிழீழக் கோரிக்கையை கைவிட தயாராக இருக்கையில் ''தமிழ் மக்கள் விரும்புவதாக'' எடுத்தியம்பி தப்பித்துக் கொள்ள முயல்கின்றனர். இப்போது மீண்டும் மக்களின் நலனுக்காக மோதலில் இறங்கியுள்ளதாக வேறு கூறுகின்றனர். இது தமிழ் முதலாளி வர்க்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமது ஜீவாதாரமான ஊசலாட்ட கொள்கைகள், நடைமுறைகள் எல்லாவற்றுக்கும் அனைத்து தேசிய இன மக்களையும் பொறுப்பாக காட்டும் கடைக்கோடித்தனமான சந்தர்ப்பவாத அரசியல் அன்றி வேறு ஒன்றும் அல்ல.

சந்திரிகா அரசு எப்படி சிங்கள தொழிலாளி வர்க்கத்தின், பரந்துபட்ட மக்களின் நலனுக்கு சேவை செய்யும் சமாதான வழிமுறைகளை, தமிழ் தேசிய இன மக்களுக்கு சமத்துவம் அளிக்கும் சமாதான திட்டத்தை ஏற்படுத்த முடியாதோ, அதேயளவுக்கு புலிகளாலும் தமிழ் தொழிலாளி வர்க்கத்தின், பரந்துபட்ட மக்களின் நலனுக்கு உதவும், தேசிய ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் போராட்டத்தை நடத்த முடியாது. இவர்கள் தாங்கள் தாங்கள் சார்ந்த முதலாளி வர்க்கங்களின், சர்வதேச எசமானர்களின் நலன்களுக்கும் சேவை செய்யக்கூடிய வகையில் சமாதானத் திட்டங்களையும், போராட்டத் திட்டங்களையும் வகுக்கவும், நடைமுறைப் படுத்தவும் மட்டுமே முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சந்திரிகா அரசாங்கத்தின் சூழ்ச்சிகள்

யுத்தத்தை நிறுத்துவோம்! சமாதானத்தை அடைவோம்! என்று கூறுவதை தவிர சந்திரிகா அரசால், இதுவரை சிறீலங்கா அரசு கடை பிடித்து வந்த - வரும் தமிழ்த் தேசிய ஒடுக்குமுறையை முடிவுக்கு கொண்டு வர, தமிழீழ மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை தீர்க்கும் வகையிலான உருப்படியான கொள்கைகள் - நடைமுறைகள் இதுவரை வெளிப்படுத்தவில்லை. ''பெரும்பான்மை சிங்கள மக்களின் உரிமைகளை பாதிக்காத வகையில், அய்க்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சனைக்கு தீர்வை தமிழ் மக்களுக்கு கொடுப்போம்'' இதுவே சந்திரிகா அரசின் இனப்பிரச்சனையை கையாழ்வதிலுள்ள இனவாத பார்வையை தெளிவுபடுத்த போதுமானது. **தமிழ்த் தேசிய இன மக்களின் போராட்டம், சிங்கள தேசிய இனத்தின் உரிமைகளை பறித்து தங்களுக்கு தர கோருகின்ற போராட்டமல்ல** சிங்கள தேசிய இனத்துக்குள்ள அத்தனை உரிமைகளும், தமிழ்த் தேசிய இனத்துக்கு வேண்டும் தங்கள் மீதான அனைத்து வகை தேசிய ஒடுக்குமுறைகளும், ஒடுக்குமுறை யுத்தமும் நிறுத்தக்கோரி எதிர்த்து நடத்தப்படும் போராட்டமாகும். இப்போராட்டத்தை தமிழ்த் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் இன்று தலைமை தாங்கி முன்னேடுத்து செல்கிறது. இதற்காக தேசிய ஒடுக்குமுறையின் உண்மைச் சொரூபத்தை தேசியப் போராட்டத்தின் நியாயத்தை யாரும் மறுத்துவிட முடியாது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம், போராட்டத்தை முன்னேடுத்த குட்டி முதலாளிய, முதலாளிய இயக்கங்களின் தவறான வழிகாட்டுதலால், இயக்கங்களுக்கு இடையிலான அரசியல் தலைமைப் போட்டி, முரண்பாடுகளால், மோதல்களால், திசைவிலகல்களால், மக்கள் மீதான் அராஜக அணுகுமுறைகளால், காட்டிக் கொடுப்பால், புலிகளின் தனி இயக்க ஏதேச்சதிகாரத்தால் போராட்டத்தின் அகநிலையில் பின்னடைவுகளும், தேக்கங்களும் ஏற்பட்டுள்ளது. இன்று புலிகள் மட்டுமே அரசை எதிர்த்த ஆயுதப் போராட்டத்தில் உள்ளனர். இவற்றை கணித்துக் கொண்ட சிறீலங்கா அரசும், சந்திரிகாவும் தமிழீழ தேசியப்



போராட்டத்துள் நிலவும் அகநிலை தேக்கங்களை மேலும் ஆழப்படுத்தும் முயற்சியிலும், மறுபுறம் புலிகளின் தலைமையை எவ்வழியிலேனும் சமரசவழிக்கு கொண்டு வந்து சில எலும்புத் துண்டு அதிகாரங்களை கொடுத்து தமிழீழ தேசிய போராட்டத்தை உள்ளுக்குள்ளாகவே அமுக்கிவிட முயல்கிறது. தமிழர்களை கொண்டு தமிழ் தேசிய இனப் போராட்டத்தை நசுக்க முற்படுகிறது. இது அரசு சார்பு தமிழ் இராணுவக் குழுக்கள் மூலம் ஏற்கனவே பரிட்சார்த்திக்கப்படுகிறது. புலிகள் போன்ற மிகப்பெரிய இயக்கத்தை இராணுவத்தை அரசு கட்டமைவுக்குள் தமிழ் பகுதிகளை பாதுகாக்கும் இராணுவமாக, பெரிசாக மாற்றி விட்டால், தமிழீழ மக்களின் தேசியப் போராட்டத்தை வர்க்க போராட்டத்தின் ஒடுக்குவதில் இனவாத அரசுக்கும், வல்லரசுகளுக்கும் மிகப்பெரும் வெற்றியாக அமையும், இன்று உலகளவில் நீண்ட நெடிய வரலாறுள்ள தேசியப் போராட்டங்களை கூட, போராடும் தேசிய இன மக்களின் பக்கம் உள்ள முதலாளிய தலைமைகளை வழிக்கு கொண்டு வருவதன் மூலம், பிற்போக்கு இனவாத பாசிச அரசுகளும், வல்லரசுகளும் அத்தேசியப் போராட்டங்களை அமுக்கிவிடும் திசை திருப்பி விடும் தந்திரத்தை கையாழ்கின்றனர். பாலஸ்தீனமும், தென்னாபிரிக்காவும் இறந்த உதாரணங்கள். அத்தகைய தந்திரங்களையும், சரணடவுகளையும், மீறி மக்களின் போராட்டங்கள் தொடரும் என்பதற்கும் அவை உதாரணங்கள்.

ஒருவேளை புலிகளை வழிக்கு கொண்டுவர முடியாமல் போயின் வல்லரசுகளின், பிற்போக்கு பிராந்திய அரசுகளின் ஆதரவுடன் அங்கீகரிப்புடன் சீறிலங்கா அரசு பெரும் பொருளாதார தடையை விதித்து பட்டினிச்சாவுகள் மூலம் மக்களையும், உக்கிரமான ஒடுக்குமுறை யுத்தத்தின் மூலம் புலிகளையும், தமிழீழ போராட்டத்தையும் ஒடுக்க முயலும். இன்று 'புலிகள் மோதல் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதை கண்டித்தும் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு திரும்புமாறும், தமிழ் மக்களின் சமாதான விருப்பங்களுக்கு எதிராக செயற்படக்கூடாது' என்றும் அய்ரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, இந்தியா, நேபாளம் என்பன அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பது கண் கூடு, சர்வதேச நாடுகளின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதரவை தனது பக்கம் திருப்பியது இனப் பிரச்சனையை கையாழ்வதில் சந்திரிகாவுக்கு கிடைத்த வெற்றி என்கிறார்கள். சர்வதேசிய அழுத்தங்களையும் மீறி புலிகள் போராடுவார்களா? பொறுத்திருக்க வேண்டும்.

புலிகளை பேச்சு வார்த்தை வர தேசியளவிலும், உலகளவிலும் அழுத்தம் கொடுக்கும் முயற்சிகள் தேர்தலுக்கு முன்பே தொடங்கியவைதான். இலங்கையில் சமாதானம் ஏற்பட உளப்பூர்வமாக விரும்பும் எல்லா இன, மத மக்களையும் இத்தகைய அழுத்த முயற்சிகளுக்கு பயன்படுத்த சிறீலங்கா அரசும், அரசு சாரா நிறுவனங்களுக்கும் நிதி உதவி வழங்கும் அன்னிய நிதி நிறுவனங்களும் வல்லரசு நாடுகளும் சந்திரிகாவின் சனாதிபதி தேர்தல் வெற்றியை தொடர்ந்து திட்டம் தீட்டினர். இதற்கு இலங்கையிலுள்ள அன்னிய நிதியில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வ குழுக்கள், சமூக ஆய்வு நிறுவனங்கள், மதநிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள் இவற்றின் உயர்பீடங்களுடன் பேசி ''இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தும் மாபெரும் பேரணி'' ஏற்பாடு செய்யப்பட்டது. (அந்நிய நிதியைச் சார்ந்து இயங்கும் இவ் நிறுவனங்கள் குழுக்களில் உண்மையில் நாட்டு நடப்பின் நலனை உணர்ந்து உணர்வு பூர்வமாக சமாதானத்தை அமைதியை விரும்பும் சக்திகள் பெருமளவில் இருக்கிறார்கள். ஆனால் இவற்றின் உயர் பீடங்கள் நிதி வழங்கும் நிறுவனங்களின் கட்டளைப்படி, பணத்துக்காக சமாதானம், அமைதியை கோருபவர்கள் என்பதை தெளிவாக புரிய வேண்டும்)

இவ்வாறு 40 நிறுவனங்கள், குழுக்களின் முன்முயற்சியில் நடத்தப்பட்ட அன்று மட்டும் 'கொழும்பு நகரை சமாதானத்தின் நகரமாக அலங்கரித்த பேரணி!' பொதுக்கூட்டம், சந்திரிகாவுக்கும் புலிகளுக்கும் வேண்டுகோள் விட்டு நடத்தப்பட்டது. அடுத்து மக்கள் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் 'வாசுதேவ நாணயக்காரா'' தலைமையில் ஒரு தென்னிலங்கை சமாதானக் குழு மாசி 16-இல் கொழும்பில் இருந்து வவுனியாவுக்கும், பின் புலிகள் அனுமதியுடன் யாழ்ப்பாணத்துக்கும் வந்தது. சந்திரிகாவின் சமாதான முயற்சிகளுக்கு புலிகள் இணைக்க வேண்டும்



என்றளவுக்கு நாடுதழுவியளவில் மக்களுக்கு ஒரு மன உந்து தலை கொடுக்க இவை உதவின, நம்பச் செய்தன. அடுத்து ரோம் நகரில் இருந்து சமாதானத்தை கொண்டு வந்த இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வருகை பெரும் பிரச்சாரத்துக்குட்பட்டது. புலிகளின் அனுமதி, முழு ஒத்துழைப்புடன் 4000 வடக்கு மக்கள் கூட பாப்பரசரின் சமாதான பிராத்தனையில் பங்கு கொண்டனர்.

இவை எல்லாம் சந்திரிகாவின் சமாதான பேச்சு பற்றி யாரும் சந்தேகம் கொண்டு விடாதபடி, இந்த சமாதான சந்தடியில் அரசு எப்படியான எலும்புத்துண்டு சமாதானத்தை ஏற்படுத்த முனைந்தாலும், புலிகள் அதை ஏற்றுக் கொள்வதுடன், போராட்டத்தின் கதையை சமாதான தீயில் எரித்துவிட சந்திரிகா அரசு முயன்றது.

புலிகள் உடன்பட தவறினால், புலிகள் உட்பட தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் அனைவரும், சமாதானத்தின், மக்களின் விரோதிகள் ''பயங்கரவாதிகள், தீவிரவாதிகள்'' என அரசு பிரச்சாரம் செய்யும் பயங்கரவாதிகளை ஒடுக்குவதாக கூறி தமிழீழ மக்களின் உண்மையான நண்பனாக சந்திரிகா அரசு தன்னைக் காட்டிக் கொள்ள முடியும் என நம்பியது. உண்மையில் சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் இந்த பிற்போக்கு கூட்டத்தால் தூண்டிவிடப்பட்ட சமாதானம் கோரும் அலைக்குள் புலிகள் திக்குமுக்காடியது உண்மையே. அதேவேளை சந்தர்ப்பமும், சமாதான திட்டத்தின் தரமும், புலிகளின் குறைந்தபட்ச கோரிக்கைகளை அடைய உதவியிருந்தால், பிரபாகரனின் கூற்றுபடி ''தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வு கிடைத்தால் நாங்கள் யுத்தத்தை கைவிடத் தயாராக இருக்கிறோம்'' புலிகளும் இந்த சமாதான தீயில் கருகியிருப்பார்கள்.

புலிகளின் அதிகாரத்தை வடக்கில் தொடர்வதற்கும் பலப்படுத்தவும், கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கும், வடக்கு கிழக்கு பகுதியின் ஆட்சியதிரகாரத்தை தீர்மானிப்பதில் உரிமையும், தமிழ் முதலாளி வர்க்கத்தினர் இதுவரை கால போராட்டத்தின் பலாபலன்களை பெற்றுக் கொள்ளும் 'சுயாட்சி' திட்டத்தையாவது சந்திரிகா வழங்க வந்திருந்தால் புலிகளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடன்பட்டிருப்பார்கள். கொரில்லா இயக்க வரலாற்றில் மட்டுமல்ல சமாதானத்தின் நோபல் பரிசு கூட புலிகளுக்கு கிடைத்திருக்கலாம். சந்திரிகா அரசு இந்தளவுக்கு கூட தயாராக இருக்கவில்லை' இதற்கு பதில் அரசு வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மூலம் மக்களின் ஆதரவை அரசு வயப்படுத்த பெரும் சமூக நலத்திட்டங்களை அறிக்கைகளின் மட்டும் வழங்கினார். நடைமுறையில் மக்கள் சிறிது மூச்சு விடும்படியான நடவடிக்கைகளை எடுத்தார். இதை புலிகள் தடுத்தால் புலிகளுக்கும் - மக்களுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்த கணக்கு போட்டார். இதைப் புரிந்து கொண்ட புலிகள் மக்களிடம் தம்மை மேலும் நெருக்கமாக்கி காட்ட மக்களின் உடனடிப் பிரச்சனைகளை தீர்க்க கோரினர், சந்திரிகா அறிக்கையில் விட்டதை விட கூடுதலாக

— பொருளாதார தடையை முழுவதுமாக நீக்க வேண்டும்

— மீன்பிடிக்க கடல் வலைய தடையை முழுவதுமாக நீக்க வேண்டும்.

— பூனகரி - சங்குப்பட்டி பாதையை மக்களுக்கு திறந்து விட வேண்டும்.

— மோதல் நிறுத்தத்தை பூரண யுத்த நிறுத்தமாக்க முயல வேண்டும்.

இக்கோரிக்கைகள் அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளில் முக்கிய இடம் பிடித்துக் கொண்டது. இக்கோரிக்கைகளின் முடிவுகள் குறித்து பல இழுப்பறிக்கு பின், யார் முறித்துக் கொண்டாலும் அவர்களை சமாதானத்தின் பகைவர்களாக மக்கள் கருதிவிடுவார்கள் என்ற பயத்தில் சில விஷயங்களில் உடன்பாடு கண்டனர். மோதல் நிறுத்த ஒப்பந்தம், அமுலுக்கு வந்தது மோதல் நிறுத்த கண்காணிப்பு குழு, அரசு, புலி, வெளிநாடு முறையே (2 + 2 + 1 = 5 இதில் கனடா, நெதர்லாந்து, நோர்வே பங்கு கொண்டன) நிறுவப்பட்டது. இக்குழு சரியாக இயங்கவில்லை. மோதல் நிறுத்தத்தை மீறிய சில சம்பவங்களும் கிழக்கில் நடந்தது.

அரசு 4700 கோடி ரூபாய் வடக்கு கிழக்கு புனர் வாழ்வுக்கு ஒதுக்குவதாகவும், இது தெரு சீரமைப்பு, மின்சாரம், நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி தேவைக்கு எனவும் அறிக்கை விட்டது. இப்பணத்தில் முக்கால்வாசி உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கியும் வழங்கும் என்றது. வரவு செலவு திட்டத்தில் 110 கோடி அகதிகள் புனர்வாழ்வுக்கும், வடக்கு கிழக்கு மறுசீரமைப்புக்கு 76.50 கோடியும் ஒதுக்கியுள்ளதாக தெரிவித்தது. மக்கள் வங்கி வடக்கு விவசாயிகளுக்கு 3 கோடி ரூபாய் கடன் வழங்கவதாக அறிவித்தது. வடக்கு கிழக்கில் சமாதானம் ஏற்பட்டால் அய்ரோப்பிய அமெரிக்க நாடுகள் தொழில், வணிக முதலாளிகள் இவர்களின் சுரண்டல் பொது நிதி நிறுவனங்கள் எல்லாம் அதாவது உள்நாட்டு மக்களை, உலக மக்களை சுரண்டி கொள்ளையடிக்கும் தேசிய ஒடுக்குமுறையும் மக்கள் விரோத, தேச விரோத கூட்டம் உதவ தயாராக முன் வந்தது. இவை எல்லாவற்றையும் புலிகளும் மனதார வரவேற்றனர். தமிழ் முதலாளி வர்க்கமும் அவற்றின் அரசியல் பிரதிநிதிகளும் சிறீலங்கா அரசின், சிங்கள தரகு முதலாளிகளின் தேசிய ஒடுக்குமுறை பற்றியும் அவர்களை எதிர்த்த போராட்டம் பற்றி மட்டுமே பேசினார்கள். வல்லரசியங்களின், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் தேசிய ஒடுக்குமுறை பற்றி பேசுவதோ எதிர்ப்பதோ இல்லை. இத்தகைய தேசவிரோத உலக கொள்ளைக்கார கூட்டத்தின் உறவு வைத்துக் கொள்ளவே செய்கிறார்கள் - விரும்புகிறார்கள். அவர்களது தமிழீழ தாகம் அப்படியாகவே இருக்கிறது. அப்படி மட்டுமே இருக்க முடியும்.



யாசிர் அரபாத்தின் பாலஸ்தீனத்தை சமாதான வழிக்கு கொண்டு வந்த இஸ்ரேலும், வல்லரசியங்களும், மத்திய கிழக்கு அபிவிருத்தி வங்கியை நிறுவியதும், அதன் மூலம் பாலஸ்தீன மக்களின் பிரச்சனையை தீர்ப்பதாக கூறியதும், பிரிட்டன் வல்லரசின் 75 மில்லியன் பவுண்டு அபிவிருத்தி திட்டமும், நமக்கு கண்முன்னே தெரியும் பாடங்கள். 5 ஆண்டு திட்டத்தில் வடக்கு கிழக்குக்கு 20 மில்லியன் பவுண்டு அபிவிருத்திக்கு வழங்க அறிக்கைவிட்ட பிரிட்டன் வல்லரசின் உண்மையான திட்டம் என்ன என்பது நமக்கு தெரியும். வடக்கு கிழக்கை வல்லரசுகள் கட்டுக்குள் கொண்டு வரும் திட்டமே.

சிறீலங்கா அரசு புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் 'தேசிய இளைஞர் சேவை அமைப்புகளை' நிறுவ முயன்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கில் அரசின் கட்டுப்பாட்டை இழந்த பொது சமூக நிறுவனங்களை, அதன் அதிகாரிகளை (இவற்றின் அதிகாரிகள் புலிகளின் கொள்கைகளை அமுல்படுத்தி வந்த அரசிடம் சம்பளம் வாங்கி வந்தவர்கள்) நேரடியாக அரசு கட்டுபாட்டுள் கொண்டு வரும், மறு சீரமைக்கும் பணிகளை, இராணுவ புலனாய்வு அதிகாரிகளை கூட உள்ள அனுப்பியது. அரசு ஒருபுறம் புலிகளுடன் பேசிக் கொண்டு புலி எதிர்ப்பு இயக்கங்களாக, அரசு படைகளுக்கு சேவகம் செய்பவர்களாக இயங்கும் TELO, PLOT, ENDLF, EPDP போன்றவற்றுடன் மற்றும் TULF, EPRLF உடன் நெருக்மான உறவை வைத்துக் கொண்டு இருந்தது. புலிகள் வழிக்கு வராவிட்டால் இவர்களுடன் பேசி சமாதானம் ஏற்படுத்தி எப்படியும் சந்திரிகாவை சமாதானத் தலைவியாக்கிவிட முயன்றது. இவ் அமைப்புக்களை கொண்டு புலிகளையும், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் தேச பக்த புரட்சிகர சக்திகளையும் நசுக்குவதற்கான மோதலில் பாவிக்க முயன்று வருகின்றது. உதாரணமாக மன்னார், வவுனியா, கிளிநொச்சி, கிழக்கு பகுதிகளில் இவ் இயக்க முன்னாள், இந்நாள் போராளிகளையும், தமிழ் இளைஞர்களையும் பொலீசு படையில் சேர்க்கும் வேலைகள் மும்முரமாக நடக்கிறது. புலிகள் இணங்கி வந்தால், மாற்று தமிழ் அமைப்புக்களை அரசுதானே கட்டுப்படுத்தும் அல்லது புலிகளை கொண்டு கட்டுப்படுத்தும் முறையிலன குறிப்பான தந்திர தயாரிப்புக்களை செய்து வந்தது. இனப் போராட்டங்களை திசை திருப்புவதில், சீரழிப்பதில், யுத்தத்தை கூட்டி - குறைப்பதில், மக்களுக்கு போராட்டத்தின் மேல் வெறுப்பை ஏற்படுத்துவதற்காக வல்லரசுகளும், பிற்போக்கு இனவெறி அரசுகளும், போராடும் தேசிய இனத்தில் உள்ள போராட்ட இயக்கங்களை, மத பிரிவுகளை, சாதிப் பிரிவுகளைப் பயன்படுத்தி முட்டி மோதவிடும் சூழ்ச்சிகளை கையாழ்வது உலக நடப்பாக வுள்ளது. எதிரியின் தந்திரங்களுக்கு முலாளித்துவ சக்திகள் மத அடிப்படைவாத சக்திகளை உளப்பூர்வமாகவே - நேரடியாக - மறைமுகமாகவோ உதவி வருகின்றது.

புலிகளுடன் அல்லது மற்றய தமிழ் துரோக இயக்கங்களுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை செய்து கொண்டு தேசிய ஒடுக்குமுறைக்கு, சுரண்டல் கொள்ளைக்கு எதிராக போராடும் மக்களை தமிழ் பொலீசு, இராணுவத்தை கொண்டே ஒடுக்கிவிட சந்திரிகா முயல்கிறார். பாலஸ்தீன மக்களின், தென் ஆபிரிக்க மக்களின் போராட்டத்தில் இதுபோன்ற நிலைமை உருவாகி விட்டது.



அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளில், கடந்த 12 வருட கால யுத்தத்தை நிறுத்துவதற்கு தேவையான, யுத்தத்தை தோற்றுவித்த தேசிய இனப்பிரச்சனையின் அடிவேர்களை களைவதற்கான அரசியல் தீர்வு பற்றி அதற்கான திட்டங்கள் பற்றி பேசப்படவில்லை. அரசு வடக்கு, கிழக்கு மக்களின் உயிர் வாழ்வு பிரச்சனைக்கு 'பிச்சை' போடுவதன் மூலம் ஏமாற்ற முயன்றது. 'பாராளுமன்ற தெரிவுக்குழு' 'அரசியல் அமைப்பு திருத்த குழு' தீர்வை வைக்கும் என நழுவிக் கொண்டது. ஆனால் இரு பகுதியும் சிறு அளவிலான புனர்நிர்மான புனரமைப்பு வேலைகளில் இணக்கத்துக்கு வந்தனர். அதே வேளை இருபகுதியும் தங்களுக்கு இடையில் நடந்து வந்த ராஜதந்திர யுத்தத்தை, உண்மையான இராணுவ யுத்தமாக மாற்றுவதற்கான தயாரிப்புக்களிலும் பெரும் கவனம் செலுத்தி வந்தனர். பிரபாகரன் நேரடியாக இதை ஒப்புக் கொண்டார். அரசு யுத்தத்துக்கு தயாராகிறது. எனவே தாங்களும் தயாராக வேண்டியது அவசியம் என்றார். ஆரம்பித்தில் இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சிகளை இராணவ தலைப்பீடம் குலைத்துவருவதாக சந்திரிகா வெளிப்படையாக விமர்சித்து தான் சமாதானத்தின் மிகப் பெரும் தலைவியாக, இனவாத இராணுவ தலைமைக்கு எதிரானவராக காட்டி மாற்றம் செய்வதாக மக்களை ஏமாற்றினார். உண்மையில் யூ.என்.பி.க்கு ஆதரவமான இராணுவ தலைமைப் பீடத்தை, தனக்கு சார்பான இராணுவ தலைப்பீடமாக்கும் முயற்சிகளையே செய்தார். சிறீலங்கா அரசின் கொள்கைகளை தீர்மானிப்பதில், அமுல்படுத்துவதில் இராணுவ தலைப்பீடத்தின், அதிகார வர்க்கத்தின் பங்கு மிக முக்கியமானது. அன்று இராணுவ தலைமைக்கும் - தனக்கும் புலிகளை கையாழ்வதில் பெரிய முரண்பாடு இருப்பதாக கூறிய சந்திரிகா இன்று இராணுவ தலைப்பீடத்தின் கணிப்பீடு சரி என்பதன் அர்த்தம் என்ன? புலிகளை ஒடுக்க இலங்கை இராணுவத்தால் முடியுமா? "நிச்சயம் இந்திய அமைதிப் படை முயற்சித்ததும் அதற்குதான். யுத்தம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று தீரமானித்தபின் என் அரசு பின்வாங்காது! முந்தைய அரசு போல் சண்டையிட இராணுவத்தை அனுப்பிவிட்டு, புலிகளு டன், தனியாக பேரம் பேசுவது நடக்காது'' என்கிறார். தனக்கு நம்பிக்கையான இராணுவ தலைமையை ஏற்படுத்திவிட்டார்.

கிளிதட்டு விளையாட்டில் ''பூட்டு போட்டு பூட்டுவது போல்'' சமாதானப் போட்டியில் சந்திரிகா பூட்டு போட்டார் புலிளுக்கு.

புலிகளுக்கும், புலிக்குப் பின்னால் உள்ள தமிழ் முதலாளி வர்க்கத்துக்கும் சந்திரிகாவின் பூட்டை எப்படி உடைப்பது, ஒன் றில் சந்திரிகாவின் சமாதான சதி முயற்சிகளின் சிக்குண்டு தங்கள் தலைமையில் 12 வருட யுத்தம் மூலம் வடக்கில் தாம் நிறுவிக் கொண்டுள்ள கட்டுப்பாட்டை, அதிகாரத்தை எல்லாம் கைவிட்டு அரசின் எலும்பு துண்டு தீர்வுகளை ஏற்று சமரசமடை வதா? அல்லது விரைவில் போர் நிறுத்தத்தை உடைத்து தங்கள் கட்டுப்பாட்டு பகுதியை பேணிக் கொண்டு சந்திரிகாவுடன் பேரம் பேசக்கூடிய, சந்திரிகாவை கீழ் இறங்க வைக்க கூடியஎள வுக்கு யுத்தத்தை தொடர்வதா, ஒன்றில் காயும் பழமும் இல்லை பூட்டை உடைக்க மோதுவது. இதன் முதல் வெளிப்பாடுதான். புலிகள் அரசுடன் பரிமாறி வந்த கடிதங்களை வெளியிட்டது. சந்திரிகாவின் வெளிநாட்டு மத்தியத்துவ (பிரான்சு) கோரிக் கையை நிராகரித்தது. வெலி ஓயா பகுதியில் சில மோதல் நடவ டிக்கைகளை பரிட்சார்த்தித்தது.

- ☆ வடக்கின் மீதான பொருளாதார தடையை முற்றாக நீக்க வேண்டும்.
- ☆ கடல் வலைய தடைச்சட்டம் முற்றாக இரத்து செய்ய வேண்டும்.
- ☆ பூனகரி இராணுவமுகாம் மூடப்பட வேண்டும்.
- ☆ கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாட உரிமை வேண்டும்.

இக்கோரிக்கைகள் அரசு முழுமையாக ஏற்காது. முழுமை யாக நடைமுறைப்படுத்தாது என்றாலும் இதைக் காட்டியபடி புலி தொடங்கும் மோதல் நிறுத்த மீறல்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமக்கு ஆதரவை பெற முடியும் என நம்பியது.



அரசின் பதிலை கேட்டதுடன் காலக்கெடுவும் விதித்தது. மாசி 28 வரை சித்திரை 10-இல் அரசு பேச்சு நடத்த முன் வந்தது. புலிகளும் சித்திரை 19 வரை காலக் கெடுவை மாற்றினர். புலிக ளின் காலக் கெடு பற்றி யாரும் அதிகம் அலட்டிக் கொள்ள வில்லை. ஆனால் சித்திரரை 10, 11 பேச்சு வார்த்தையில் அரசு முதலிரண்டு கோரிக்கைகளையும் சிறு மாற்றங்களுடன் ஏற்றது. மாற்றயதை வைகாசி 5 — 10-க்கும் இடைப்பட்ட பேச்சில் முடிவு செய்து கொள்ளலாம் என அறிவித்தது.

சித்திரை தமிழ், சிங்கள புதுவருட கொண்டாட்டாம். இலங்கை முழுவதிலும் மக்களால் கோலகலமாக கொண்டாடப் பட்டது. துப்பாக்கி சத்தம் இல்லாத புதுவருடம் என வடக்கு கிழக்கு மக்கள் சந்தோசத்தில் பூரித்தனர். யூ.என்.பி. காலத்தில் ''மக்களின் குரல்'' என்றEPDP உதவியுடன் புலிகளை துற்றுவதற் காக நடத்தப்பட்ட ஒலிபரப்பு. சந்திரிகா வந்ததும் ''தமிழ் விசேட ஒலிபரப்பு'' என்று மாறி சந்திரிகாவை புலிகளை இவர்க ளின் சமாதான முயற்சிகளை புல்லரிக்கும்படி பிரச்சாரம் செய்த்து. புத்தாண்டு நிகழ்ச்சிகளில் ''யுத்தராசி'' போய் ''சமா தான ராசி'' வந்ததாக மூடநம்பிக்கையுடன் புழுகியது. 5 நாள் போகவில்லை சமாதானராசி போய் யுத்தராசி மீண்டும் திருகோ ணமலையில் வெளிப்பட்டது. இப்போது வடக்கு கிழக்கு என எல்லா இடமும் பரவிவிட்டது. புலிகள் மோதலை தொடக்கினர்.

புலிகளின் ஒத்துழைப்பு இன்றி வடக்கு கிழக்கில் சமாதா னம் சாத்தியமில்லை, யார் விரும்பினாலும் விரும்பாவிட்டா லும் புலிகள் இன்றி வடக்கில் அமைதியை ஏற்படுத்த முடியாது என்ற சந்திரிகா இன்று ''புலிகள் தமிழ் மக்களை பிரதிநதித்துவப் படுத்தவில்லை, தமிழ் மக்களின் சமாதான உணர்வுகளை மதிக்க வில்லை'' ''சமாதானத்துக்கு புலிகளே முட்டுகட்டை'' என்கி றார். புலிகள் அல்லாத 12 தமிழ் அமைப்புக்களுடன் தமிழ் மக்க ளுக்கு சமாதானத்தை வழங்குவது பற்றி பேச தொடங்கியுள்ளது அரசு. இலங்கையிலும், உலகளவிலும் உள்ள தமிழ் மக்கள் இதற்கு ஆதரவு தர கோரப்படுகிறது. வடக்கு கிழக்குட்பட எல்லா மக்களும் புலிகள் மீண்டும் சமாதான வழிக்கு திரும்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழுத்தம் கொடுக்க அரசு கோருகிறது. இந்த தமிழ் அமைப்புகள் தான் (சிலவேளை இவற்றின் பொதுக்கூட்டணி) தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக சமாதானத்தின் தமிழ்த் தூதர்களாக காட்டப்படு வார்கள், மாற்றப்படுவார்கள்.

## யுத்தத்தை நிறுத்த - அமைதியை ஏற்படுத்த என்ன வழி

சந்திரிகா அரசு இனப்பிரச்சனையை தீர்க்க விரும்பினால், அதற்கு சமாதான வழியை நாடினால் அது செய்ய வேண்டியது தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தை, அதனது சதி நடவடிக்கைகளை முதலில் நிறுத்த வேண்டும். தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் தேசிய இனத்தின் அரசியல் கோரிக்கைகளை ஏற்று இனப் பாரபட்சங்களை நீக்கி தேசிய இன சமத்துவத்தை, சிங்கள தேசிய இனத்துக்குள்ளது போன்ற தேசிய அந்தஸ்தை தமிழ் தேசிய இனத்துக்கு வழங்ககூடிய, தமிழ்த் தேசிய இனத்தின் மீதான அரசியல், பொருளாதார, கலாச்சார ஒடுக்குமுறைகளை அரசியல் சட்ட ரீதியில், நடைமுறையில் நிறுத்தக்கூடிய அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். ஆனால் சந்திரிகா மட்டுமல்ல சந்திரிகாவின் அம்மாவும், மக்கள் கூட்டணி அரசும் கூட அதை செய்ய தயாரில்லை. அது அவ்வளவு இலகுவானதும் அல்ல. தமிழ்த் தேசிய இனமக்கள் தங்கள் மேல் நடத்தப்பட்டு வந்த தேசிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஆரம்பம் முதலே சமாதான வழியில் போராடி வந்திருக்கிறார்கள். சமாதான வழிகளும், போராட்டங்களும், கோரிக்கைகளும் மாறி மாறி வந்த இனவாத ஆளுங்கட்சிகளினால் அரசால் நிராகரிக்கப்பட்டு அடக்கியொடுக்கப்பட்டது. இதன் பின்னரே தேசிய ஒடுக்குமுறையை இல்லாதொழிப்பதற்கான அரசியல் கோரிக்கையை யுத்தத்தின் மூலம் வென்றெடுக்க நிர்பந்திக்கப்பட்டு யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இப்போராட்டங்களை கொம்யூனிசக் கட்சி தலைமை வழிகாட்ட தவறியது. குட்டி முதலாளித்துவ வர்க்கம் தனது வர்க்க தலைமையில் நடத்தி வருகிறது. இது தானே கடந்த 12 வருட யுத்த வரலாறு, போராட்ட வரலாறு தமிழ் மக்களின் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான அரசியல் கோரிக்கை யுத்தத்தின் மூலம் வளர்க்கப்பட்டிருக்கிறது. இக்கோரிக்கை



களை அரசியல் ரீதியாக தீர்த்து வைப்பது பற்றி சித்திப்பது, பேசுவதை விட்டுவிட்டு ''யுத்தமா? சமாதானமா?'' என்ற விவாதத்தை உள்நாட்டிலும் உலகளவிலும் பிரச்சாரப்படுத்துகிறது சந்திரிகா அரசு. உண்மையில் 1985 ஜே. ஆரின் ''யுத்தம் என்றால் யுத்தம். சமாதானம் எல்லாம் சமாதானம்'' இதற்கும் சந்திரிகாவின் இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கும் இடையில் ஆழமான வித்தியாசம் கண்ணோட்டத்திலும் நடைமுறையிலம் இல்லை. தமிழ் மக்களின் இதுவரை கால போராட்டத்தை, தியாகத்தை, அதன் தார்மீக நியாயத்தை அரசியல் கோரிக்கைகளை 'அற்புதமான சமாதான கடலில்' கரைத்துவிட கோருகிறார்கள்.

இன்று புலிகள் தமது தாகமான தமிழீழ கோரிக்கையை கைவிட்டு சுயாட்சி பற்றி பேச தயாராக இருக்கையில் சந்திரிகவோ மாகாண சபைக்கு மேல் எதையும் வழங்காத. மாவட்ட எல்லைகளை மாற்றியமைக்கும் தீர்வை, சமாதான அலையில் திணித்துவிட முயல்கிறார் (வடக்கு கிழக்கு இணைப்பைகூட டி.யூ.என்.எப். மற்றும் ஜாதக சிந்தனைய போன்ற கட்சிகள் எதிர்க்கின்றது.)

அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையானது 1948 அதிகார மாற்றத்துக்கு பிந்திய நவகாலனிய பொருளாதார, அரசியல் கொள்கைகளுடன், அரசு கட்டமைப்பு முறையுடன் பௌத்தமதவாத, சிங்கள இனவாத நிறுவனங்களுடன் பின்னி பிணைந்திருக்கிறது. அன்று தொட்டு இன்று வரையிலான பொருளாதார (திட்டமிட்டதானாலும் - தாராளமயமானாலும்) அரசியல் கொள்கைளும், அரசு கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களும், உள்நாட்டு தரகு முதலாளித்துவ - நிலப்பிரத்துவ வர்க்கங்களுக்கும் வல்லரசியங்களுக்கும், அவர்களது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பேணி பாதுகாக்கும் முறையில் கட்டப்பட்டுள்ளது. தொழிலாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும், தேசிய இனங்களையும் மோதவிடுவதில் குறியாக இருந்திருக்கின்றன. இத்தகைய தன்மை கொண்ட இலங்கை நவகாலனி சமூகமைப்பில் தேசிய ஒடுக்குமுறையும், இனப்பிரச்சனையும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இவற்றை மாற்றும் வகையில் சந்திரிகா அரசாங்கம் நாட்டின் பொருளாதார அரசியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்கைகளில் அரசு கட்டமைப்பு முறையில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. இலங்கை முழுவதையும் மேலும் மேலும் வல்லரசுகளின் உள்நாட்டு பெரும் தரகு கொள்ளையர்களின் வேட்டைக்காடக மாற்றும் உறுதிப்படுத்தும் கொள்கையையே கொண்டு வந்துள்ளார். தாராளமயமாக்கல், சர்வதேசியமயமாக்கல், ஏற்றுமதி மயமாக்கல் கொள்கைகளை உறுதியாக கடைபிடிப்பதாக கூறுகிறார். இவை இலங்கை நாட்டின் மீதான சுரண்டலை ஒடுக்குமுறையை, தமிழ் தேசிய இனத்தின் மேலான தேசிய ஒடுக்குமுறையை மேலும் கூர்மைப்படுத்தவே செய்யும் மாகாணசபை அதிகாரத்தின் கீழிருந்த வைத்திய சாலைகளை மத்தியரசு கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறார் (அதிகார பரவலாக்கம் பற்றியும் பேசுகிறார்) எனவே இனப் பிரச்சனைக்கு முற்றுபுள்ளி வைப்பதானது, சந்திரிகாவால் மட்டுமல்ல, குமாரரணதுங்கா, பண்டார நாயக்கா போன்றவர் உயிர்த்தெழுந்து வந்தாலும் முடியாது.

வல்லரசியமும் பாட்டாளி வர்க்க புரட்சியுமான இந்த சகாப்தத்தில் நவகாலனிய நாடுகளில் நிலவும் தேசியப் பிரச்சினையை தீர்ப்பது உண்மையான தேசிய விடுதலையை வெல்லவது என்பது புதிய சனநாயகப் புரட்சியின் பகுதியாக தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் நடத்திச் செல்லப்படுவதால் மட்டுமே முடியும். தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போரிடும் முதலாளித்துவ வர்க்கங்களின் தலைமையினால் தேசிய விடுதலையை வெல்வது என்பது வரலாற்று ரீதியில் காலம் கடந்த ஒன்றாகிவிட்டது.

இலங்கையில் புரட்சிகர தொழிலாளி வர்க்க கட்சியின் தலைமையில் புதிய சனநாயக புரட்சியின் பகுதியாக நடத்தப்படும் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் மட்டுமே தேசங்களின் சுதந்திரத்தை, சமத்துவத்தை, மக்களின் சனநாயகத்தை, விடுதலையை ஒன்று சேர இணைத்து செல்லக்கூடியதும், அதற்கான முரண்பாடற்ற சனநாயக கொள்கை தொழிலாளி வர்க்கத்திடம் மட்டுமேயுள்ளது. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை வல்லரசிய எதிர்ப்பு போராட்டமாக நடத்துகின்ற சக்தி நமக்கு மட்டுமே



யுள்ளது. ஆனால் இன்று பிரபல்யமான எந்த தேசிய விடுதலைப் பேராட்டங்களிலும் தொழிலாளி வர்க்க கட்சியின் தலைமையிலான தேசிய இன விடுதலைப் போராட்டம் தீர்மானகரமான பங்கை செலுத்துவதை காண முடியவில்லை. ஆசிய ஆபிரிக்க, லத்தின், அமெரிக்க நவகாலனிய நாடுகளில் தேசிய இனமுரண்பாடுகள் கூர்மை அடைந்த பகுதிகளில் புரட்சிகர தொழிலாளி வர்க்க கட்சி இல்லாத நிலை, அல்லது மிகப் பலயீனமான நிலையேயுள்ளது. தத்துவார்த்த ரீதியில், அரசியல் ரீதியில் மற்றும் அமைப்பாக்கல் கொள்கைகளில் புரட்சிகர தொழிலாளி வர்க்க கண்ணோட்டம் பலயீனமாகவுள்ளது. இவற்றில் தேசியவாத முதலாளித்துவ கருத்தாக்கங்களும், இடது தீவிர கண்ணோட்டங்களும் பலமாக இருக்கிறது. இலங்கையின் நிலமையும் இதுவே. இந்நிலைமையை மாற்ற, தமிழீழ, சிறீலங்கா பகுதிகளில் தொழிலாளி வர்க்க இயக்கம் தீர்மானகரமான போராட்ட சக்தியாக உருவெடுக்க எல்லா அரங்கிலும் கடுமையா முன் முயற்சியும் போராட்டங்களும் நடத்த வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையில் அதற்கான தீர்வை முன் வைப்பதில் அக்கோரிக்கை மேல் மக்களை அணி திரட்டுவதில், போராடுவதில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் நலன் சார்ந்த அரசியல் கோரிக்கைகளும், போராட்ட இயக்கங்களுமே தலைமைப் பாத்திரத்தை எடுத்து போராட்டத்தின் திசைவழியை தீர்மானித்து கொண்டிருக்கிறது. புலிகள் அல்லாத மற்றைய தமிழ் அமைப்புக்களை பொறுத்தவரை சிறீலங்கா அரசை எதிர்த்த போராட்டங்களை 1987-க்கு பின் கைவிட்டு அரசின் கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து கொண்டு தங்களை நிலை நிறுத்த மக்கள் மீது அராஜக நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர். தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்து தொடர்ந்து போராடும் அனைத்து வர்க்க சக்திகளையும் நசுக்க முற்படுகின்றனர். இவர்கள் தஞ்சம் அடைந்த மாகாண சபை திட்டத்தை கூட அமுல்படுத்த மறுக்கும் அரசை எதிர்த்து போராடதுள்ளனர். பாராளுமன்றத்தில், அறிக்கைகளில் குரல் எழுப்புவதுடன் தேசிய ஒடுக்குமுறைக்கு முற்றுபுள்ளியிடலாம் என நம்புகின்றனர். பிழைப்புவாத அரசியலில் ஆயுத குண்டர் படைகளை வைத்திருக்க கூடியவர்களாகவுள்ளனர். 87 ஒப்பந்தத்தில் தமிழ் மொழி, சிங்கள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மொழிக்கு சமமாக தேசிய மொழியாக அறிவிக்கப்பட்டது இன்று EPDP தலைவருக்கு செல்லும் அரசு கடிதங்களே சிங்களத்துள்ளது. (சிங்கள உதவியாளரை கொண்டு படித்து புரிந்து கொள்வார்) வவுனியா போக்குவரத்து பரிசோதனைச் சாவாடியில் வழங்கப்படும் படிவங்கள் கூட சிங்களத்திலுள்ளது. இதை படித்து, எழுத தமிழ் வாகன சாரதிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதை கேட்க, மாற்ற வக்கில்லாத தமிழ்த் தலைமைகளே இவை இவர்கள் அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளை காற்றில் பறக்கவிடும் சமரசப் பேச்சுக்கும், ஒப்பந்தங்களுக்கும் தயாராக இருப்பார்கள். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடுபவர்களை தனியாகவோ அரசுடன் கூட்டுச் சேர்ந்து அடக்கியொடுக்குவது மட்டும்தான் இவர்களது தொழில். இவர்கள் இந்தியரசின் தலையீட்டை நேரடியாகவும் மறைமுகமாகவும் கோருபவர்கள்.

அடுத்து புலிகளை எடுத்துக் கொண்டால், தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஒடுக்குமுறை எதிர்ப்பு போராட்டத்தில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கெட்டிப்பட்ட இயக்கமாக விளங்குகிறது. சிறீலங்கா அரசை எதிர்த்து தனது கோரிக்கைகளுக்காக ஆயுதப் போரை தொடர்ந்து நடத்துகின்றது. வடக்கில் யாழ்ப்பாண தீபகற்பத்தை தனது கட்டுப்பாட்டுள் வைத்துள்ளது. மற்றைய வடக்கு கிழக்கு பகுதிகளிலும் தனது அரசு எதிர்ப்பு இராணுவ நடவடிக்கைகளை நடத்தும் சக்தியை கொண்டுள்ளது. ''புலிகளின் தாகம் தமிழீழ தாகம்'' என்ற இலட்சிய கோசத்தை இன்று வரை பிரச்சாரப்படுத்தினாலும், மக்களின் சனநாயக உரிமைகளை நசுக்கியும், மாற்றுக் கருத்துள்ள இயக்கங்களை அழித்தும் புரட்சிகர சக்திகளை தடை செய்து, கைது செய்து தான் மட்டுமே ஒரே இயக்கம் என்று ஏதேச்சதிகார இயக்கமாக நிற்கிறது. தமிழீழ விடுதலை என்பது புலிகளின் கணக்குப்படி சிறீலங்கா அரசிடம் இருந்து மட்டுமே வல்லரசியங்களிடம் இருந்தல்ல 'வல்லரசிய எதிர்ப்பு என்பது தமிழீழ விடுலைக்கு நிபந்தனையாகவுள்ளது. ஆனால் புலிகளோ அதை ஏற்பதோ, நடைமுறைப்படுத்துவதோ, இல்லை. புலிகளின் தலைமையிலான தமிழீழம் என்பது வல்லரசியத்துடன் இணைந்த தமிழ் தரகு முதலாளி வர்க்கத்தின் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறையும் தொடரும் தமிழீழமாகவே இருக்கும். புலிகள் தமிழீழக் கோரிக்கையை விட்டு கீழ் இறங்க தயார் ஆகிவிட்டனர். (தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் கைவிடக்கூட) ஆனால் மற்ற தமிழ் தரகு முதலாளித்துவ கட்சிகள் போல் சந்திரிகா கொடுக்கும் மிகமிக சிறு எலும்புத் துண்டுகளுடன் சமரசமடைய தயாரில்லை, காரணம் இதுவரைகால போராட்டத்தின் மூலம் தமிழ் முதலாளி வர்க்கம் தான் ஏற்படுத்தி வைத்திருக்கும் தமிழ் பகுதிகள் மீதான அதிகாரத்தை பேணக்கூடிய விதத்திலும், அரசுடன் மேலும் பேரம் பேசுவத்கு அரசுக்கு நிர்பந்தத்தை கொடுக்கக்கூடிய நம்பிக்கையான சக்தி புலிகள் இயக்கம் மட்டுமே. தேசிய இன போராட்டங்களில் உலகளவில் வியக்கும்படியாக சயனைற் கொலையை கொள்கை இலட்சியமாக்கியுள்ள, தற்கொலை குண்டு போராளிகளை உற்பத்தி செய்யும், தேசிய எல்லைகளை கடந்து பெரும் அரசியல் தலைகளை அழித்தொழிக்கும், தொடர்ச்சியாக சின்னஞ்சிறு பாலகர்களை கொண்டு கூட அரசு படையை நிலை குலையச் செய்யும் இராணுவக் கட்டமைப்பை பெற்றுள்ள தேர்ச்சி பெற்ற தரை, கடல் கரும்புலிகளை கொண்டுள்ள புலிகள் இயக்கத்தை தமிழனின் வரலாற்றில் மாவீரர்களின் இலட்சிய கொள்கை இயக்கமாக தன்னை வெளிப்படுத்தும் புலிகளின் தலைமையும், தமிழ் முதலாளி வர்க்கமும் எதை இழந்தும் சந்திரிகாவின் சமரசத் திட்டத்து உட்பட மறுப்பது எவராலும் புரிந்து கொள்ளக்கூடியதே. குறைந்தபட்சமாக தாங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை கூட சந்திரிகா அரசு தரமறுத்தால் புலிகளால் போரை நீட்டிக்க முடியும்.



புலிகள் இன்று உடன்பட தயாராகவிருக்கும் குறைந்தபட்சக் கோரிக்கைகள் என்பதே தேசிய இனப் பிரச்சனையே தீர்ப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்தாதவை, புலிகளே இதுவரை காலம் பேச்சு வார்த்தைக்கு குறைந்தபட்ச அடிப்படையாக பிரச்சாரம் செய்த கொள்கைகளுக்கு விரோதமானவை, துரோகம் செய்யும் கொள்கைகள், தமிழ் மக்கள் பிரிந்து தனிநாடாவதை தவிர மற்றைய தெயும் துரோக கொள்கைகளாக, தமிழ் மக்களை காட்டிக் கொடுக்கும் செயலாக பிரச்சாரம் செய்த புலிகளின் தலைமை. தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக

www.tamilarangam.net



போராடுவதை முன்னிறுத்திய தொழிலாளி வர்க்க சக்திகளை சிறீலங்கா அரசின் கைக்கூலிகள் என விமர்சித்து துரோகிகள் பட்டியலில் சேர்த்த புலிகள் இன்று பிரிவினையை மட்டுமல்ல, தேசிய சுயநிர்ணய உரிமையைக்கூட கைவிட்டு' "சுயாட்சிக் கும், சமஸ்டிக்கும்" தயார் என முன்வந்தது எத்தகைய மோச மான கொள்கைச்சரணடைவு எல்லாவற்றிலும் புலிகளும், ஆதர வாளர் கூட்டமும் புலி தலைமையின் ராஜதந்திரம் என்பது போல் இதிலும் தலைமை தந்திரமாக பேசியுள்ளதாக இனியும் ஏமாற்ற முடியாது. ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தரகு முத லாளி வர்க்கம் தேசியப் பிரச்சனையில் கண்ணை மூடிக் கொண்டு தேசிய வெறியை கக்கி நாடுகளை துண்டுதுண்டாக உடைத்து சுதந்திரம் எனப் பிரச்சாரம் செய்கிறது. தொழிலாளி வர்க்கத்தை யும், பரந்துபட்ட உழைக்கும் மக்களையும் தனது தேசிய வெறிக் கொள்கைக்கு பலியாக்குகிறது. அல்லது தேசிய சுயநிர்ணய உரி மையை கூட கைவிட்டு ஒடுக்கும் தேசிய இன முதலாளிகளின் அரசுடன், வல்லரசியங்களுடன் சமரசம் செய்து கொண்டு தொழிலாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் பரந்துபட்ட மக்களுக்கும் தேசிய சுதந்திரத்திற்கும் துரோகம் செய்கிறது. தமிழ் தேசிய இனத்தின் தரகு முதலாளி வர்க்கமும் இதற்கு வதிவிலக்காகிவிட முடியாது.

சிறீலங்கா அரசுக்கு எதிரான தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்ட வரலாற்றில் திம்பு பேச்சு வார்த்தை என்பது முக்கிய மான வரலாற்று சம்பவம். தேசிய விடுதலைக்கான போராட்டத் தில் வளர்ந்து கொண்டிருந்த குட்டி முதாலளித்துவ இயக்கங்கள் அனைத்தும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு அடிப்படையாக முன்வைத்த அரசியல் கோரிக்கைகள். உள்நாட்டு மக்களாலும், உலக மக்களா லும் அங்கிகரிக்கப்பட்டவை அன்று ஜே.ஆர். அரசு அதற்கு உடன்பட்டுவர மறுத்ததும் பேச்சுவார்த்தையை குழப்பியதும், இந்தியரசு போராளி இயக்கங்களை மறைமுகமாக நேரடியாக நிர்பந்தித்த போதும் உள்நாட்டு மக்களதும், உலக மக்களதும் ஆதரவு நீதியான நியாயமான 'அக்கொள்கைகளின்' பக்கம் நின்ற போராளிகளுக்கு இருந்தது. தமிழீழ, சிறீலங்காவின் தொழி லாளி வர்க்க சக்திகளும் இக்கோரிக்கைகளை ஏற்றிருந்தனர்.



(கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல் ரீ.யு.எல்.எப்.ம் குட்டி முதலாளித்து இயக்கங்களும் படிப்படியாக இக்கோரிக் கைகளை கைவிட்டு மக்களுக்கு துரோகம் செய்து வந்தனர், புலி கள் மட்டும் 1987 ஒப்பந்தத்தின் பின்னும் இக்கோரிக்களை தாம் பேச்சு வார்த்தைக்கான அடிப்படை களாக அறிவித்து வந்தனர். புலிகளும் அவற்றை கைவிட தயாராவதை இன்று பார்க்க முடிகி றது.

- ☆ வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகப் பகுதி அங்கி கரிக்கப்பட வேண்டும்.
- ☆ தமிழ் மக்கள் தனியான தேசிய இனம் என்பது அங்கரிக்கப் பட வேண்டும்.
- ☆ தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கரிக்கப்பட வேண்டும்.
- ☆ நாடற்றவர்களாகவுள்ள அனைத்து தமிழர்களுக்கும் குடியி யல் உரிமை வழங்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகளை இன்றும் அரசுடனான பேச்சு வார்த் தைக்கு அடிப்படையாக நாம் கொள்ள வேண்டும். இக்கோரிக் கைகளை கூட கைவிட்டு போவதானது இதுவரை கால தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உந்து சக்தியாகவிருந்த உள்நாட்டு மக்களுக்கும், உலக மக்களுக்கும் துரோகம் செய்வதாகும்.

*1985-95* வரையிலான 10 ஆண்டுகால போராட்டத்துக்கும் தமிழ் மக்களின் போராளிகளின் தியாகங்களுக்கும் செய்யப்ப டும் துரோகமாகும். மாவீரர்களின் கல்லறைகளுக்கு வைக்கப்ப டும் வெடிகுண்டாகும்.

தொழிலாளிவர்க்க சக்திகளும், தேசபக்த புரட்சிகர சக்திக ளும் இந்த "திம்புக் கோரிக்கைகளை" பேச்சு வார்த்தைக்கான அடிப்படைகளாக மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண் டும். மேலதிகமாக மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக பொருளாதார தடை நீக்கத்தையும், கடல் வலைய தடைச் சட்டத்தையும் நீக்க அரசை கோர வேண்டும். இக்கோரிக்கைகளை கைவிட்ட அமைப்புக்களை, கட்சிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டும். இக்கோரிக்களை பேச்சு வார்த்தைக்கான அடிப்படையாக ஏற்றுக் கொள்ள சந்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரிகா அரசு முன்வராதவரை சிறீலங்கா அரசையும் வல்லரசுகளையும் எதிர்த்த தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் தொடர்ந்து முன்னேடுக்கப்பட வேண்டும். இதுவே தமிழீழ பகுதியில் நமது வேலையாக இருக்க வேண்டும்.

இனப்பிரச்சனைக்கான தீர்வாக இவ் அரசியல் கோரிக்கைகளை அடிப்படையாக ஏற்று தீர்வு காணப்படாத எந்த பேச்சு வார்த்தைகளும், சமாதான ஒப்பந்தங்களும், இவ்வரசியல் கோரிக்கைகளுக்காக, இவற்றை அடைவதற்காக தொடங்கப்பட்ட யுத்தத்தை நிரந்தரமாக நிறுத்திவிட முடியாது. சந்திரிகா அரசு இக்கோரிக்கைகளை தீர்க்க முன்வர மறுத்தாலும், எப்போது? புலிகள் இக்கோரிக்கைகளை கைவிட்டு கீழ் இறங்கி சமரசம் செய்து கொண்டாலும் தமிழ் மக்கள் தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்து நடத்தும் போராட்டத்துக்கும், யுத்தத்துக்கும் அவர்களே பொறுப்பாளிகள். எனவே யுத்த நிறுத்தத்துக்கும், அமைதிக்கும் அவர்களே தடைக்கல்லாக இருப்பார்கள். இக்கோரிக்கைகளைவிட குறைந்த கோரிக்கைகளுக்கு கூட சந்திரிகா அரசை எதிர்த்து புலிகள் போராடுகையில், போராடும் மட்டும். யுத்த நிறுத்தத்துக்கும், அமைதிக்கும் சந்திரிகா அரசு மட்டுமே பொறுப்பாக, தடைக்கல்லாக இருக்கும்.

புலிகள் எவ்வளவு சர்வாதிகார இயக்கமாக இருக்கின்றபோதும், அது நாளைக்கு என்ன துரோகத்தை இழைக்க தயாராகிக் கொண்டிருந்தாலும், சிறு துளியளவு வல்லரசிய எதிர்ப்பு கொண்டிருக்காத பேதும், சிறீலங்கா இனவாத பாசிச அரசுக்கு எதிராக புலிகள் போராடிக் தொண்டிருக்கும் வரையும் அப்போராட்டத்தையும், குறிப்பான நிலமைகளில் சிறீலங்கா அரசை காப்பாற்றும் நோக்கில் தமிழ் மக்களின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை நசுக்கும் முயற்சியில் ஈடுபடும் எந்த அன்னிய அரசுகளும், ஒருவேளை அய்நா படை தலையிட்டாலும் அதை எதிர்த்து புலிகள் போராடுவார்களானால் தொழிலாளி வர்க்க இயக்கம் அப்போராட்டத்தையும் ஆதரிக்க வேண்டும். இதன் அர்த்தம் சிலர் வியாக்கியானம் செய்வதுபோல் புலிகளுடன் தொழிலாளி வர்க்க சக்திகள் அய்க்கியப்பட வேண்டும் என்பதோ புலிகளை விமர்சிக்க கூடாது புலிகளுக்கு பின்னால்



வால் பிடிக்க வேண்டும் என்பதல்ல. தொழிலாளிவர்க்க இயக்கத்தை, கட்சியை கட்டும் சுதந்திரமான தனித்துவமான வேலைகள் புலிகளின் தடைகளை, கைதுகளை அழித்தொழிப்பை மீறி தொடரப்பட வேண்டும். மக்கள் மத்தியில் புலிகளின் தவறான கொள்கைகளும் நடைமுறைகளும், விமர்சனம் செய்யப்பட வேண்டும். அவை எவ்வாறு தேசிய விடுதலைப் போராட்டத்தை பலயீனப்படுத்துகின்றன, பொது எதிரிக்கு மறைமுகமாக சேவை செய்கின்றன என்பதும், தொழிலாளி வர்க்கத்தின், ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் பரந்துபட்ட மக்களின் நலனுக்கு எவ்வாறு எதிராக இருக்கிறது என்பது சொல்லப்பட வேண்டும். அதேவேளை நாங்கள் சிறீலங்கா அரசுக்கும் வல்லரசியங்களுக்கும் எதிராக உறுதியாக போராட வேண்டும். இவற்றை சரிவர செய்வதன் மூலம் தொழிலாளிவர்க்க கட்சியை போராட்டத்தில் தீர்மானகரமான சக்தியாக வளர்த்தெடுக்க முடியும்.

இதேபோன்று சிறீலங்காவில் சிறீலங்கா அரசையும் வல்லரசியங்களையும் எதிர்த்து புதிய சனநாயக புரட்சிப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தையும் புரட்சிகர வர்க்கங்களையும் திரட்ட வேண்டும். தொழிலாளி வர்க்க கட்சியை கட்ட வேண்டும். இலங்கையிலுள்ள தொழிலாளி வர்க்க முன்னோடிகளின் கடமை இது வாகவுள்ளது.

இன்று, சிறீலங்கா அரசும் வல்லரசியங்களும் நடத்திவரும் தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தை மக்களுக்கு பேரழிவு தரும் கொடூரமான யுத்தத்தை எதிர்த்து தொழிலாளி வர்க்க கட்சியின் தலைமையில் புரட்சிகர வர்க்கங்கள் நடத்தும் புரட்சிகர தேசிய விடுதலை யுத்தம் மக்கள் யுத்தமே. ஆளும் வர்க்கத்தின் அநீதியான யுத்தத்தை மக்கள் நீதியான யுத்தத்தால் தோற்கடித்து, தமிழீழ, சிறீலங்கா தேசங்களின் சுதந்திரத்தை, மக்களின் விடுதலையை அமைதியை ஏற்படுத்தும், தேசிய இனங்களின் பிரிந்து போவது உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்படும் தமிழீழ, சிறீலங்கா தேசங்களின் மக்களின் சுதந்திரமான அய்க்கியப்பட்ட இலங்கையின் புதிய சனநாயக அரசு நிறுவப்படும்.

தமிழரசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ☆ அமைதியும் போரும் ☆

## உனக்கொரு பொருள் / எனக்கொரு பொருள்

அந்தப் பெரிய அந்நிய மூலதன முதலாளி
வேலைநிறுத்தம் செய்யும் பட்டினித் தொழிலாளிகளிடம்
சொன்னான்.
''அமைதியாய் இருங்கள்!... இல்லையேல் வேலையை
இழக்கநேரிடும்''

அந்தக் கொழுத்த நிலச்சுவாந்தார்
குறைகளை முறையிடும் விவசாயிகளை
மிரட்டினான்
''அமைதியாய் இருங்கள்!... இல்லையேல் இந்த நிலத்திலேயே
உங்களைப் புதைத்து விடுவேன்''

பதவிப் பசி பிடித்தலையும் அரசு உயர் அதிகாரி
மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மனிதர்களிடம்
எச்சரித்தான்
அமைதியாய் இருங்கள்!... இல்லையேல் சிறையிலடைப்பேன்!
என்றென்றைக்கும் பேச இல்லாதவாறு செய்து, மீளாத்துயில்
கொள்ள அனுப்பி விடுவேன்!

மக்கள் ஒன்றும் புரியாமல் அலைந்தனர்.

## அமைதி என்றால் என்ன?...
## போர் என்றால் என்ன?

சுதந்திரத்திற்காக போராடிய தங்கள் முன்னோர்களின்
இரத்தத்தால் புனிதமாக்கப்பட்ட வயல் வெளிகளிலிருந்து
வந்த காற்று அந்த செய்தியோடு வந்தது
''ஸ்பானிஷ்காரர்கள்
அன்பை, சகோதரத்துவத்தை, அமைதியை



போதிக்கும் சிலுவையோடு இங்கு வந்தனர்
போதனைகளை வாள் முனையில் எங்கள் மீது திணித்துவிட்டு,
பதிலுக்கு எங்கள் செல்வங்களை அபகரித்தனர்
நியாயமான ஒரு போர் தொடுத்தோம் நாங்கள்...
அதில் வென்றும் விட்டோம்
நாட்டுச் சொத்துக்கள் எல்லாம் மக்கள் சொத்தாக மலர்ந்தது
எங்கும் அமைதி ஆனந்தக் கூத்தாடியது
ஆனால் வெகுகாலத்திற்கு இல்லை... ஒரு புதிய
இன்னும் புத்திசாலியான
இன்னும் கொடூரமான
இன்னும் பலசாலியான ஆக்கிரமிப்பாளன் வந்தான்...
நாங்கள் மறக்கப்பட்ட 2,00,000 தியாகிகள் அமெரிக்க - பிலிப்பைன் யுத்தத்தில் கடுமையாக போரிட்டும்... தோற்று விட்டோம்.
எங்களது அறிவுஜீவத் தலைமை எங்களை ஏமாற்றிவிட்டது.
அமெரிக்க ஆக்கிரமிப்பாளனின் நவீன ஆயுதங்களுக்கெதிராய்
எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை
அதன்பின் அமெரிக்க ஏகாதிபத்தியமும், எங்களது
ஏமாற்றுத் தலைமையும்
இணைந்து அமைதியை நிலை நிறுத்தினர்.
அநியாயங்களால் வேயப்பட்ட அமைதியை நிலைநிறுத்தனர்
பின்னர் மக்கள் மலைகளை நோக்கி தவமிருந்தனர்.
தங்கள் விடிவு காலத்திற்காக காத்திருந்தனர்.
எப்போதும் தூய்மையாயும் சுதந்திரமாயும் திரியும்
மலைக்காற்று
உடனே ஒரு செய்தியைக் கொண்டு வந்தது.
சீனப் போராளியும் கவிஞனுமான அவனது
வைரவரிகளைக் கொண்டு வந்தது.
''போரை ஒழிக்க முனைவதில் நாங்கள் முன்னோடிகள்
நாங்கள் போரை வெறுக்கிறோம். ஆனால் ஏகாதிபத்தியமும்
எங்களது எதேச்சாதிகாரிகளும் அடக்குமுறையாளர்களும்
மக்களை வதைத்துக் கொல்லும் போது, நாங்கள் வாளாவிருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயலாது. அதனால்தான் இது. ஒரு நியாயப் போர்.
அநியாயப் போரை முடிவுக்கு கொண்டுவர,
துப்பாக்கியின் குறியிலிருந்த தப்பிக்க
ஒரு துப்பாக்கியைக் கைப்பற்றுவது
தவிர்க்க இயலாததாகிவிட்டது''.
பின்னர் அந்த சிறிய அதிகாரத் தலைமையை நோக்கி
மக்கள் கூட்டம் குரல் கொடுக்கத் துவங்கியது.

''நீயும் அமைதி பற்றிப் பேசுகிறாய் ஆனால்
எல்லோருக்கும் பொதுவான தாயகத்தின் வளங்களை
நீ மட்டும் தனியே சுரண்டிக் கொள்கிறாய்''

''நீயும் அமைதிபற்றிப் பேசுகிறாய். ஆனால்
உன் சதிச் செயல்களை மக்கள் மேடைக்கு ஏற்றிய
உன்னை நியாயத்திற்காக எதிர்க்கத் துணிந்த
தேசத்தின் ஏராளமான இளங்குருத்துக்களை
நீ அநியாயமாக சாகடித்தாய்!''.

.... ஒரு கொடூரமான கழுகு
பாதுகாப்பற்ற, உதவியற்ற வெண்புறாவை குறிவைத்து
குதறுவதைப் போல....

''ஆமாம் நீயும் அமைதிபற்றி பேசுகிறாய். ஆனால்
உன் இரத்தக் கறைபடிந்த கைகளுக்குள் இருக்கும்
பலி கொடுக்கும் பட்டாக் கத்திகளை
முதுகுக்கு பின்னால் மறைக்கப் பார்க்கிறாய்.''

'நாங்களும் அமைதியையே விரும்புகிறோம்.
ஆனால் நீதியின் மீது நிறுவப்பட்ட அமைதியை
நியாயத்தின் மீது கட்டப்பட்ட அமைதியை
அது கிடைக்காவிடில்
உன் மீது ஒரு நியாயப் போர் தொடுப்போம் நாங்கள்''

மெம்பர் பேயன்
பிலிப்பைன்ஸ்



# ☆ மாவோ நூற்றாண்டை நினைவு கூர்வோம் ☆

தோழர் மாஓவின் பிறந்த தின நூற்றாண்டை DEC.26 - 1993/94 நினைவு கூரும் நிகழ்ச்சிகள் சர்வதேசிய அளவில் பல தளங்களில் பல வடிவங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகில் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள மார்க்சிய லெனினிய கட்சிகளும் ஸ்தாபனங்களும், குழுக்களும், புரட்சிகர மக்களும் தங்கள் தங்கள் நாடுகளின் ஆளும் பிற்போக்கு நிலப்பிரத்துவ முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராகவும் உலக ஏகாதிபத்தியங்க ளுக்கு எதிராகவும் இடைவிடாது நடத்தி வரும் வர்க்கப் போராட்டத்தினூடாக மாஓவின் புரட்சிகர சிந்தனைகளை தங் கள் மனங்களில் மேலும் மேலும் உரமேற்றி கொள்கின்றனர். உலகுக்கு உறுதிப்படுத்துகின்றனர். மாஓவின் கூற்றுப்படி ''ஏகா திபத்தியமும் - பாட்டாளி வர்க்கப் புரட்சியுமான இந்த புரட்சிகர சகாப்தத்தில் நாடுகள் சுதந்திரத்தை கோருகின்றன. தேசங்கள் விடுதலையைக் கோருகின்றன. மக்கள் புரட்சியைக் கோருகின்ற னர்.''

சீன மக்களின் உள்நாட்டு எதிரிகளான நிலப்பிரபுத்துவத்தை யும் முதலாளித்துவத்தையும், சீன மக்களதும் உலக மக்களதும் எதிரிகளான ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து பாட்டாளி வர்க்க புரட்சிகர கட்சியின் தலைமையிலான சமரசமற்ற வர்க்கப் போராட்டத்தின் மூலம் சீன மக்களின் புதிய சன நாயகப் புரட் சியை நடத்திய வரும், சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்தின் வரலாற்றில் நடந்த முதலாளித்துவ மீட்புக்கும், பழைய புதிய திரிபுவாதங்களுக்கு எதிராக இறுதிவரை போராடி சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்தை சரியான வழியில் முன்னெடுக்கவும், மார்க்சிய லெனினியத்தின் அடிப்படையை பேணி பாதுகாத்தலி லும் மாபெரும் பங்களிப்புக்களை வழங்கிய சர்வதேச பாட் டாளி வர்க்கத்தின் தலைவரான தோழர் மாஓவையும் அவரது புரட்சிக்கர சிந்தனைகளையும் அவரது மதிப்பு மிக்க தியாகங்க ளையும் நாம் நினைவு கூறுகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் உலகளவில் மாஓவின் நினைவு நூற்றாண்டில் மாஓ விற்கு எதிரான அவரது சிந்தனைகளுக்கு எதிரான நினைவுச் சடங்குகளும் நடந்து கொண்டிருக்கின்றது. உதாரணமாக சீனத் தின் திரிபுவாத கொம்யூனிசக் கட்சியும் அரசும் மாஓவின் நிழற்ப டங்கள் பொறித்த தங்கத்திலான கைக் கடிகாரங்களை ரூபா 5000/- வரை விற்பனைக்கு விட்டுள்ளது. வைரக் கற்கள் பதிக்கப் பட்ட விசேட கைக்கடிகாரம் ஒன்று ரூபா 3 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டுள்ளது. மாஓவின் (படத்துக்கு) உருவத்திற்கு மட்டும் நினைவு கொண்டாடிக் கொண்டு மாஓவின் சிந்தனைகளையும் புரட்சிகர நடவடிக்கைகளையும் திரித்துப் புரட்டி, குழிதோண் டிப் புதைத்து வருகின்றது. உலகளவில் பழைய, புதிய, திரிபு வாத இடதுசாரிக் கட்சிகள், நவீன இடதுகள், ட்ரொஸ்கிய வாத கட்சிகள், நடுநிலைவாதம் பேசும் சந்தர்ப்பவாதக் கட்சிகள் சடங் காகவும், சம்பிரதாயமாகவும் தங்களுக்கு உகந்த வழிகளில் நினைவு நூற்றாண்டைக் கொண்டாடுகின்றனர். மறுபுறம் முத லாளித்துவ ஏகாதிபத்திய அறிவுஜீவிகள் கூட மாஓவின் தனிப் பட்ட வாழ்வு பற்றி மிக மிக கீழ்த்தரமாக புனைந்து பக்கம் பக்கமாக எழுதி கொண்டாடுகின்றனர்.

உண்மையில் முதலாளித்துவ - ஏகாதிபத்திய சக்திகள் பிற் போக்காளர்கள் உலகசோசலிசப் புரட்சித் தளங்களை (சோவி யத், சீன, கிழக்கு, அய்ரோப்பிய...) முதலாளித்துவப் பாதைக்கு மீட்டு விட்ட சந்தோசத்தில், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மீதும் (மார்க்சியம் காலம் கடந்து விட்ட தத்துவம் என்றும்) மா.லெ. மாஓ சிந்தனைகள் மேலும், அதன் மூலவர்கள் (மார்க்ஸ், ஏங்கல்சு, லெனின், ஸ்டாலின், மாஓ) மீதும் எல்லா வழிகளிலும் மூர்க்கத்தனமாக தாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சிகர தலைவர்கள் மீது உலக மக்கள் கொண்டுள்ள தனி மனித நல்மதிப்பீடுகளையும் அடியோடு தகர்த்திட துடியாய் துடிக்கிறது ஏகாதிபத்திய பேனா முனைகள். ஆனால் எல்லாவகை (பழைய புதிய) திரிபுவாத சக்திகளும், நவீனங்களும் மார்க்சியம் லெனினியம் என்றும் மா.லெ. மாவோ சிந்தனை என்றும் பாடிக் கொண்டே மா.லெ. மாஓ சிந்தனையின் புரட்சிகர சாராம்சத்தை உள்ளுக்குள்ளாகவே அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். திசை திருப்புகின்றார்கள்.



அடிப்படையில் மா.லெ. மாஓ சிந்தனையை அதன் தத்துவ நிலை, அரசியல் நிலை, அமைப்பு நிலை உயிர்த்துடிப்பை தாக்கி யழிப்பதில், பாட்டாளி வர்க்கத்தை, உலக மக்களை சுரண்டுவதி லும் அடக்கி ஒடுக்குவதிலும் நீட்டிப்பை பேணுவதிலும் முன்ன வர்கள் கருத்தியலாலும் (சிந்தனை) கரத்தியலாலும் (வன்முறை) நேரடியாக ஈடுபட்டுள்ளார்கள். பின்னவர்கள் மார்க்சிய லெனி னியப் போர்வைக்குள் இருந்து கொண்டே ஊடுருவி தாக்கியழிக் கும் மறைமுக வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். இதற்கு மேல் இவர்களது சித்தத்திலும் சிந்தனையிலும் செயலிலும் மாஓ நினைவு நூற்றாண்டு விழாக்களிலும் சடங்கு, சம்பிரதாயங்களி லும் கூட வேறுபாடு இல்லை.

### மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனையை உயர்த்திப் பிடிப்போம்

மார்க்சிய விஞ்ஞான சோசலிசக் கொள்கையின் தோற்றகா லம் முதல் இன்று வரையிலான அதனது 150 ஆண்டுகால வர லாறு முழுவதும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சித்தாந்தத்தால் ஏளனம் செய்தும் தாக்கப்பட்டும் வந்துள்ளது ஒருபுறம். மறுபு றம் முதலாளிததுவ ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட முகமூடி போட்ட மார்க்சியத்தின் பக்கம் நிற்பதாக காட்டிக் கொண்ட திரிபுவாத சித்தாந்தங்களாலும் பிற்போக்கு சித்தாந்தங்களாலும் திசை திருப்பப்பட்டு வந்திருக்கின்றது. எதிர்புரட்சி நடவடிக்கை களுக்குள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றது. சுரண்டல் ஒடுக்கு முறைத் தன்மை கொண்ட ஏகாதிபத்திய, முதலாளித்துவ சித்தாந் தங்களை அவற்றின் கருத்தியல், இயக்க மறுப்பியல் தத்துவங் களை மார்க்சியம் தனது இயக்கவியல் பொருள் முதல்வாதத்தா லும், வரலாற்று பொருள் முதல் வாதத்தின் விஞ்ஞான அணுகு முறையை கொண்டும் தொடர்ச்சியான சமரசமற்ற வர்க்கப் போராட்டத்தின் மூலமும் பாட்டாளி வர்க்க தத்துவ மேலாண்மை அரசியல் கொள்கை, அமைப்பாக்கல் மேலாண்மை மூலம் வெற்றி கண்டு வந்திருக்கின்றது.

மார்க்சியம் ஒரு நடைமுறைத் தத்துவம், சோசலிசம் புரட்சி யும் கொம்யூனிசமும் மனித குல வரலாற்றில் தவிர்க்க முடியாத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரலாற்று நியதி என்ற கொள்கைகள், 1871 பாரீஸ் புரட்சியில் பரிசோதிக்கப்பட்டது அதன் அனுபவங்களில் இருந்து மேலும் செழுமைப்படுத்தப்பட்டு 1917 லெனின் தலைமையிலான சோவியத் சோசலிசப் புரட்சி மூலமும், 1949 மாஓ தலைமையிலான சீன மக்கள் புதிய சனநாயகப் புரட்சியின் மூலமும் நிரூபணமாக்கப்பட்டது. இதன் வழி சமூக நடைமுறையாக்கப்பட்ட மார்க்சிய லெனினியத் தத்துவம் உலகின் வரலாற்று வளர்ச்சியில் பாட்டாளி வர்க்கத்தினதும் பொதுவுடமை இயக்கத்தினதும் தலைமைப் பாத்திரம் சமூக நடைறையாக உறுதிப்படுத்தியது. இவ்வாறு வர்க்கப் போராட்டவழி பலாத்கார புரட்சி மூலம் தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கங்களும் ஏகாதிபத்தியங்களும் சோசலிசப் புரட்சி அரசுகள் மேல், கொம்யூனிஸ் கட்சிகள் மீது அவற்றின் தலைவர்கள் மேல் உக்கிரமாக எல்லாவழிகளிலும் தாக்கினர். அத்தகைய நாசகார நடவடிக்கைகளை தாக்குதல்களை எல்லாம் சோசலிச நாட்டு மக்களின் உன்னதமான தியாகங்கள் உலகளவில் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் ஆதரவில் சோசலிச அரசுகள் முறியடித்த வந்தது.

ஆனால் கொம்யூனிசக் கட்சிகளின் தலைமைக்குள்ளாகவே முதலாளித்துவ மீட்சிப் பாதையாளர்கள் வெளிப்பட்டு எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் மூலம் சோசலிசப் பாதையை சீர்குலைக்கவும், கவிழ்க்கவும் முயன்ற போதும் கூட சரியான பாட்டாளி வர்க்க சித்தாந்தப் போராடடங்கள் மாபெரும் மக்கள் இயக்கங்கள் மூலமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், சனநாயக நடவடிக்கைகள் ஊடாகவும் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் தோற்கடிக்கப்பட்டது. சோசலிச தளங்கள் காப்பாற்றப்பட்டன. சர்வதேசிய கொம்யூனிச இயக்கம் இத்தகைய மார்க்சிய லெனினியத்துக்கும் திரிபுவாதத்திற்கும் எதிரான போராட்டங்களுடே சரியான திசை வழியில் முன்னேறியது. உலகளவில் ஏகாதிபத்தியங்களின் காலனியாதிக்கத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட தேசங்களின், மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு சோசலிசதளங்கள் மாபெரும் உந்து சக்தியைக் கொடுத்தது. இவ்வாறு விரிவடைந்து வந்து சோசலிசப் புரட்சிகளின் வெற்றியும் அவற்றின் வியக்கத்தகு சமூக மாற்றங்களும் முன்னேற்றங்களும் உலக பொதுவுடமை இயக்க வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.



சோவியத்தில் தோழர் லெனின் மறைவுக்குப் பின் தோழர் ஸ்டாலினும் சீனத்தில் மாஓ தலைமையிலும் இருந்த சோசலிச அரசுகள், ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்காளர்களதும் தாக்குதல்களையும் உள்நாட்டில் முதலாளித்துவ மீட்சி, திரிபுவாத கும்பல்களையும், எதிர்புரட்சி நடவடிக்கைகளையும் எதிர்த்த போராட்டத்தூடே முன்னெடுத்துச் சென்றனர். சர்வதேச கொம்யூனிச இயக்கத்தையும் உலக சோசலிசப் புரட்சியை முன் தள்ளும் விரிவாக்கும் திசை வழியில் உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கு வழிகாட்டி வந்தனர். சோவியத்தில் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின் ஆட்சியைக் கைப்பற்றிய குருச்சேவ் திரிபுவாத முதலாளித்துவ பாதையாளர்களும் (இவர்கள் ஸ்டாலின் மீது குறிவைத்து தாக்கும் வேலையுடன் வெளிவந்த திரிபுகள்) சீனத்தில் மாஓவின் மறைவுக்குப் பின் ஆட்சியை கைப்பற்றிய குவாகோ பெங், டெங் திரிபுவாத முதலாளத்துவ மீட்சி கும்பலும் (இவர்கள் மாஓவை ஆரம்பம் முதல் துதிபாடிக் கொண்டு வந்த திரிபுவாதிகள்) மார்க்சிய, லெனினிய அடிப்படைகளை கைவிட்டு, சோசலிசப் பாதையை எதிர்த்து திரிபுவாத, முதலாளித்துவ கொள்கைகளை முன் வைத்தனர். சோசலிசத் தளங்களை ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளாகவும் அரசுகளாகவும் மாற்றத் தொடங்கினர். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் துரோகிகளாயினர்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் எதிரான இவ்விரண்டு திரிபுவாத முதலாளித்துவ பாதை மாற்றங்களும் சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்தின் புரட்சிகர வழிகளிலும் திரிபுவாத விலகல்களை முன் வைத்து அதற்கு உடன்பட்ட பொதுவுடமைக் கட்சிகளை உலகளவில் திரிபுவாத முதலாளித்துவ கட்சிகளாக வளர்த்தும் விட்டன.

ரசிய திரிபுவாத மார்க்கத்திற்கு எதிராக தோழர் மாஓவும் சீனப் பொதுவுடமைக்கட்சியும் சர்வதேசகம்யூனிச இயக்கத்தின் ''மாபெரும் விவாதத்தை'' நடத்தியதன் மூலம் சர்வதேசியளவிலும் சீனத்தின் உள்ளேயுமு முதலாளித்துவ மீட்பாளர்கள் அம்பலப்படுத்தப்பட்டனர். தோற்கடிக்கப்பட்டனர். இன்றைய உலக நிலையில் மா. லெனினிய சக்திகள் குருச்சேவிய திரிபுவாத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழியை உலகளவிலும் உள்நாட்டிலும் நிராகரித்து உறுதியாக மா. லெனியத்தின் பக்கம் நின்று போராடினர். மார்க்சிய - லெனினியத்திற்கும், திரிபுவாதத்திற்கும் இடையிலான எல்லைக் கோட்டை போட்டனர். இதில் ஏகாதிபத்தியங்களுக்கும் உள் நாட்டுப் பிற்போக்காளர்களுக்கும் எதிரான வர்க்கப் போராட்டங்கள் சமரசமின்றி தொடர்ந்தது. சீனப் பொதுவுடமைக் கட்சியினதும் மாஒவினதும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பங்களிப்பு உலக பாட்டாளி வர்க்கத்திற்கு கிடைத்தது.

ஆனால் சீனத்தில் குவாங்கோபெங், டெங்கும்பல் ஆட்சியைக் கைப்பற்றி முதலாளித்துவ திரிபுவாத மார்க்கத்தை கொண்டு வந்த போது இரண்டாவது மாபெரும் விவாதத்தை நடத்தும் சக்தியை உலக பாட்டாளி வர்க்க இயக்கத்தில் காண முடியவில்லை. (சீனத்தில் சோசலிசப் பாதைக்காகவும் மா. லெனினிய அடிப்படைக்காகவும் நின்று முதலாளித்துவ மீட்பு பாதைக்கு எதிராகப் போராடிய சியாங்சிங்..... குவாகோ டெங் கும்பலால் இரவோடு இரவாக சிறைப்பிடிக்கப் பட்டார்கள்). சோசலிச தளங்களில் ஸ்டாலின், மாஓ உயிருடன் இருந்த காலங்களில் ''உற்பத்தி சக்தி கோட்பாடுகளுடன்'' தலை நீட்டிய திரிபுவாதம் அன்றைய பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான சித்தாந்த போராட்டங்களுக்கு முகங் கொடுக்க முடியாமல் பின் வாங்கியது. ஆனால் வாய்ப்பு கிடைத்தபோது ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் தங்களை கெட்டிப் படுத்தினா. மண்டும் சர்வதேச கொம்யூனிச இயக்கத்தில் திரிபுவாத முதலாளித்துவ சித்தாந்தம் மேலாண்மைக்கு வந்தது.

1978-இன் பின் உலகில் சோசலிச தளங்கள் இல்லாத நிலை உருவானது. உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் மேலாண்மைக்கு வந்த குவாகோபெங், டெங் திரிபுவாத மார்க்கத்தை (மூன்று உலகத் தத்துவம்) எதிர்த்து உலகளவில் சிறு அளவில் மா. லெனினிய சக்திகள் மீண்டும் சீன திரிபுவாத முதலாளித்துவ மார்க்கத்துக்கும் சோசலிசப் பாதைக்கும் இடையிலான வேறுபாட்டை முன்வைத்து மா. லெனினியத்தின் அடிப்படையை காக்க முயன்றனர். ஆனால் அவர்களால் டெங் திரிபுவாத மார்க்கத்திற்கு எதிராக சிறிய அளவில் எதிர்ப்பு நடத்தவும் தங்களை மா. லெ. பக்கம் நிலைநிறுத்திக் கொள்ளவுமே முடிந்தது.



சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்தின் பொது வழியில் புகுந்து கொண்ட திரிபுவாதப் போக்கின் ஆதிக்கம் (குருச்சேவிய - டெங் திரிபுவாதம், உலகளவில் மா.லெ. மா.ஒ. சிந்தனையை பொதுவுடமை இயக்கங்கள், கட்சிகள், ஸ்தாபனங்கள், குழுக்கள் மத்தியில் சித்தாந்த, அரசியல் அமைப்பு துறையிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும், தாக்கம் செலுத்துகிறது. இதனால் மார்க்சிய, லெனினிய இயக்கங்கள், ஏகாதிபத்தியங்களின் செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடுகளிலும் அரசியல் அமைப்பு ரீதியில் வர்க்கப்க போராட்ட நடைமுறைகளில் முன்னேறுவதில் ஒன்றுபட்ட கட்சி மறு சீரமைப்பு வேலைகளில் பின்னடைவு நிலவுகின்றது. சர்வதேச கம்யூனிச இயக்கப் பொதுவழிகளில் ஒன்றுபடுவதிலும் பெரும் பின்னடைவை பாட்டாளி வர்க்க சக்திகள் எதிர் கொள்கின்றன. இதை கடக்க முனையும் மா. லெ. மாஓ சிந்தனைக் கட்சிகள், ஸ்தாபனங்கள், குழுக்கள், மா ஒ நினைவு நூற்றாண்டை மையமாக வைத்து இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்திய ஏகாதிபத்தியங்களின் புதிய வடிவங்கள் பற்றிய மதிப்பீட்டிலும் மா. லெனியத்திற்கு எதிரான எல்லாவ கைப்பட்ட திரிபுவாத மார்க்கங்களையும் வர்க்க சமரசவழிகளை எதிர்த்து மாவோ நடத்திய போராட்டங்களின் தத்துவார்த்த உள் ளடக்கங்களை சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கு வழங்கிய மாபெரும் பங்களிப்புக்களின் உட்சாரத்தை கற்றுக் கொள்வது, ஆழமாகப் புரிவதிலும் அதைப் பிரச்சாரப்படுத்துவதன் மூலமும் மார்க்சிய - லெனினிய, மாவோ சிந்தனை உயர்த்திப் பிடிப்போம்.

''மார்க்சிய - லெனினியம் என்பது ஒரு அறிவியல். அறிவியல் விவாதங்களைக் கண்டு அஞ்சுவதில்லை. விவாதங்களைக் கண்டு அஞ்சுவது எதுவும் அறிவியலாகாது. சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் தற்போது நடைபெறும் மாபெரும் விவாதமானது எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுக்களையும் புரட்சியாளர்களையும் புரட்சிகர மக்களையும் தங்கள் சொந்த நாட்டுப் புரட்சி பற்றிய பிரச்சனைகள் குறித்தும் உலகப் புரட்சி குறித்தும் மார்க்சிய - லெனினிய அடிப்படையில் தங்கள் மூளையைப் பயன்படுத்திச் சிந்திக்கத் தூண்டுகிறது. இந்த மாபெரும் விவாதத்தின் மூலம் மக்கள் சரி எது தவறு எது என்பதையும் உண்மையான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்க்சிய - லெனினியம் எது, போலியானது எது என்பதையும் புரிந்து கொள்வார்கள். இப் பெரும் விவாதத்தின் மூலம் உலகில் உள்ள எல்லா புரட்சிகர சக்திகளும் ஒன்று திரட்டப்படும். எல்லா மார்க்சிய - லெனினியவாதிகளும் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உறுதி செய்யப்பட்டு தங்கள் நாடுகளில் மேலும் முதிர்ச்சியடைந்த வகையில் மார்க்சிய - லெனினியத்தை நடைமுறையுடன் இணைக்கும் திறன் பெறுவார்கள். இவ்வாறு மார்க்சிய லெனினியம் சந்தேகமின்றி மேலும் செழுமை பெறும். வளர்ந்து புதிய சிகரங்களை எட்டும்''.

## உலக சோசலிசப் புரட்சியின் பகுதியே புதிய சனநாயகப் புரட்சி

முதலாளித்துவம் ஆட்சியதிகாரத்தில் இருந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை தூக்கி எறிந்து சோசலிசப் புரட்சியை நடத்தும் சோசலிசம் பாட்டாளி வர்க்க கட்சியின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் கொம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் உலகளவில் முதலாளித்துவத்தை வெற்றி கொண்டு உலக தொழிலாளி வர்க்கம் உலக சோசலிசப் புரட்சியை நடத்த வேண்டும். சுரண்டலற்ற ஒடுக்கு முறைகளற்ற சுதந்திரமான கொம்யூனிச சமூகம் உலகில் தோன்றும். இவை மார்க்ஸ், ஏங்கல்சில் முன் வைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத் தத்துவம். வர்க்கப் போராட்ட நடைமுறையை முன் தள்ளி 1871-இல் பாரிஸ் புரட்சிக்கும் நேரடியாக தலைமை தாங்கினர்.

முதாலளித்துவம் தனது வளர்ச்சியின் உச்சக் கட்டமாக ஏகபோக முதலாளித்துவமாகி ஏகபோகமாக மாறிய போது லெனின் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய துல்லியமான ஆய்வுகள் மதிப்பீடகள் மூலம் ஏகாதிபத்தியத்தின் அடிப்படைகளை தெளிவாக விளக்கினார். இந்த சகாப்தம் ''ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்க புரட்சியுமான சகாப்தம்'' என்றார்.

ஏகாதிபத்தியம் இந்தக் கட்டத்தை தாண்டி எங்கும் செல்ல முடியாது. பாட்டாளி வர்க்கப் புரட்சி தான் ஒரே வழி என்றும் ஏகாதிபத்தியங்கள் காலனிகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் உலக சோசலிசப் புரட்சியானது முதலாளித்துவ - ஏகாதிபத்திய



நாடுகளில் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியாகவும் காலனி நாடுகளில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த எதிர்ப்புப் போராட்டத்தில் இவ்விரண்டு புரட்சிகளுக்குமிடையிலான உறவை மிகச் சரியாக முன் வைத்தார். 1917 அக்டோபர் புரட்சியின் மூலம் மார்க்சியத்தின் தர்க்க நியாயம் உலகளவில் நிரூபிக்கப்பட்டது.

காலனிய அரைக்காலனிய நாடுகளில் நடக்கும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சிகள் எவ்வாறு உலக சோசலிசப் புரட்சியின் பகுதியாக உள்ளது என்பதை மாஓவின் புதிய சனநாயகப் புரட்சி பற்றிய கொள்கையும் நடைமுறையும் மார்க்சிய லெனியத்தை காலனி / அரைக்காலனி நாடுகளின் குறிப்பான புரட்சிகர சூழ்நிலைமைகளுடன் ஒன்றினைத்து முதலாளித்துவ புரட்சி நடக்காத நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மக்கள் புரட்சியானது முதலாளித்துவ வர்க்கத்தால் தலைமை தாங்கி முன்னெடுக்கப்படுவது என்ற பழைய வகை சனநாயக புரட்சியாக இருக்காது. பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி, விவசாயி வர்க்கத்தின் கூட்டுறவை அடிப்படையாக வைத்து பரந்துபட்ட மக்களின் புரட்சியாக ''புதிய வகைப்பட்ட சனநாயகப் புரட்சியாகவே'' இருக்க முடியுமு என்பதை 1940-இல் மாஓவால் முன் வைக்கப்பட்ட ''புதிய சனநாயகம்'' தெளிவுபடுத்தியது. இதே காலத்தில் ''சீனப் புரட்சியுமு - சீன சமுதாயமும்'' என்ற வெளியீடும் மேலும் சீன சமூகத்தைப் பற்றியும் குறிப்பான ஆய்வுகளையும் குறிப்பான புரட்சிகர வழிகளையும் முன் வைத்தது. காலனி / அரைக்காலனி நாடுகளில் நடக்கும் புதிய சனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தொடர்ச்சியும் நீடித்து நிலைப்பதன் மூலம் புதிய சனநாயக அரசு - சோசலிச அரசாக மாறும் இடைக்காலம் என்பது உறுதி செய்யப்படும் என்றார். ''சீனப் புரட்சி இரண்டு படிகளைத் தாண்ட வேண்டும். முதலாவது புதிய சனநாயகப் புடர்சி, பின்னர் சோசலிசப் புரட்சி, இவை இரண்டும் சாராம்சத்தில் வேறுபாடான புரட்சிகரப் போக்குகள். ஏக காலத்தில் வித்தியாசமானவையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைனவும் ஆகும். இரண்டாவது போக்கை அதாவது சோசலிசப் புடர்சி என்பதை முற்போக்கின் பின் அதாவது முதலாளித்துவ சனநாயக இயல்புடைய புரட்சியைப் பூர்த்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாக்கிய பின் தான் நடத்த முடியும். சனநாயக புரட்சி என்பது சோசலிசப் புரட்சிக்கான அத்தியாவசிய தயாரிப்பாகும். சோசலிசப் புரட்சியன்பது சனநாயகப் புரட்சியின் தவிர்க்க முடியாத தொடர்ச்சியாகும். இந்த இரண்டு புரட்சிக் கட்டங்களிலும் முதலாவது இரண்டாவதற்கான நிலைமைகளை வழங்குகின்றது எனவும் இந்த இரண்டும் இடையில் முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் இடையீட்டுக் கட்டம் ஒன்று ஏற்படாத முறையில் நடத்தப்பட வேண்டும், என்றும் கூறுவது சரியானது வளர்ச்சி பற்றிய மார்க்சிய தத்துவத்திற்கு இசைவானது''.

இந்நாடுகளில் காணப்படும் சமூக வளர்ச்சியின் ஏற்றத் தாழ்வின் தன்மையும் உற்பத்தி சக்திகளின் பின் தங்கிய நிலையும் இதன் விளைவாக மக்களது அரசியல் பொருளாதார கலாச்சார, சிந்தனை வளர்ச்சியையும் கவனத்தில் கொண்ட மாஓ நீண்ட கால மக்கள் யுத்த பாதை வழியே தான் மக்களது புரட்சிகர வர்க்கப் போராட்டம் வெற்றி பெற முடியும் என்பதை முன் வைத்தார். சீனத்தின் குறிப்பான வரலாற்றுக் கட்டத்தை, வர்க்க சக்திகளை மதிப்பிட்ட மாஓ குறிப்பான இராணுவ மூலோபாயங்களை தந்திரோபாயங்களை சீனத்தின் ஸ்தூல நிலையுடன் பொருத்தினார். 1928, 30-களில் வெளியிட்ட ஒரு சிறு தீப்பொறி பெரும் காட்டுத் தீயை உண்டாக்கும்'' ''சீனத்தில் சிவப்பு அரசியல் அதிகாரம் நிலைத்து நிற்க முடியும்'', சிக்காங் மலைகளின் போராட்டம்'' 1936 மா.லெ. தத்துவக் கண்ணோட்டத்தில் பழைய சீன புரட்சி அனுபவங்களைத் தொகுத்து ''சீனப் புரட்சிப் போரின் யுத்த தந்திரப் பிரச்சனைகள்'' என்பன மிகச் சிறந்த படைப்புக்களாகும். இவை குறிப்பான நாட்டின் புரட்சியை வெல்வதில் குறிப்பான இராணுவ மூலோபாயங்கள் தந்திரோபாயங்கள் பற்றியதும் மார்க்சிய லெனினியத்தின் அடிப்படை நிலைக்கும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெல்ல அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பலாத்காரப் புரட்சியே அடிப்படை என்ற பொது விதிக்கும் உட்பட்டதாகும்.

காலனி/அரைக்காலனி நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடத்தப்படும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ள புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம், சோசலிச புரட்சிக் கட்டங்களில் தொழிலாளி வர்க்கத்தின் நேச அணிகளின் அணிசேர்க்கை



யும் கூட மாறுபடும் என்பதையும் புரட்சியின் சனநாயக கட்டத்தின் போது இரட்டைத் தன்மையுடைய தேசிய முதலாளி வர்க்கத்துடன் அய்க்கியப்படவும் போராடவும் முடியும் என்பதை கொள்கை நீதியிலும் நடைமுறையிலும் நிரூபிக்கப்பட்டது. இந்த இரண்டு வேறுபட்ட புரட்சிக் காலகட்டங்களின் போது தொழிலாளி வர்க்கம் வேறுபட்ட நேச அணிகளைக் கொண்டிருக்கும் என்று இது அர்த்தப்படும். புரட்சியின் சனநாயகக் கட்டத்தின் போது இரட்டைத் தன்மையுடைய தேசிய முதலாளி வர்க்கத்துடன் ஐக்கியப்படவும் போராடவும் முடியும் என்று மாவோ கூறினார். ''தேசிய முதலாளி வர்க்கத்தின் இந்த இரட்டைத் தன்மை காரணமாக குறிப்பிட்ட காலத்திலும் குறிப்பிட்ட நிலைமைகளிலும் ஏகாதிபத்தியம், அதிகார முதலாளித்துவம், யுத்தப் பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு எதிரான புரட்சியில் அது கலந்து கொள்ளும் என்றும் புரட்சிகர சக்திகளின் ஒரு அங்கமாக அது விளங்க முடியும் என்றும் நாம் முடிவுக்கு வரலாம். ஆனால் வேறு சில வேளைகளில் எதிர்புரட்சி சக்திகளுக்கு உதவி புரிந்து அது பெரும் முதலாளி வர்க்கத்துக்குச் சேவை புரியலாம்'' என்றும் சுட்டிக் காட்டினார். இது கூட குறிப்பான நிலைமைகளில் குறிப்பான நடைமுறைகளிலும் பாட்டாளி வர்க்கத்தால் இணைக்கப்பட வேண்டும் என்பதையும் கூறினார். ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான புதிய சனநாயகப் புரட்சிப் போராட்டத்தில் கட்சி, அய்க்கிய முன்னணி, படை என்ற மூன்று பெரும் ஆயுதங்களின் அவசியத்தை கொள்கை ரீதியிலும் நடைமுறையிலும் சீனப் புரட்சியில் மிகச் சரியாக ஒன்றிணைத்துக் காட்டினார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியங்களை, காலனியாதிக்கத்தை எதிர்த்த தேசிய விடுதலைப் புரட்சியின் வளர்ச்சி, மாற்றம் மற்றும் புதிய காலனியத்தின் தோற்றம் குறித்த கண்ணோட்டங்களிலும் மாஓவின் பங்களிப்புகள் மா.லெனினிய நிலைப்பாட்டையும் திரிபுவாத நிலைப்பாட்டையும் வேறுபடுத்தி காட்டுவதாக அமைந்தது.

ஆசிய ஆப்பிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் என்றுமில்லாத உக்கிரமான ஏகாதிபத்திய, காலனியாதிக்க எதிர்ப்பு போராட்டங்கள், தேசிய விடுதலைப் புரட்சிகள் முன்னேறி வந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன. ஏகாதிபத்தியத்தையும் காலனியாதிக்கத்தையும் மிகவும் நெருக்கடிக்குள்ளாக்கியது. ஒருபுறம் சோசலிச தளங்களின் விரிவாக்கமும் சோசலிசப் பாதையில் உறுதியான முன்னேற்றமும் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் வளர்ந்து வந்த சோசலிசப் புரட்சி எழுச்சிகளும், காலனிய அரைக்காலனிய நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களும் உலக ஏகாதிபத்தியத்தை நிலைகுலையச் செய்தது உண்மையே. ஆனால் ஏகாதிபத்தியங்களும் காலனியல் வாதிகளும் தங்களது மிகப்பெரிய கொள்ளை, சுரண்டல்காடான காலனிகளையும், அரைக்காலனிகளையும், இந்நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய காலனியச் சார்பு பெரும் தரகு முதலாளி பெரும் நிலப்பிரபுத்துவ கூட்டு பிற்போக்காளர்களுடன் சமரசம் செய்து கொண்டது. ஏகாதிபத்தியத்தின் புதிய தரகர்கள், ஆட்சி அதிகாரத்தை மாற்றிக் கொண்டனர். ஏகாதிபத்தியங்களின் அரசியல் பொருளியல், ஆதிக்கமும் சுரண்டலும் தொடர்ந்தது, ஏகாதிபத்தியங்கள் தமது பழைய காலனிகளை அப்படியே புதிய காலனிகளாக தக்க வைத்துக் கொண்டன. சில நாடுகளில் பிரிட்டன் ஏகாதிபத்தியம் முன் வாசல் வழியாக வெளியே அமெரிக்க ஏகாதிபத்தியம் கொல்லைப் புற வழியாக நுழைந்து புதிய காலனிகளாக மாற்றிக் கொண்டது. பழைய காலனியாதிக்க வாதிகளுக்கும், புதிய காலனிய ஆதிக்கவாதிகளுக்கும் இடையே நடக்கும் போட்டிக்களமாக பலநாடுகள் மாறியது. அடிப்படையில் ஏகாதிபத்தியங்கள் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தின், அமெரிக்க நாடுகளையும் ஏனைய காலனிகளையும், அரைக்காலனிகளையும், படிப்படியாக தமது புதிய காலனிகளாக்கிக் கொண்டன.

குருச்சேவிய திரிபுவாதம் 1956 தொடக்கம் 1960-களிலும் முன் கொண்டு வந்த காலனியத்தின் மறைவு, தேசிய விடுதலை இயக்கங்கள் பொருளாதாரத்தில் புதிய கட்டத்தை அடைந்து விட்டது என்ற கோட்பாடும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை பின் தள்ளுகின்ற, இல்லாது ஒழிக்கின்ற, ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்கின்ற கோட்பாடாகவேயமைந்தது. பொருளாதாரத்தில் புதிய கட்டம் என்பது காலனி, அரைக்காலனி நாடுகளின் புதிய காலனிய அதிகார மாற்றத்தை அரசியல் சுதந்திரம் உண்டு, பொருளியல் சுதந்திரம், இல்லை அல்லது அரைகுறைச் சுதந்திரம். அதாவது ஏகாதிபத்தியங்களின் காலனியாதிக்கங்களி



லிருந்து அரசியல் ரீதியில் காலனி நாடுகள் சுதந்திரம் பெற்று விட்டன. பொருளாதாரத்தில் ஏகாதிபத்தியங்களில் தங்கி நிற்கின்றன என்ற மாபெரும் திரிபுகருத்தை முன் வைத்தது. இங்கே டெங்கின் மூன்றுலகத் தத்துவத்தின் திரிபுவாத வழியுங்கூட புதிய காலனிய நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை பின் தள்ளிய, திசைதிருப்பிய வர்க்க சமரசத்தைப் போதித்த மார்க்ஸிய, லெனினிய விரோதப் போக்கையும் இணைத்து அடையாளங்காண முடியும். ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகள் மீது ஏகாதிபத்தியங்கள் காலனியாதிக்கவாதிகளின் சுரண்டலும் ஒடுக்குமுறையும் வரலாற்றில் மீண்டும் சொல்லப்பட்ட சுதந்திர விதிகளையும் உடைத்துக் கொண்டு கழுத்தை நெறிக்கும் அரசியல், பொருளியல், கலாச்சார ஆதிக்கம் இன்று தான் எல்லோரினது கண்ணையும் விழிப்படையச் செய்துள்ளது. இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பின் ஏகாதிபத்தியம் புதிய புதிய சுரண்டல் வடிவங்களைக் கையாள்கிறது. ஆனால் அது புதிய காலனியமல்ல என்றவர்களும் இப்போது மறுகாலனியமென்ற புதிய கருத்தை முன் தள்ளத் தொடங்கியுள்ளனர். உண்மையில் ஏகாதிபத்தியங்களின் புதிய புதிய வடிவிலான சுரண்டல் வடிவங்களை மட்டும் புதிய காலனி பற்றிய விளக்கத்துக்கு சமன்படுத்தி விடுவதும் அல்லது புதிய காலனியென்றால் தேசிய விடுதலைப் புரட்சி முதன்மையானதாகவும், புதிய சனநாயகப் புரட்சி இரண்டாம் பட்சமாகவும் மாறி விடுகிறதோ என்ற கேள்விகளும் மறுதலையாக புதிய சனநாயகப் புரட்சி என்கிறீர்கள், தேசிய விடுதலைப் புரட்சியை கைவிட்டு விட்டீர்களா? என்ற கேள்வியும், புதிய காலனி புதிய சனநாயகப் புரட்சி பற்றிய உள்ளடக்கச் சாரத்தின் ஆழமான புரிதலிலுள்ள பலவீனங்களே தவிர வேறு ஒன்றுமில்லை. 'மா ஓ' சீன மக்களது புதிய சனநாயகப் புரட்சிக்குள்ள தேசியத் தன்மைகள் பற்றிக் கூறுகையில் இரண்டு விதமான தேசியத் தன்மைகளை விளக்கினார். ''ஒன்று, ஏகாதிபத்தியங்களுக்கெதிரான சீனநாட்டு மக்களது தேசிய விடுதலை, இரண்டு: சீனநாட்டுக்குள்ளேயுள்ள ஒடுக்கப்பட்ட எல்லாத் தேசிய இனங்களதும் விடுதலையையம் குறிக்கும்'' என்றார். புதிய காலனியத்தின் உள்ளடக்கம் பற்றி மா ஓ பின்வருமாறு விளக்கம் கூறியுள்ளார். ''உண்மைகள் தெளிவாக இருக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியவாதிகள், காலனியாதிக்கத்தைக் கைவிடவில்லை. புதிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலனியம் என்ற வடிவத்தை மட்டுமே புதிதாக மேற்கொண்டிருக்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகள் சில இடங்களில், தங்களது பழைய முறையான நேரடிக் காலனி ஆட்சி வடிவத்தைக் கைவிடுமாறும், தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலம் ஒரு புதிய வகை காலனியாட்சியையும் சுரண்டலையும் மேற்கொள்ளுமாறும் நிர்ப்பந்திக்கப் பட்டிருப்பது புதிய காலனியாதிக்கத்தின் ஒரு முக்கிய குணாம்சமாகும். அமெரிக்கா வின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள், இராணுவ முகாம்களை உருவாக்கியும், இராணுவத் தளங்களை யமைத்தும், ''கூட்டமைப்புகள்'', ''பொருளாதாரச் சமூகங்கள்'' ஆகியவற்றை நிறுவியும், பொம்மை அரசுகளை வளர்த்துவிட்டும், தங்கள் காலனி நாடுகளையும், 'சுதந்திரமடைந்த' நாடுகளையும் அடிமைப்படுத்துகிறார்கள் அல்லது கட்டுப்படுத்துகிறார்கள். பொருளாதார உதவியின் மூலமாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ இந்நாடுகளைத் தங்கள் பொருட்களை விற்பதற்கான சந்தையாகவும், கச்சாப் பொருட்களைப் பெறுவதற்கான ஆதாரமாகவும், தங்களது மூலதன ஏற்றுமதிக்கான வாசலாகவும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நாடுகளில் செல்வங்களைக் கொள்ளையடித்துக் செல்கிறார்கள். இந்நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். மேலும் அந்நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதற்கும், அந்நாடுகளின் மீது இராணுவ, பொருளாதார, கலாச்சார ஆக்கிரமிப்புத் தொடுப்பதற்க்கும் அய்க்கிய நாடுகள் சபையை (UNA) அவர்கள் ஒரு கவியாகப் பயன்படுத்துகின்றனர். அந்நாடுகளில், ''சமாதான'' முறைகளிலான தங்களுடைய ஆட்சியைத் தொடர முடியவில்லையெனில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளைச் செய்து ஆட்சிகளை மாற்றுகிறார்கள், சீர்குலைவு வேலைகளில் ஈடுபடுகிறார்கள், அல்லது நேரடியான இராணுவத் தலையீட்டையோ, ஆக்கிரமிப்பையோ நடத்துகிறார்கள்.''

புதிய காலனியத்தை உருவாக்குவதில் மிகுந்த திறமையுடனும், தந்திரத்துடனும் அமெரிக்கா செயல்படுகிறது. இதனை ஆயுதமாகக் கொண்டு அமெரிக்க, ஏகாதிபத்தியவாதிகள், பிற ஏகாதிபத்தியங்களின் காலனிகளையும், செல்வாக்கு மண்டலங்களையும் பறித்துக் கொள்ளக் கடுமையாக முயன்று வருகிறது. உலக மேலாதிக்கத்தை நிறுவ முயன்று வருகிறது.'' மாஓ இன்றய புதிய காலனியத்தின் உள்ளடக்கத்தை தெளிவாக காட்டினார்.



இந்தப் புதிய காலனியம் என்பது மிக மிக அபாயகரமானதும் கொடூரமானதுமான காலனிய வடிவமாகும்.

காலனி/ அரைக்காலனிகளில் நடந்த புதிய சனநாயகப்புரட்சியும், புதிய காலனி நாடுகளில் நடக்கும் புதிய சனநாயக புரட்சிப் போராட்டங்களும் உலக சோசலிசப் புரட்சியின் பகுதியாகவே விளங்குகிறது.

## சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கத்தின் ஐக்கியத்தை நோக்கி முன்னேறுவோம்

சர்வதேச கொம்யூனிச இயக்கத்தின் வரலாற்றிலும் பொதுவுடமை இயக்கத்துள்ளும் தொடர்ச்சியாக மார்க்சியப் பாதைக்கும் - திரிபுவாதப் பாதைக்கும் இடையேயான போராட்டம் நடந்து வந்திருக்கின்றது. திரிபுவாதத்தை எதிர்த்த கடும் போராட்டங்கள் அம்பலப்படுத்தல்கள் மூலம் மார்க்சியம் வெற்றி கண்டு வந்திருக்கின்றது. சோவியத் சோசலிசப் புரட்சிக்கு முற்பட்ட காலத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியானது அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது பலாத்கார புரட்சியின் மூலமாகவா? அல்லது பாராளுமன்ற பாதை மூலமாகவா? என்பதும் அதற்கு உட்பட்ட பிரச்சனைகளையும் மையப்படுத்தி இருந்தது. புரட்சிக்குப் பின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தொடரப்படும். வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து கொம்யூனிசத்தை நோக்கி செல்வதா? வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பதா? பற்றிய பிரச்சனையும் இருந்தது. இதில் லெனின், பெர்னஸ்டைன், காவுட்ஸ்கியின் திரிபுவாத மார்க்கத்தை முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு உள்ளடக்கத்தை அம்பலப்படுத்தி தோற்கடித்தார். சோவியத் புரட்சி மூலம், இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளும் திரிபுவாதிகளது மார்க்கம் பின் தள்ளப்பட்டது. பலாத்கார புரட்சி என்பதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தொடரப்பட வேண்டும் என்பதும் நிரூபணமாக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து திரிபுகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கைவிடச் செய்வதில் தமது புதிய புதிய வழிகளை முன் வைத்தனர். இதைப் பற்றி லெனின் ''திரிபுவாதம் என்பது விபத்தோ, தனிப்பட்ட நபர்கள் செய்கிற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாவமோ, தவறோ அல்ல மாறாக அது ஒரு முழு வரலாற்று சகாப்தத்தின் சமூக உற்பத்தி'' என்றார். மா. லெனினியத்தைப் பின் பற்றி ஸ்டாலின் கொள்கை ரீதியில் நடைமுறையில் திரிபு வாதத்தைத் தோற்கடித்தார். 1953 ஸ்டாலின் மறைவுக்குப் பின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய குருச் சேவியக் கும்பல், பெர்னஸ்டைனினதும் காவுஸ்கியினதும் வாரிசாக திரிபுவாத வழியை ஆட்சியதிகாரத்தின் துணையுடன் சோவியத்திலும் ICM இலும் முன் வைத்தார்கள். ரசியக் கட்சியின் 20-வது காங்கிரஸ் 1956-இல் முன் வைத்த ''உலக நிலைமையில் புரட்சிகர மாற்றங்கள்'' என்ற பெயரில் ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம் பற்றிய மா.லெனினிய அடிப்படையை திரிவுபடுத்தி முன் வைக்கப்பட்ட மூன்று சமாதானக் கோட்பாடும்,' 'பாராளுமன்ற பாதை மூலம் சோசலிசத்திற்கு அமைதி வழி மாற்றம்' சோசலிசத்தில் இருந்து கம்யூனிசத்திற்கு மாறுவது பற்றிய கொள்கைகளும் தெளிவாக குருச் சேவிய கும்பலின் திரிபுவாத முதலாளித்துவ மீட்சிப் பாதையை தெளிவுபடுத்தியது. மாஓ தலைமையிலான சீனப் பொதுவுடைமைக் கட்சி இந்த திரிபுவாத மார்க்கத்திற்கு எதிராக முதலில் சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்திலுள்ள சகோதர நாட்டுக் கட்சிகளுக்கு இடையிலான தோழமை உறவினைப் பேணும் வகையில் இரு கட்சிகளின் தலைமை மட்டத்தில் குருச் சேவிய திரிபுவாத மார்க்கத்திற்கு எதிரான போராட்டத்தை நடத்தினர். 1957-இல் நடந்த சர்வதேச கொம்யூனிச இயக்க கூட்டத்திலும் குருச்சேவிய திரிபுவாத வழி முன் வைக்கப்பட்டது. ''போர் இல்லாத உலகம், ஏகாதிபத்தியங்களின் நல்லெண்ணம், அமைதி வழி மாற்றம் பற்றிய மா.லெ. விரோதி கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.

குருச்சேவிய திரிபுவாதத்தை நேரடியாக அம்பலப்படுத்துவதைத் தவிர்த்து, அத்தகைய போராட்டங்களை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்தி விடக்கூடாது என்பதிலும் முதல் சோசலிச தளத்துக்குள் ஊடுருவிய முதலாளித்துவ மீட்புப் பாதையாளர்களை அடையாளம் கண்டு சோவியத் கட்சியும் மா.லெனினிஸ்டுக்களும் மூன்றாவது அகிலத்தில் உள்ள கட்சிகளும் நிராகரிக்க வேண்டும், என்பதில் மிகச் சரியான, நிதானமான வழியை மாஓவும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும் பின்பற்றியது.



கோட்பாட்டு அரங்கிலான போராட்டமாகத் தொடங்கி 1956 ஏப்ரலில் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் பற்றி மேலும் சில கருத்துக்கள்'' என்ற கட்டுரைகள் மூலம் யுத்தம், சமாதானம், ஏகாதிபத்திய, அமைதிவழியில் சோசலிசத்திற்கு மாற்றம் கொம்யூனிசத்தை அடையும் சோசலிசத்தின் இடைக்காலம் முழுவதிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆணையில் இருப்பதன் அவசியம் பற்றியும் மா.லெனினியத்தின் அடிப்படையை முன் நிறுத்தி வைக்கப்பட்டது. 1960-இல் புக்காரெஸ்ட்டு மாநாட்டில் ரசியக் கட்சியும் திரிபுவாதத் தலைமையும் சீனப் பொதுவுடைமைக் கட்சி மீதும் மா.ஓ மீதும் பகிரங்கமாக 'வறட்டுவாதிகள்' இடது தீவிரவாதிகள்; 'பிளவுவாதிகள்' எனக் குற்றம் சுமத்தி தமது திரிபுவாத முதலாளித்துவ மீட்பு வழியை மறைத்தனர்.

சீனப் பொதுவுடைமைக் கட்சியிலும் லியுசோசி தலைமையிலான சக்திகள் குருச்சேவிய திரிபுவாத மார்க்கத்தின் நிலைப்பாடுகளை முன் தள்ளினர். ஏக காலத்தில் சீனப் பொதுவுடைமைக் கட்சியிலும் சர்வதேச கொம்யூனிச இயக்கத்திலும் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ மீட்புக்களை முறியடிக்க வேண்டியிருந்தது. இதற்கான சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார அடிப்படைகளை லெனின் பலமுறை தெளிவாக முன் வைத்து வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படுவதனை வலியுறுத்தினார்.

1. தூக்கியெறியப்பட்ட சுரண்டல்காரர்கள், அவர்கள் இழந்த ''சொர்க்கத்தை'' திரும்பப் பெற ஆயிரக்கணக்கான வழிகளில் எப்போதும் முயற்சி செய்வார்கள்.

2. குட்டி முதலாளிய சூழ்நிலையில் முதலாளியத்தின் புதிய கூறுகள் தொடர்ந்து தன்னெழுச்சியாக உருவாகும்.

3. முதலாளிய வர்க்கத்தின் செல்வாக்கினாலும் எங்கும் பரவியுள்ள குட்டி முதலாளிய வர்க்கத்தின் ஊழல் சூழ்நிலையிலும் பாதிக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அணிகளிலிருந்தும் அரசாங்க ஊழியர்களிடமிருந்தும் புதிய முதலாளிய கூறுகளும் அரசியல் ரீதியாகச் சீரழிந்து போனவர்களும் தோன்றலாம்.

4. சர்வதேச முதலாளியத்தின் முற்றுகையும் ஏகாதிபத்தியத்தின் ஆயுதத் தலையீட்டு அபாயமும் அமைதியான முறையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீர்குலைவைச் சாதிக்க அவர்கள் மேற் கொண்டுள்ள சதிச் செயல்களும் ஒரு சோசலிச நாட்டில் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நிலவுவதற்கான புறச் சூழ்நிலைகளாக இருக்கின்றன.

மாஓ லெனினியத்தை இந்த அடிப்படையில் ஆழமாகப் புரிந்து கொண்டு குருச்சேவிய திரிபுவாதத்திற்கும் - லியுசோசின் உற்பத்தி சக்திகள்'' பற்றிய கோட்பாட்டினூடாக வெளிவந்த முதலாளித்துவ மீட்புப் பாதைக்கும் எதிராக தேசிய, சர்வதேசிய அளவில் பாட்டாளி வர்க்கம் பலாத்கார வழி மூலம் தான் சோசலிசப் புரட்சியை நடத்த முடியும் என்பதை, புரட்சிக்கு பின்பும் வர்க்கப் போராட்டம் தொடரப்பட வேண்டும் என்பதை முன்னிறுத்தினார். ரசியக் கட்சியின் 21-வது காங்கிரசில் குருச்சேவிய திரிபுவாதிகள் சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்துள் தமக்கு எதிராக நடந்த போராட்டங்களில் செய்து வந்த சமரசங்களையும் விட்டுக் கொடுப்பையும் முற்றாக உதறித் தள்ளி விட்டு பாட்டாளி வர்க்க கட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பவற்றைக் கைவிட்டு ''அனைத்து மக்கள் கட்சி'', ''அனைத்து மக்கள் அரசு'' என முன்வைத்தனர். அப்பட்டமாக வர்க்க சமரச வழியை முதலாளித்துவ மீட்சியை உறுதிப்படுத்தினர். உண்மையில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் சர்வதேச கொம்யூனிச இயக்கத்துள் பிறெவ்டரினாலும், டிட்டோவினாலும் உந்தித் தள்ளப்பட்டு, மா. லெனினிஸ்டுகளால் அம்பலப்படுத்தப்பட்டு வந்த வர்க்க சமரசத் தத்துவத்தினதும், முதலாளித்துவ மீட்பு கொள்கையினதும் தொடர்ச்சியும் வளர்ச்சியுமே குருச்சேவிய திரிபுவாதம் ஆகும். 1963 யூனில் சர்வதேச கொம்யூனிச இயக்கத்தின் பொது வழி பற்றி ஆலோசனைகளிலும் 1963 நவம்பரிலிருந்து 1964 செப்டம்பர் வரையிலான மாஓ தலைமையிலான சீனப் பொதுவுடமைக் கட்சி முன் வைத்த 9 விமர்சனக் கட்டுரைகள் குருச் சேவிய திரிபுவாதத்தை எதிர்த்து சர்வதேசியக் கொம்யூனிச இயக்கத்துள் நடந்த தத்துவப் போராட்டம் மாபெரும் விவாதமாகியது. இது மூன்றாவது அகிலத்திலும் புரட்சிக்கு பிந்திய காலங்களில் நடந்த திரிபுவாத முதலாளித்துவ மீட்சிக்கு எதிரான மா.ஓ.வின் மாபெரும் பங்களிப்பாகும். மா. லெனினிய தத்துவத்திற்கும் நடைமுறைகளுக்கும் மாஓ வழங்கிய பெரும் பங்க



ளிப்புக்களில் 1937 மாஓவினால் முன் வைக்கப்பட்ட ''நடைமுறை பற்றிய'' ''முரண்பாடுகள் பற்றி'' படைப்புகள் தத்துவத் துறையில் மார்க்சிய லெனினியத்துக்கு வளம் சேர்ப்பதாகும். மாலெனினிய, மாஓ சிந்தனையே உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் வழிகாட்டும் தத்துவமாக விளங்குகிறது.

சீனப் பொதுவுடமைக் கட்சிக்குள் இருந்த முதலாளித்துவ மீட்புப் பாதையாளர்கள் கட்சியில் திரிபுவாத வழியை முன் வைக்க தொடர்ந்து முயன்றனர். சீனப் பொதுவுடமைக் கட்சியின் 8-வது காங்கிரசில் லியூசோசியால் முன் வைக்கப்பட்ட 'உற்பத்திச்சக்திக் கோட்பாடும், பொருளாதார ஊக்கம், இலாபத்துடன் கூடிய உற்பத்தி, உற்பத்தியோடு இணைந்த ஊதியம் இவை முதலாளித்துவ மீட்சிக்கு பொருளாதாரத் துறை மூலம் நவீன திரிபுவாத வழியை முன் தள்ளியது. இக் கொள்கைகள் டெங்கினாலும், லின்பியாவோவினாலும் பின்னர் ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. இதற்கு லியூசோசி - டெங் கும்பல் தான் தலைமை தாங்கியது. சீன சமூகத்தில் நிலவிய முதலாளித்துவ மீட்சிக்கான சமூக அடிப்படையைப் புரிந்து கொண்டு மாஓ, அரசியலிலும் கலாச்சாரத் துறையிலும் மாபெரும் 16 அம்சத் திட்ட கலாச்சாரப் புரட்சியை நடத்தினார். இது ''நச்சுக்களைகளை வெளிவர விட்டால் தான் பிடுங்கி எறிய முடியும்'' எனக் கருதிய மாஓ'' 100 பூக்கள் மலரட்டும், 100 கருத்தோட்டங்கள் முட்டி மோதட்டும்'' இயக்கத்தையும் நடைமுறைக்க தள்ளினார். இது கலாச்சாரத் துறையில் மார்க்சிய மேம்பாட்டுக்கான இயக்கமாக அமைந்தது. சோசலிச சமூகத்தில் வர்க்கப் போராட்டங்களை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் நடத்துவதற்கும் கட்சியிலும், அரசு அதிகாரத்திலும் உள்ள முதலாளித்துவப் பாதையாளர்களை அம்பலப்படுத்தவும் தூக்கியெறியவும் புரட்சிகர மக்களுக்கு வாய்ப்பளித்தது. நவீன திரிபுவாதிகளை கலாச்சாரப் புரட்சி நிலைகுலைய வைத்தது. இது போன்ற 100 கலாச்சாரப் புரட்சிகள் நடத்தப்படுவதன் மூலமே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, வர்க்கப் போராட்டத்தை சோசலிச சமூகத்தில் ஆணையில் வைப்பதன் வழியே கம்யூனிசத்தை அடைய முடியும். இவையனைத்தும் ஐ.சி.எம்.க்கும் மார்க்சிய - லெனினியத்திற்கும் மாஓவின் சிறந்த பங்களிப்பாகும். 1968-இல் சோசலிசப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியின் வெற்றிபற்றி மாஓ இவ்வாறு கூறினார். ''லெனினிய கண்ணோட்டத்தின் படி ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றிக்கு உள்நாட்டு பாட்டாளி வர்க்கத்தினதும் பரந்துபட்ட மக்களினதும் முயற்சிகள் தேவை என்பது மாத்திரமல்ல. உலகப் புரட்சியின் வெற்றி முழுப் பூகோளத்திலும் மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பு அழித்தொழிக்கப்படுதல் ஆகியவற்றிலும் அது தங்கி இருக்கின்றது. அப்பொழுது முழு மனித குலமும் விமோசனம் பெற முடியும்.''

1976-இல் மாஓவின் மறைவுக்குப் பின் சீனத்தில் குவாகோ பெங் - டெங் கும்பல் ஆட்சியையும் கட்சியையும் கைப்பற்றினார்கள். கலாச்சாரப் புரட்சியின் போது இரண்டு தடவை அதிகார ஆசனங்களில் இருந்து முழவதுமாக கீழ் இறக்கப்பட்ட டெங்கும் - மற்றைய முதலாளித்துவ மீட்புப் பாதையாளர்களும் குவாகோ பெங்கை சிறிது காலம் முன்னிறுத்தி நவீன திரிபுவாதத்தை சீ.பொ. கட்சிக்குள்ளும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும் புகுத்தினர். கட்சிக்குள் இருந்த சோசலிசப் பாதையளார்கள் குவாகோபெங்கின் அதிரடி நடவடிக்கையின் மூலம் சிறையிடப்பட்டனர். ''நால்வர் கும்பல்'' என அவதூறும் செய்யப்பட்டது. அதே வேளை சீன வெளிநாட்டு அமைச்சு திரிபுவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. அதே வேளை மாஓவை கடவுளாக்க முயன்றனர்.

1967 அய்க்கிய நாடுகள் சபையில் டெங்கால் தவறுதலாக விளக்கம் கொடுக்கப்பட்டதாக கூறப்பட்ட ''மூன்றுலகத் தத்துவக் கொள்கை'' சீ.பொ. கட்சியின் 11-வது காங்கிரசில் குவாகோ - பெங், டெங் கும்பலால் மீண்டும் வெளியிடப் பட்டது. ''நான்கு நவீன மயமாக்கல்'' கொள்கையும் திட்டவட்டமாக சீனத்தையும் நவீன திரிபுவாதப் பாதைக்கு முதலாளிய மீட்புக்கு கொண்டு செல்ல கோட்பாட்டு ரீதியாக தயார் செய்யப்பட்டது. மாஓ சிந்தனை, மாஓ சகாப்தம், புதிய சகாப்தம் என்ற பெயரில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழியாக டெங் - குவாகோ - பெங் கும்பல் முன்வைத்த மூன்றுலகத் தத்துவம் மீண்டும் ஒரு முறை திரிபுவாத வழி ஆதிக்கத்துக்கு வந்ததை உணர்த்தியது. இன்று வரை நேரடியாகவும் மறைமுகமாகவும் இதன் தாக்



கம் உள்ளது. உண்மையில் சோசலிச சீன அரசின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்புக்கு உதவியாகவும் உலகில் வேறுபட்ட சமூகங்களில் காணப்பட்ட வேறுபட்ட சமூக அரசியல் பொருளாதார நிலையை புரிந்து கொள்ளவும் அவற்றுடனான குறிப்பான உறவுகளை சோசலிச அரசு கையாள்வதற்கும் ஆக மாஓவால் உலகை மூன்று விதமாக வகைப்படுத்தி அணுகினார். இதே அணுகுமுறை 1920-களில் லெனினாலும் கூட அன்றைய சூழலில் இருந்து வகைப்படுத்தி அணுகப்பட்டது. ஆனால் லெனினோ, மா.ஓவோ அவற்றை உலக பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான பொதுக் கொள்கையாக அறிவித்ததில்லை. கூடவே சர்வதேசிய கொம்யூனிச இயக்கத்தில் பொதுக் கொள்கையாக முன் வைப்பது பற்றி சிந்தித்ததும் இல்லை. ஆனால் குவாகோபெங், டெங் நவீன திரிபுவாதக் கும்பல் பொதுக் கொள்கையாக அறிவித்து அதை நியாயப்படுத்தும் பிரச்சாரத்தாலும் மா.ஓ.வின் கொள்கையாக அதைக் காட்டும் மிகக் கேடு கெட்ட செயலில் ஈடுபட்டது. உலக சோசலிசப் புரட்சியின் வழியை குருச்சேவிய பழைய திரிபுவாதம் பாட்டாளி வர்க்கத்தையும் புரட்சிகர மக்களையும் ''அமைதி வழி மாற்றம்'' பற்றிய திரிபுவாத வழி மூலம் முதலாளித்துவம் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் அடையக் கோரியது. டெங்கின் நவீன திரிபுவாதம் புரட்சிகரச் சூழல், புறநிலையிலும் அக நிலையிலும் பக்குவப்பட்டுள்ளது மிக மிக வேகமான ஆயுத எழுச்சிகள், போராட்டங்கள் மூலம் சோசலிசப் புரட்சியை நடத்த விட முடியும் என்று கூறி மாஓவின் நீண்ட கால மக்கள் யுத்த வழியை சாரம்சத்தில் திசை திருப்பியது. மூன்றுலகத் தத்தவத்தை கொண்டு இரு வல்லரசுகளில் ரசிய சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்க்க அமெரிக்க எகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்தல், இரண்டாவது உலக ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்தல், உள்நாட்டில் ஏகாதிபத்திய முகாம்களின் பிரிவுகளில் ரசிய அல்லது அமெரிக்க பிற்போக்கு கூட்டத்துடன் அய்க்கிய முன்னணி கட்டுவது. வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு வர்க்க சமரச வழிகளை கடைப்பிடிப்பது என்ற நிலையை புரட்சிகர மக்களுக்கும் கட்சிக்கும் போதித்தது. இது சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. குருச்சேவிய கும்பலின் பழைய திரிபுவாதத்துக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிராக உறுதியுடன் மா. லெனினியத்தின் பக்கம் நின்று போராடி வந்த சர்வதேசிய புரட்சிகர கொம்யூனிஸ் இயக்கத்தையும், கட்சியையும், மீண்டும் மூன்றுலகத் தத்துவமும், டெங் கும்பலின் நவீன திரிபுவாதமும் திசை திருப்பியது. சீன திரிபுவாதிகளின் இந்த நவீன முதலாளித்துவ மீட்பு வர்க்க சமரச கோட்பாடுகளை அம்பலப்படுத்தி இலங்கை உட்பட உலகளவில் மா.லெ. புரட்சியாளர்களில் ஒரு பகுதியினர் சரியான நிலைப்பாட்டை எடுத்தும் வரலாறு அறிந்ததே. இது ஒரு உலகு தழுவிய இயக்கமாக மாற முடியவில்லை. ஆனால் மிக விரைவில் இவர்களில் ஒரு பகுதியனர் மீண்டும் அல்பேனியத் தொழிலாளர் கட்சியின் என்வர் கோக்சா எடுத்த நிலைப்பாடுகளின் பின் திசை திரும்பி சீரழிந்தனர். 1977-இல் ''ஏகாதிபத்தியமும் புரட்சியும்'', சீனாவைப் பற்றிய பிரதிபலிப்புகள்'', என்ற நூலகள் மூலம் ''என்வர் கோக்சா'' மா. லெனினியத்தின் அடிப்படைகளைத் திரித்தும் மாஓவின் பங்களிப்புக்களைக் கொச்சைப்படுதுதியும் திரிபுவாத முகாமுடன் தன்னை இணைத்துக் கொண்டது. இன்றும் கூட அய்ரோப்பிய நாட்டு கட்சிகளிடமும், அய்ரோப்பாவிலுள்ள இலங்கையைச் சேர்ந்த புரட்சிகரக் குழுக்கள், பத்திரிகைகள் சிலவும் மா. லெனினிய மாஓ சிந்தனையை கேள்விக்குள்ளாக்குவது, வளர்ப்பது என்ற பெயரில் மார்க்சிய விரோத திரிபுவாத நிலைப்பாடுகளில் என்வர் கோக்சாவின் கருத்தியல் தாக்கங்கள் நிலவுகின்றது. தேசியளவிலும் சர்வதேசியளவிலும் பாட்டாளி வர்க்க புரட்சிகர சக்திகளின் பொதுச் திசை வழியை தமது நாட்டின் குறிப்பான திசைவழியை உருவாக்குவதில் ''குருச்சேவிய - டெங் திரிபுவாத வழிகளும்'' என்வர் கோக்சாவின் மார்க்சிய விரோத நிலைப் பாடுகளிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் தெளிவான நிலையை எடுத்தாக வேண்டியுள்ளது.

மா.லெ. மாஓ சிந்தனை, அதன் மூலவர்கள், புரட்சிகர பொதுவுடமை இயக்கங்கள் மீது சுரண்டும் வர்க்கங்களும் ஏகாதிபத்தியங்களும் கொம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரங்களை ஒரு கையால் விண்ணை முட்டும் அளவுக்கு நடத்துகின்றனர். மறு கையால் அரசுயந்திரங்களைக் கொண்டு புரட்சிகர போராட்டங்களை உக்கிரமாக நசுக்குகின்றனர். வகைவகையான இடது திரிபுகள், நவீன இடதுகள், ட்ராஸ் கியர்கள், சீர்திருத்திவாதிகள் பாட்டாளி வர்க்க தத்துவத்தை திரிபுபடுத்தி வர்க்கப் போராட்ட நடை



முறைகளை எதிர்த்து புரட்சிகர மக்களையும், இயக்கத்தையும். ஆளும் பிற்போக்க வர்க்கங்களுடன் ஏகாதிபத்தியங்களுடன் தமக்குள்ள சமரசவாதி போக்கில் இழுத்துச் செல்ல கடும் பிரயத்தனம் செய்கின்றனர். இன்னோர் வகை முதலாளித்துவ - ஏகாதிபத்தியங்களால் உலகளவில் இயக்கப்படும் தன்னார்வக் குழுக்கள் (VOA) நிதி நிறுவனங்கள் (Action Groups), மனித உரிமை அமைப்புகள் இவையெல்லாம் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சனைகளில் போராட்டங்களில் ஏகாதிபத்தியங்கள் பிற்போக்களர்களின் மீட்பர்களாக, எதிர் புரட்சி கூட்டமாக செயல்படுவார்கள். ''சனநாயகம், சமாதானம், நல்லிணக்கம், அதிகாரத்துவ எதிர்ப்பு, வன்முறை எதிர்ப்பு, கட்சியும் அரசியலும் புறக்கணிப்பு, போன்ற தத்துவங்களை சுரண்டும் வர்க்கத்திற்கு சார்பாக உலகளவில் முன் தள்ளுகின்றனர். கூடவே பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கங்கள், மா.லெ.மா.ஓ.சிந்தனை மீதும் குறி வைத்து தாக்குகின்றனர்.

சர்வதேச அளவில் மக்களது புரட்சிகரப் போராட்டங்கள் மீதும் புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சிகள் மீதும் ஆளும் வர்க்க அரசுகளும் எகாதிபத்தியங்களும் அடக்கு முறையை உச்சளவில் கட்டவிழ்த்து விட்டுள்ளது. மறுபுறம் பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கம் தத்துவ, அரசியல், அமைப்பு நடவடிக்கைகளிலும் தேக்க நிலையில் பெரும் தடைகளை முகம் கொள்கிறது. கட்சிகள் பல வருடா வருடம் உடைவுக்குள்ளாகிறது. புரட்சிகர ஆதரவு சக்திகள் உதிர்ந்து செல்கிறது. வர்க்க உணர்வுடன் உறுதியுடன் நின்று எதிரிகளை எதிர்த்து இராணுவ ரீதியிலும் கூட உக்கிரமாக போராடுகிற போதிலும், தோழர்களின் தியாகங்கள் மலையளவு வளர்ந்து செல்கிற போதும் எதிரியை எதிர்த்த போராட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கையை அளிக்கும் விதத்தில் முன்னேற்றம் இல்லை. அக நிலை தேக்கங்களும் உடைக்கப்பட முடியாததாக உள்ளது.

அடிப்படையில் சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பொதுவழியிலும், குறிப்பான நாட்டு புரட்சிகரப் போராட்ட அரசியல், அமைப்பு வழியிலும் இராணுவ வழியிலும் ஆதிக்கம் செலுத்தி வரும் மா.லெ. மாஓ. சிந்தனைக்கு முரண்பாடான தத்துவப் போக்கு அரசியல், அமைப்பு, முறைகள் பலம் பெற்று நிற்பதையே காட்டுகிறது. மார்க்சிய லெனினியப் பாதைக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முரணான சிறிய அளவானாலும், பெரிய அளவானாலும் அதன் தவறுகளை குறிப்பாக தத்துவார்த்த மட்டத்தில் தொடங்கி திருத்தியாக வேண்டும். அது மட்டும் தான் சர்வதேசிய, தேசியஅளவில் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களின் வர்க்கப் போராட்ட வளர்ச்சிக்கும் தேசிய, சர்வதேசியஅளவிலான பாட்டாளி வர்க்க புரட்சிகர சக்திகளின் அய்க்கியத்துக்கும் உலகுதழுவிய பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்க முன்னேற்றத்திற்கும் உத்தரவாதமளிக்கும்.

இதற்கு முதலில் மா.லெ.மாஓ. சிந்தனையின் அடிப்படையை தெளிவாக நிலை நிறுத்த வேண்டியுள்ளது. மா.லெ. மா.ஓ. சிந்தனைக்கும், மார்க்சிய விரோதவழிக்கும், எல்லா வகை திரிபுவழிக்கும் இடையிலான எல்லைக் கோட்டை நிறுவ வேண்டியுள்ளது. இதனடிப்படையில் இன்று சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழியிலும் தத்தமது நாட்டு பாட்டாளி வர்க்க கட்சியின் அரசியல், அமைப்பு வழியிலும் உள்ள தவறுகளை சீர் செய்ய வேண்டியுள்ளது. எல்லாவகை வர்க்க சமரச வழிகளையும் கோட்பாட்டளவிலும் நடைமுறையிலம் விட்டுக் கொடுப்பின்றி, முறியடித்து முன்னேற்ற வேண்டும். இதனது நிராகரிக்க முடியாத தேவையை சர்வதேசியஅளவில் புரிந்துள்ள பாட்டாளி வர்க்க புரட்சியாளர்கள், கட்சிகள், ஸ்தபானங்கள் இவ் மாபெரும் முயற்சியை தொடக்கி வெற்றி கொள்வதில் மா.ஓ. நினைவு நூற்றாண்டு, மைல் கல்லாக விளங்க வேண்டும். மார்க்சிய - லெனினிய மாசேதுங் சிந்தனை, பாட்டாளி வர்க்கம் உலகை அறிந்து கொண்டு அதை மாற்றுவதற்கான பலம் வாய்ந்த ஆயுதமாகவும் வரலாற்று முன்னேற்றத்தை உந்தித் தள்ளுவதற்கான பலம் மிக்க ஆயுதமாகவும் திகழ்கின்றது. மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை கோடானுகோடி புரட்சிகர மக்களுடன் கட்சிகளுடன் ஒன்றினைக்கப்பட்டதும், அது அனைத்து நாட்டு மக்களினதும் புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் ஒன்றினைக்கப்பட்டதும் பழைய உலகம் முழுவதையும் தவிடு பொடியாக்க வற்றாத புரட்சி ஆற்றலைக் கொண்டு வருவது நிச்சயம்!

தலைமைக்குழு - 26-12-1994
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்.



# தோழர் மா.சே.துங் நினைவு நூற்றாண்டு சர்வதேச கருத்தரங்கு

இந்தியாவிலுள்ள கேரள மாநிலத்தின் எர்ணாகுளம் என்னுமிடத்தில் 26.12.1994-இல் இ.பொ.க. (மா.லெ) செங்கொடியின் முன் முயற்சியால் கூட்டப்பட்ட தோழர் மாஓ நினைவு நூற்றாண்டு கருத்தரங்கு சிறப்பான முறையில் நடந்தது. அதில் நேபாள் கொம்யூனிஸ்ட் கட்சி (மஷால்) சார்பில் தோழர் அஜய்சர்மாவும், இலங்கைப் பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகத்தின் சார்பில் தோழர் நசீரும் கலந்து கொண்டு கட்டுரை படித்தனர். செங்கொடி சார்பில் தோழர் சேமசேகரன் ''சர்வதேச கொம்யூனிஸ்ட் இயக்கம் எதிர் கொண்டுள்ள சவால்களும் தொழிலாளி வர்க்க அணுகுமுறையும்'' என்ற முக்கிய கட்டுரையை சமர்ப்பித்தார்.

இக் கருத்தரங்கின் நோக்கத்தை வாழ்த்தி வரவேற்று ஜெர்மன் கொம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) துருக்கி, குர்திஸ்த்தான், போல்சுவிக் கொம்யூனிஸ்ட் கட்சி மற்றும் 17 கொம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்த ''ஜொயின்ட் கோர்டினேஷன் குருப் ஒப் இண்டர்நஷனல் கொன்பரன்ஸ் ஒப் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் பார்ட்டிஸ் அண்டு ஓர்கனைஷேசன்'' என்ற சர்வதேச அமைப்பும், பிரான்சில் இயங்கும் தமிழ் அகதிகள் இலக்கிய வட்டமும் (சமர்) வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தன.

யுத்தங்களில் நீதியான யுத்தங்கள் அநீயான யுத்தங்கள் என இரண்டு வகை உண்டு என்பதை வரலாறு காட்டுகின்றது. முற்போக்கான எல்லா யுத்தங்களும் நீதியானவை, முற்போக்கைத் தடுக்கும் எல்லா யுத்தங்களும் அநீதியானவை. கம்யூனிஸ்டுக்களாகிய நாம் முற்போக்கைத் தடுக்கின்ற அநீதியான யுத்தங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கின்றோம். ஆனால் முற்போக்கான, நீதியான யுத்தங்களை நாம் எதிர்ப்பதில்லை. கம்யூனிஸ்டுக்களாகிய நாம் நீதியான யுத்தங்களை எதிர்க்காதது மாத்திரமல்ல அவற்றில் ஊக்கமாகப் பங்கும் ஆற்றுகின்றோம். அநீதியான யுத்தங்களைப் பொறுத்த வரையில் முதலாவது உலகப் போர் ஒரு உதாரணமாகும். இதில் இரு தரப்பும் ஏகாதிபத்திய நலன்களுக்காகப் போரிட்டன. எனவே உலக கம்யூனிஸ்டுக்கள் அனைவரும் அந்த யுத்தத்தை உறுதியாக எதிர்த்தார்கள். இத்தகைய ஒரு யுத்தத்தை எதிர்க்கும் வழி, அது வெடித்தெழுவதற்கு முன் அதைத் தடுக்க சாத்தியமான அனைத்தையும் செய்வதே. அது ஒருக்கால் வெடித்ததும் சாத்தியமான போதெல்லாம் யுத்தத்தை யுத்தத்தால் எதிர்க்க வேண்டும். அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தத்தால் எதிர்க்க வேண்டும்.

மாசேதுங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ☆ மக்கள் பிரச்சனைக்கு – மதமும், மதவாத தலைவர்களும் தீர்வை கொடுக்க முடியாது ☆

வல்லரசுகளின் கைக் கூலியான 2-வது போப்பரசர் ஜோன்போல் வல்லரசுகளின் நலன்களைப் பாதுகாக்கும் பிரச்சாரம் செய்யும் பொருட்டு, அண்மையில் சில தெற்காசிய நாடுகளிற்கு வருகை தந்த போது இலங்கை வந்திருந்தார். உலகில் உள்ள 900 மில்லியன் கத்தோலிக்க மக்களின் இரட்சகன் எனக் கூறிக் கொள்ளும் போப்பரசர் ஜோன்போல் ஏனைய மதங்களான இஸ்லாம், இந்து, பௌத்த மதங்களின் மேலும், அந்த மத போதகர்கள் மேலும், அந்த மதங்களைப் பின்பற்றும் மக்கள் மேலும் மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சித்து, பல புனைவுகளைக் கொண்டு அண்மையில் ஒரு புத்தகம் வெளியிட்டார். அந்தப் புத்தகம் வெளிவந்தவுடனேயே அதை எதிர்த்து இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மலேசியா போன்ற நாடுகளில் மற்றைய மத தலைமைகள் போராட்டம் நடத்தினர். கொழும்பிலும் கண்டியிலும் பௌத்த மத பீடங்களுக்குப் பின்னால் அணிதிரண்டு ஆயிரக் கணக்கானவர்கள் ''போப்பரசர் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என்றும், 'புத்தகத்தில் பௌத்த மதத்தைப் பற்றி எழுதிய விடயங்களை திரும்பப் பெற வேண்டும்'' என்றும் போராட்டம் நடத்தினர். அத்துடன் போப்பரசின் இலங்கை வருகைக்கு அனுமதிக்க கூடாது'' எனவும் சந்திரிகா அரசை நிர்ப்பந்தித்தனர். ஆனால் சந்திரிகா அரசு புத்திசாலித்தனமாக தமிழ் கட்சிகளுடனும் எதிர்க் கட்சியுமான யு.என். பி.யுடனும் மற்றும் இந்து, இஸ்லாம் மதத் தலைமைகளுடனும் சமரசமாகப் பேசி போப்பரசர் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வரவேற்றது. பௌத்த சங்கங்கள் போப்பரசர் இலங்கை வரும் நாளை துக்கதினமாகவும், எதிர்ப்பு தெரிவித்து பகிஷ்கரிக்கும் படி கேட்டுக் கொண்டு எதிர்த்து ஊர்வலமும் நடத்தினர். அன்றை நாளை சந்திரிகா அரசு விடுமுறை நாளாக அறிவித்து விட்டது.



போப்பரசரின் இலங்கை வருகை சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக என்று கூறப்பட்டது. பொஸ்னியாவிற்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் ஜோன்போல் சென்ற பின்பு தான் சமாதானம் ஏற்பட்டதாகவும், அதே போல் இலங்கை வருகையும் பிரமாண்டமான பிராத்தனையும் சமாதானத்தைக் கொண்டு வர என கூறப்பட்டது. பொஸ்னியாவினதும் லத்தீன் அமெரிக்க நாடுகளினதும் இன்றைய நிலை என்ன என்பது போப்பரசர் ஜோன்போல் உட்பட உலக மக்கள் எல்லோருக்கும் தெரியும்.

குடாநாட்டில் இருந்து போப்பரசரைத் தரிசிக்கவென்று சுமார் 4000 பேர் வரை கொழும்புக்கு வருவதற்கு எல். ரீ.ரீ.ஈ., அனுமதி கொடுத்து இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு மக்கள் சென்று வருவதற்கு தடைவிதிக்கும் எல்.ரீ.ரீ.ஈ. போப்பரசரை தரிசிப்பதற்கு மட்டும் எந்த வித கெடுபிடியும் இன்றி அவர்கள் பின்பற்றி வரும் போக்குவரத்து சட்டவிதிகளும் மாற்றியமைக்கப்பட்டு போக்குவரத்துக்கும் பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். கூடவே போக்குவரத்துக் கட்டணத்தையும் சரிபாதிக்கு மேல் குறைத்து போப்பரசரின் வருகைக்கு பச்சைக் கொடி காட்டினர். சில வேளை போப்பரசர் வத்திக்கானில் (ரோம்) இருந்து சமாதானத்தை எடுத்து வந்திருப்பார் என அவர்களும் நம்பியிருக்கலாம்.

சமூக பொருளாதார ஒடுக்கு முறையாலும் தேசிய, இன அடக்குமுறைகளாலும் மக்கள் தமது விடுதலைக்கான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் போது, அதற்கான காரணங்களை மக்கள் ஆராயவிடாது மதம் என்ற போர்வையில், மக்களை அறியாமையில் மூழ்கடித்து, போராட்டங்களின் நியாயத்தை திசை திருப்பி விடுவதையே தமது வாழ்வின் விதியாகக் கொண்டவ எல்லா மத நிறுவனங்களும் சுரண்டும் வர்க்கங்களும் அரசுகளும் எந்தக் காலத்திலும் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

இலங்கையில் போப்பரசரின் வருகையை எதிர்த்து போராட்டம் நடத்திய பௌத்த சங்கங்கள் மதவாத, இனவாதக் கருத்துக்களை முன்னிறுத்தியே இயங்குகின்றன. ஆளும் அரசுகளுடன் தம்மைக் கூட்டிணைத்துக் கொண்டு, தமிழ் தேசிய இன மக்கள் மேல் இன ஒடுக்கு முறை யுத்தத்தை நடத்திக் கொண்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருக்கடியில் சிக்கியுள்ளது. விலைவாசி உயர்வு, நாணய மதிப்பிறக்கம், வேலையில்லாப் பிரச்சனை, வரவு செலவு திட்ட பற்றாக்குறை அதிகரிப்பு, வெளிநாட்டு கடன் வட்டி பெருமளவு உயர்ந்திருப்பது, அன்னியச் செலாவணி பற்றாக்குறை, இராணுவத்துக்கு செலவிடும் தொகை எல்லையின்றி உயர்வது, கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம், மானியங்களுக்கு வழங்கி வந்த நிதி உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் இவற்றின் கட்டளைக்கு அடிபணிந்து பெருமளவு வெட்டு செய்தது. இவற்றுடன் யுத்த பாதிப்புக்கள் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் இவை எல்லாம் சமூக பொருளாதார நெருக்கடியை, மக்களின் கொந்தளிப்பை வேகப்படுத்தியது. 1977-இல் யூ.என்.பி. கொண்டு வந்த ''திறந்த பொருளாதார கொள்கை, தாராள இறக்குமதிக் கொள்கை, சர்வதேசியம் மயமாக்கல், நவீன மயமாக்கல் கொள்கை, அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கல், அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்க்கு முன்னுரிமைக் கொள்கைகள்,'' இவை இலங்கையின் பொருளாதாரத்தில் கடந்த 17 ஆண்டுகளில் கடைபிடிக்கப்பட்டு வந்தவை. இக்கொள்கைகள் உள்நாட்டு பொருளாதாரத்தை என்றுமில்லாதவாறு நிலைகுலையச் செய்துள்ளது. சர்வதேசளவிலும், பிராந்தியளவிலும் நடந்து வரும் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் பொருளியல் போட்டியில் தாக்கு பிடிக்க முடியாத இலங்கையின் தொழில், வணிக முதலாளி வர்க்கமும், நிதி நிறுவனங்களும் தங்களது நெருக்கடியை சீர் செய்து கொள்ள வேண்டியிருந்தது. வல்லரசு நாடுகளின் பல்தேசிய கொம்பனிகளும், தேசங்கடந்த தொழில் கழகங்களும் மூன்றாம் உலக நாடுகளுக்கு கடன் வழங்கும் நிதி நிறுவனங்களும், நாடுகளும் தங்களது நவகாலனிய பிடிப்புக்குள் இலங்கையை மேலும் இறுக்கி கொள்வதற்கு தங்களது பொருளாதார சுரண்டலை, அதிகாரத்தை விஸ்தரிப்பதற்கு அதற்கு தடையாகவுள்ள, யுத்தத்தை - சமூக பிரச்சனைகளை வரையறைக்குட்பட்டு சுரண்டல், ஒடுக்குமுறை நோக்கில் சீரமைத்துக் கொள்ள விரும்பகின்றன. இதன் மூலமே நாட்டிலுள்ள இயற்கை வளங்களை தேடித்தேடி கொள்ளையிடவும், உற்பத்தியில் சுரண்டலையும், சந்தையில் அதிகலாபத்தை அதி



# ☆ இந்திய எம்.எல். கட்சிகள் உறவும், ம.ஜ.இ.க. வெளியீடும் ☆

இலங்கையில் இனப் பிரச்சனை கூர்மையடைந்து 1983-இலிருந்து யுத்தமாக மாறியது. சிறீலங்கா அரசின் இனப்படு கொலைகளும், இன ஒடுக்குமுறை யுத்தமும், அரசை எதிர்த்த தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் உலகளவில் மக்களாலும், ஆளும் வர்க்க அரசுகளாலும் கூர்ந்து கவனிக்கப்பட்டது. இந்து மாசமுத்திரத்தில் பூகோள ரீதியாக, அரசியல் பொருளியல் இராணுவ பலத்தில், மக்கள் தொகைப் பெருக்கத்தில் பெரும் நாடான இந்தியாவிலும் இலங்கைப் பிரச்சனை முக்கியத்துவமான விவகாரமாகியது. இந்திய ஆளும்வர்க்கங்களும் அரசும், அரசியல் கட்சிகளும் தங்களது பிராந்திய விரிவாதிக்க நோக்கில் இலங்கை இனப்பிரச்சனையில் தலையிட்டது - தலையிட்டுவருகின்றது. (இந்திரா காந்தி முதல் ராவ் வரை என்ன செய்கிறார்கள் என்பது தனியான விவகாரம்)

இந்தியாவில் இந்தியரசையும், ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து போராடும் புரட்சிகர மக்களும், தேசிய இன விடுதலை இயக்கங்களும், குறிப்பாக திரிபுவாத கொம்யூனிஸ்ட் கட்சிகளும், எம்.எல். கட்சிகளும் தங்களது சர்வதேசிய, தேசிய கண்ணோட்டங்களிலிருந்து இலங்கை இனப்பிரச்சனை குறித்த தங்களது நிலைப்பாடுகளை மக்களிடம் முன்னேடுத்து சென்றனர். தமிழீழ போராளிகளுக்கும், அகதியாக சென்ற மக்களுக்கும் உணர்வுடன் உதவி வந்தனர். - வருகின்றனர். போராளி இயக்கங்களுக்கு அரசியல் வகுப்பு பட்டறைகள் நடத்தியும் உள்ளனர். தமிழீழ குட்டி முதலாளித்துவ இயக்கங்களை பொறுத்தவரை மத்திய, மாநில அரசுகளுடன் ஆளும் வர்க்க கட்சிகளுடன், இன, மொழி, விடுதலை அமைப்புகளுடன், சில இயக்கங்கள் சி.பி.அய்., சி.பி.அய். (எம்) போன்றவற்றுடன் தான் நெருங்கிய உறவு வைத்திருந்தனர். எம்.எல். கட்சிகளின் தமிழிழ கோரிக்கைக்கு சார்பான வெளியீடுகளை மட்டும் பயன்படுத்தி இயக்க உள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணிகளிடம் தலைமைகள் எம்.எல். உடன் தொடர்பு வைத்திருப்ப
தாக காட்டிக் கொண்டதற்கு மேல் எதுவும் இல்லை. தங்களின்
தவறான அரசியல் கொள்கைகளை நடைமுறைகளை வெளிப்ப
டுத்திய எம்.எல். கட்சி வெளியீடுகளை இயக்கத்துக்குள்ளே
தடை செய்ததும், சில எம்.எல். தோழர்களை பயமுறுத்திய சம்ப
வங்களும் உண்டு. இப்படி தமிழிழ குட்டி முதலாளித்துவ இயக்
கங்களின் ''பயன்பாட்டு தத்துவம் தெளிவாகவே
செயல்பட்டது.

ஆனால் தமிழ்நாட்டில் இயங்கிவந்த எம்.எல். கட்சிகள்,
முற்போக்கு தேசிய இன விடுதலை அமைப்புக்கள் அன்றிலி
ருந்து இன்று வரை சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்
தத்தை எதிர்ப்பதில் தமிழிழ மக்களின் போராட்டத்தை,
போராளி இயக்கங்களை ஆதரிப்பதில் இந்திய அரசின் விரிவா
திக்க நோக்கம் உள்ள நேரடி - மறைமுக தலையீட்டை எதிர்ப்ப
தில் இவை பற்றிய தங்களது கொள்கைகளை மக்கள் முன்
வைத்து பிரச்சாரம் செய்கிறார்கள். மத்திய, மாநில அரசுகளின்
கொடிய அடக்குமுறைகளை மீறியும் செயல்படுகிறார்கள். இந்
திய இலங்கை ஒப்பந்தத்தை இந்திய அமைதி காப்பு படையின்
ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்ப்பதில், ராஜீவ் கொலைக்கு பின்
தமிழீழ அகதிகள், போராளிகள் மேல் தொடுக்கப்பட்டுள்ள
அடக்கு முறைகளை, பொய்ப்பிரசாரங்களை எதிர்ப்பதில், அம்
பலப்படுத்துவதில், இன்று சந்திரிகா அரசாங்கம் கடைப்பிடித்
துள்ள சமாதானம் அமைதி குறித்த ஏமாற்றுக்களை, இந்தியரசின்
சதி நடவடிக்கைகளை, இலங்கைப் பிரச்சனையின் உண்மை
நிலையை, தமிழீழ போராளி இயக்கங்களின் தவறுகளை மக்க
ளின் துன்ப துயரங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி
வருகின்றனர்.

சந்திரிகா அரசாங்கம் - விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்
தைகள் மோதல் நிறுத்த ஒப்பந்தம், குறித்த எம்.எல். கட்சிகள்
தமது கண்ணோட்டத்தை கட்சியின் வெகுசன இயக்க வெளியீடு
கள் முன் வைத்திருக்கின்றன. (உம்) முன்னோடி, நீண்ட பயணம்
புதிய சன நாயகம், ம.ஜ.இ.க.வின் விசேட வெளியீடு என்பன...
இவை சந்திரிகா அரசின் சமாதான கொள்கையின் சர்வதேச பின்
புலங்களை அரசு - புலிகள் பேச்சுவார்த்தைகளின் போக்கு சமா
தானம் குறித்தும், தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைப்



போராட்டம் தொடர வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றன.
தமிழ்நாட்டில் தமிழீழ போராட்டத்தின் நியாயம். விடுதலைப்பு
லிகள் தலைமையில் நடக்கும் போராட்டத்துக்கும் போராளிக
ளுக்கும் ஆதரவு கொடுப்பதில் சுயநலவாத ஆளும் வர்க்க திரா
விட கட்சிகள், திரிபுவாத கொம்யூனிஸ்ட் கட்சிகள், தேசிய கட்சி
கள், மாநிலக் கட்சிகள் எல்லாம் தங்களது ''போலி முகங்களை
மௌனமாக'' மக்களுக்கு காட்டுகையில் பாட்டாளி மக்கள்
கட்சி, மக்கள் கல்வி இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடு
தலை இயக்கம் வேறு சில மொழி, இன விடுதலை அமைப்புக
ளும் மட்டுமே ஒரளவு தமிழீழ மக்களின், போராட்டத்தின்
உண்மை நிலவரங்களை சொல்ல வருகின்றார்கள். மத்திய
மாநில அரசுகளின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை
கண்டிக்கிறார்கள்.

இ.பொ.க. (மா.லெ) மக்கள் யுத்தம், இ.பொ.க. (மா.லெ)
மாநில அமைப்பு கமிட்டி, தமிழ்நாடு அமைப்பு கமிட்டி (இன்று
தமிழ்நாடு மாநில கட்சி) இ.பொ.க. (மா.லெ) செங்கொடி,
தமிழ்நாடு பொதுவுடமைக் கட்சி, இக்கட்சிகள் தமிழக மக்க
ளின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆதரிப்பதிலும், இது
ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாகவே இருக்க வேண்டும்.
இப் போராட்டத்தை பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமையில்
முன்னேடுக்கப்பட்டால் மட்டுமே உண்மையான விடுதலை சாத்
தியம் என்பதையும், தேசிய சுய நிர்ணய உரிமை உட்பட எந்த
சனநாயக கடமைகளும் புதிய சனநாயகப் புரட்சியின் பகுதியா
கவே விளங்க முடியும் என்பதையும், இந்திய அரசின் இராணுவ
தலையீடு உட்பட அனைத்து தலையீடுகளையும் ஆரம்பம் முதல்
எதிர்த்தனர். இக் கொள்கைகளை உள்ளடக்கமாக கொண்டிருந்த
தமிழ் புரட்சிகர அமைப்புகளுடன் சர்வதேசிய சகோதரத்துவ
உணர்வுடன் பரஸ்பர தொடர்பை பேணி வந்தனர் வருகின்றனர்.
இந்திய எம்.எல். இயக்கங்கிளன் இச் செயல்பாடுகள் இலங்
கைப் பாட்டாளி வர்க்க புரட்சிகர சக்திகளுக்கு அவர்களை
மையப்படுத்துவதற்கான ஒரு புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சி
இல்லாத நிலையிலும் தமிழீழ, சிறீலங்கா பகுதிகளில் நடக்கும்
போராட்டங்களில் இவர்கள் தீர்மானகரமான பங்கை வகிக்காத
போதும் தங்களது சமகால, எதிர்கால கடமைகள் மேல் நம்பிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கையும், உத்வேகமும் வளர்ந்து கொண்டிருப்தற்கு புறநிலையில் சித்தாந்த, அரசியல் துறையில் பெரும் உந்துதலை இந்திய எம். எல். கட்சிகளின் உறவு கொடுத்து வருவது சந்தேகத்திற்கிடமற்றது.

இலங்கையில் ஒரு புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியை கட்ட பல தளங்களிலும் இடைவிடாது முயன்று கொண்டிருக்கும் தமிழ் சிங்கள பாட்டாளி வர்க்க புரட்சிகர சக்திகள் தாங்கள் தாங்கள் வாழும் உலகின் எந்த மூலையிலும் அந்நாடுகளிலுள்ள புரட்சிகர எம்.எல். இயக்கங்ளுடன் உறவை ஏற்படுத்துவதும், பேணி வளர்ப்பதும் எந்தளவுக்க அவசியமானதோ, நிராகரிக்க முடியாதோ அந்த அளவுக்கு அவ்வவ் நாடுகளில் சித்தாந்த அரசியல் கோட்பாடுகளிலும் மூலோபாயங்களிலும் நடைமுறை வேலைகளிலும் முரண்பாடு கொண்டு பல எம்.எல். கட்சிகளாக பிளவு பட்டிருப்பினும் (அவர்கள் தங்களுக்கு இடையிலான சித்தாந்த அரசியல் முரண்பாடுகளை, நடைமுறை முரண்பாடுகளை விவாதிக்கவும், பேசவும் செய்கிறார்கள்). ஒரு அய்க்கியப்பட்ட மையப்பட்ட கொம்யூனிஸ்ட் கட்சியை கட்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை குறிப்பாக கவனத்தில் கொண்டு அக்கட்சிகளுடனான நமது உறவை பேணி வளர்க்க வேண்டும். எந்தளவுக்கு இவ் இரண்டு கடமைகளும் முக்கியமானதோ தவிர்க்க கூடாததோ அந்த அளவுக்கு இந்த கடமைகளை நாம் செவ்வனே செய்யக் கூடிய தத்துவ, அரசியல், அமைப்பு பலமானது நாம் வளர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். இதை எங்கேயிருந்து அடிப்படையில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் சர்வதேச கொம்யூனிஸ்ட் இயக்கத்தின் பொது வழி பற்றிய தத்துவ, அரசியல், அமைப்பு கோட்பாடுகளில் நாம் எவ்வளவு தெளிவாக, உறுதியாக பற்றி நிற்கின்றோம் என்பதிலும் சர்வதேசிய கொம்யூனிஸ்ட் இயக்கத்தின் பொதுவழியை புரிந்து கொள்வதிலும் குறிப்பான நாடுகளின் குறிப்பான சூழ்நிலைகளுக்கு இதை பொருத்துவதிலும் எம்-எல். கட்சிகள் மத்தியில் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள இடது வலது விலகல்களை மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனை என்ற சமூக அறிவியல் தத்துவத்தை பின் பற்றி நின்றது. சரியான போல்ஷ்விக் வழியை சீரமைத்துக் கொள்வதில் அதற்காக சித்தாந்த, அரசியல் விவகாரங்களில் நடத்தப்படும் தத்துவார்த்த போராட்டமே



சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கும்,நமக்கும் அடிப்படையான பலத்தை தரும், நாம் உருவாக்க முனையும் இலங்கை புரட்சிகர கொம்யூனிஸ் கட்சிக்கும் இதுதான் அடிப்படை சர்வதேச அளவில் சகோதர நாட்டு கட்சிகளுக்கு இடையிலான உறவுக்கும் இதுவே அடிப்படை. இந்த புரிதலிலிருந்து நமது சித்தாந்த அரசியல் அமைப்பு கண்ணோட்டத்தை வளர்ப்பதும், அதற்கு எதிரான கண்ணோட்டங்களை எதிர்த்து தத்துவார்த்த ரீதியில் போராடுவதும் எல்லாவற்றுக்கும் அடிப்படை.

அடுத்து இந்திய எம்.எல். கட்சிகளின் இனப்பிரச்சனை குறித்த கண்ணோட்டமானது. வளர்ந்து வரும் இலங்கைப் பாட்டாளி வர்க்க புரட்சிகர சக்திகளிடையே அவர்களது சிந்தனையில் குறிப்பிடத் தக்களவு தாக்கம் செலுத்தி வந்ததும் - வருவதும் உண்மையே. அன்று தேசிய சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை முன்னிறுத்தி போராடுவதா? அல்லது பிரிவினைக் கோரிக்கையை முன்னிறுத்தி போராடுவதா? ஒன்றுபட்ட கட்சியா? தனிநாட்டுக் கட்சியா? என்பதிலிருந்து, இன்று புலிகளை விமர்சனம் இன்றி ஆதரிப்பது அல்லது புலிகளையும் அரசு படைகளையும் சமப்படுத்தி பார்ப்பது வரை தொடர்நது வருகிறது. இன்னும் வரும். ஆனால் நமது கடமை எது இலங்கைப் பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கத்தின் நலனுக்கும் மா.லெ.மா.ஓ. சிந்தனைப்பாதைக்கும் சரியானது - தவறானது எது என்பதை முன்வைத்து சரியான வழிகாட்டுதலை கொடுக்கவேண்டும்.

இதன் தொடக்கமாக அண்மையில் ம.ஜ.இ.க.வின் வெளியீடு ''இலங்கை அரசு - விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டைபோடும் இந்தியாவின் இராஜதந்திரத்தை முறியடிப்போம்'' விசேட வெளியீட்டிலுள்ள சில கண்ணோட்டங்கள் குறித்த எனது பார்வையை முன்வைக்கிறேன். (யார் இந்த ம.ஜ.இ.க. 1985 வரை மக்கள் யுத்தம் கட்சியில் செயல்பட்டவர்கள் 1983-ல் ''தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்போம், இந்தியரசின் இராணுவத் தலையீட்டை எதிர்ப்போம்'' ''குட்டிமுதலாளித்துவ தேசியவாதமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்'' 'மக்கள் யுத்தம்' விடுதலைப் புலிகள் மீதான தடையை எதிர்ப்போம்! 1987 ஒப்பந்தத்தை எதிர்த்து ''இலங்கையில் ஒரு தேசிய இனம்'' என்ற முக்கிய வெளியீடுகளை கொண்டு வந்த தோழர்கள். இவர்கள் தமது சமரன் பத்திரிகையில் இனப்பிரச்சினை பற்றி பல கட்டுரைகளை வெளியிட்டவர்கள்.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வெளியீடு சந்திரிகா அரசின் அமைதிவாதம், சீர்திருத்த வாத கொள்கைகளை, பேச்சுவார்த்தைகளை அம்பலப்படுத்துகிறது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை, அதன் உள்ளடக்கங்களை முன்வைத்துள்ளது அதை விட்டு நடக்கும் சமரசங்கள் இனப்பிரச்சினையே தீர்க்காது என்றும், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைதான் ஒரே வழி என்றும் சுயாட்சியோ. அதிக அதிகாரங்களோ பிரச்சினை தீர்க்கமாட்டாது எனவும் இந்தியரசின் இராஜதந்திரங்களை விளக்கி, தமிழக திராவிட கட்சிகளின் சந்தர்ப்பவாத அரசியலை சுட்டி காட்டி இந்திய மக்களின் கடமையையும் கூறியுள்ளது. இந்த பெரும் முயற்சியை உளப்பூர்வமாக வரவேற்கிறோம்.

இவ்வெளியீட்டில் விடுதலைப் புலிகளை கணிப்பிடுவதிலும் அவர்களுக்கான பணியை வரையறுத்து கூறுவதிலும் ஏற்கனவே விடுதலைப் புலிகள் பற்றி தமிழ்நாட்டிலும், தமிழீழ பகுதியிலும் கட்டி வளர்க்கப்பட்டுள்ள கற்பனாவாத சித்திரம் பொய்மை இதிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் வர்க்கப் பிரதிபலிப்பை, அரசியல் கோரிக்கைகளை, போராட்டங்களை கொண்டு புலிகளை மதிப்பிடுவதற்கு பதில், களத்தில் இடைவிடாது போராடும், இரத்தம் சிந்தும் ஒரே இயக்கம் புலிகள் என்ற கணிப்பீட்டின் தாக்கத்திலிருந்தும் விடுதலைப் புலிகள் பற்றி மக்களுக்கு புரட்சிகரமாக போதிக்கவும், புலியின் தலைமைக்கு சில பணிகளை, திட்டங்களை வரையறுத்து கொடுத்தும், ஈழத்தமிழர்கள் அனைவரையும், சனநாயகசக்திகள் அனைவரையும் புலிகள் அணிதிரட்ட கோருகிறது இவ்வெளியீடு.

உண்மையில் தமிழீழ போராட்டத்தின் கடந்த 12 வருட யுத்தமும் அதில் பங்கு வகித்த குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் பற்றி, இன்று வரை யுத்தத்தில் வளர்ந்து யுத்தத்தை தொடரும் புலிகளின் சமகால நிலைமை, எதிர்கால போக்கு, இவற்றின் வர்க்க நலன் அரசியல் கொள்கைகள் செயற்பாடுகள் பற்றி புரட்சிகர, தேசபக்த சனநாயக சக்திகளும், தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய சக்திகளும் தேசபக்த சனநாயக சக்திகளும் ஏன் பரந்துபட்ட தமிழீழ மக்களும் கூட்ட புலிகள் பற்றி கணிப்பீட்டை, புலிக்கொள்கை குறித்த மாயைகளை தமது சொந்த போராட்ட அனுபவங்கள் மூலம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டமும், யுத்த



மும் இன்று முகங் கொண்டுள்ள எந்தப் பிரச்சனைகளையும் தேக்கங்களையும் புலித்தலைமையின் போராட்டம் தீர்க்க போவதில்லை என்பது தமிழீழ மக்களுக்கு ஏன் புலிப்போராளிகளுக்கே புரிந்து கொண்டு வருகிறது. போராட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை, தேக்கங்களை, அறிவியல் பூர்வமாக புதிய சனநாயகப் புரட்சி நோக்கில் தீர்க்க விரும்பும் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களுக்கு மட்டுமல்ல. தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளுக்கும், போராட்டம் இறுதி வெற்றி வரை தொடர வேண்டும் என விரும்பும் உள்நாட்டு உலக நாட்டு ஆதரவாளர்களுக்கும், இந்தியாவின் புரட்சிகர சனநாயக சக்திகளுக்கும் கூட ம.ஜ.இ.க.வின் விடுதலைப் பற்றி ''அதீத மாயைக் கண்ணோட்டம்'' உதவப் போவதில்லை நிட்சயம் உபத்திரவத்தை கொடுக்கவே செய்யும்.

வெளியீட்டின் உள்ளடக்க பார்வைக்கு வருவோம்.

''சீர்திருத்தவாத தீர்வு இனச்சிக்கலை தீர்க்காது'' என்ற தலைப்பின்கீழ் 4வது பக்கத்தில். ஒரு சுயாட்சியை பெற்றிருக்கும் ஒரு இனம், ஆளுகின்ற இனத்துடன் சம உரிமையை பெற்றுவிட முடியாது, ஒடுக்கும் இனமும் ஒடுக்கப்பட்ட இனமும் சமவுரிமை பெற வேண்டும்மானால், இரு இனங்களுக்கும் இடையே அமைதி நிலவ வேண்டுமானால், அதை நிலைநாட்டுவதற்கு ஒரு புரட்சிகரமான முறை - ஒடுக்கப்பட தேசிய இனம் பிரிந்து செல்வது உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையை பெறுவதேயாகும் இம்முறையில்தான் இன ஒடுக்குமுறைக்கு முடிவு கட்ட முடியும் இன விடுதலையும் வழங்க முடியும்.

மேலோட்டமாக பார்த்தால் இதில் எந்த சிக்கலும் இல்லை. ஆனால் ஊன்றிக் கவனித்தால் இத்தகைய ஒரு ''புரட்சிகரமான முறையை'' இந்த சகாப்தத்தில் எந்த வர்க்கத்தின் போராட்டத் தலைமையில் சாதிக்க முடியும். எந்த வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இத்தகைய நிலை உறுதிப்படுத்தப்படும். இலங்கையில் சந்திரிகாவின் கீழ் இத்தகைய நிலை உறுதிப்படுத்தப்படும். இலங்கையில் சந்திரிகாவின் சிறீலங்கா பேரினவாத அரசால் இதைச் செய்ய முடியாது என்பதில் ம.ஜ.இ.க. உட்பட யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் புலிகளால் இதைச்சாதிக்க முடியுமா? ஆம் என்றால், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் முதலாளித்துவ வர்க்கத்தால் தேசிய சுயநிர்ணய உரிமையையும், இனசமத்துவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்கையையும் நடைமுறைப்படுத்த முடியும் என முடிவு செய்து விடுவோமா? ஆட்சியதிகாரத்துக்காக போராடும் தேசிய இனங்களின் முதலாளித்துவ வர்க்கமும் முதலாளித்துவ சர்வாதிகாரமும் அத்தகைய ஒரு குண இயல்பை கொண்டிருப்பதாக நம்புகின்றோமோ? அப்படியானால் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய லெனினியக் கொள்கைக்கு சமாதி கட்டி விடப்படும். இல்லை பாட்டாளி வர்க்கத்தால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் மட்டுமே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும், இன சமத்துவமும், இன விடுதலையும் (தனிநாடாக பிரிந்தால் கூட) உத்தரவாதப்படுத்த முடியும் என்றால், புலிகளின் தலைமை, புலி இயக்கம் பாட்டாளி வர்க்க நலனிலிருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக போராடுகிறதா? அப்படி இல்லை என நாம் தெளிவாகவும் உறுதியாகவும் கருதினால் முடிவு செய்தால், புலிகளைப் பற்றி அப்படி ஒரு மாயை நமக்கு இல்லையெனில் ம.ஜ.இ.க. மேலே சொன்னதை அமுல்படுத்த, இலங்கையின் இனப்பிரச்சனைக்கு உண்மையான தீர்வு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தேவையையும், அதை அமுல்படுத்த கூடிய புரட்சிகர கட்சியின், அதன் தலைமையிலான புரட்சிக்கர தேசபக்த சனநாய இயக்கத்தின் தேவையையும் சொல்லியாக வேண்டும். புலிகள் அத்தகைய கடமையை செய்து விடுவார்கள் என ம.ஜ.இ.க. நம்பவில்லை என்றாலும், வாசகர்களுக்கு அத்தகைய மாயை ஏற்படுவதை தடுத்து விடமுடியாது. ஏனெனில் தமிழீழ மக்களின் தேசியப் போராட்டத்தில் புலிகள் மட்டும் தான் போராட்டத்தின் போக்கை இன்று தீர்மானிக்கும் ஒரே சக்தியாக இருக்கிறார்கள். எனவே மா.லெ சக்திகள் இனப் பிரச்சனைக்கு தீர்வை சொல்கின்றபோது புலிகளால் எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது என்பதையும் சொல்ல வேண்டும்.

அதே தலைப்பில் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான 6 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளது. அக்கோரிக்கைகளை *சந்திரிகா அரசு ஏற்க்கும் போதுதான் அமைதியை நிலைநாட்ட உண்மையாக விரும்புகிறது என நம்பலாம்.* இன்று தமிழிழ மக்களின் சார்பாக பேச்சு வார்த்தைக்கு செல்லும் புலிகள் உட்பட யாரும் முன் வைக்கவில்லை அடிப்படையாக அக்கோரிக்கைகளை புலி தவிர மற்ற இயக்கங்கள் 87 ஒப்பந்தத்துடன் அக்கோரிக்கைகளை கைவிட்டு தமிழ் மக்களுக்கு துரோகம் செய்து



விட்டனர். புலிகள் தான் தாங்கள் நீங்கள் கூறும் கோரிக்கைகள் அடங்கிய **"திம்பு கோரிக்கைகளை"** தொடர்வதாக கூறினர். (பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகமும் 87-ல் திம்பு கோரிக்கைகளை உயர்த்தி பிடிக்கும் இயக்கத்தை ஆரம்பித்தது) ஆனால் புலிகள் கூட ''தமிழிழ கோரிக்கையை கைவிட்டு சுயாட்சி, சமஸ்டி பற்றி பேசத் தயார்'' என அறிவித்த பின்னும் ஏதோ சந்திரிகா அரசுதான் அக்கோரிக்கைகளை ஏற்க்க மறுக்கிறது. புலிகள் உறுதியாக முன் வைக்கிறார் என்ற பாணியில், அல்லது புலியின் நெருங்கிய ஆதரவாளர் கூறுவது போல் சுயாட்சி, சமஸ்டி பற்றி புல பேசியது தந்திரம் என்ற பாணியில் நாம் அணுகக் கூடாது. பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் புலித் தலமை அக்கோரிக்கைகளை கைவிடாது இருக்கும் போதுதான் சந்திரிகாவுக்கு அதை ஏற்பதா? இல்லையா? என்ற பிரச்சனை ஏற்படும். எனவே புலிகள் அக்கோரிக்கைகளை கைவிடக்கூடாது என்றும், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடுபவர்கள் அக்கோரிக்கைகளை முன்னிறுத்த வேண்டும் என்றும் சொல்பவரும், பிரிவினையை அல்ல இக் கோரிக்கைகளை கூட கைவிடுவதானது, தமிழ் மக்களுக்கு இதுவரைகால போராட்டத்துக்கு, சிந்திய இரத்தங்களுக்கும், செய்த தியாகங்களுக்கும் துரோகமாக அமைந்துவிடும் என்ற அளவுக்கு கூட சொல்லலாம்.

''அமைதிவாதம் ஒரு மோசடியே'' என்ற தலைப்பின் கீழ் 7-ம் பக்கத்தில் *''இலங்கையில் நிலவும் அரைக்காலனிய அரசமைப்புள் ஒரு அரசாங்கத்துக்கு மாறாக தேர்தல் மூலமாக வரும் எந்த அரசாங்கமும் இலங்கை அரசின் வர்க்க தன்மைக்கும் அதன் அடிப்படை நலன்களுக்கும் எதிராக செயல்பட்டு விடமுடியாது''*

நாம் இலங்கையை ஒரு நவ காலனிய அரசமைப்பு என்கிறோம். இதுபற்றிய விரிவான தர்க்கம் வேறு தளங்களில் நடத்தலாம் **தேர்தல் மூலமாக வரும் அரசாங்கம்** மட்டும் தான் இலங்கை அரசின் வர்க்க தன்மைக்கும் அடிப்படை நலன்களுக்கு எதிராக செயல்பட மாட்டாதா? ஆயுதம் தாங்கிய வழிமூலம் வரும் அரசாங்கம் ஆளும் வர்க்க தன்மைக்கும், அதன் அடிப்படை நலன்களுக்கும் பேரினவாத அரசமைப்பு சட்டங்களுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும், தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்களின் நலன்களுக்கும் எதிராக செயல்பட்டு விடுமா? இதற்க்கு என்ன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உத்தரவாதம். ஒருக்கால் கனவில் என்றாலும் ஜே.வி.பி. ஆயுதப் போராட்ட வழிமூலம் அரசாங்கத்துக்கு வந்திருந்தால் இனப்பிரச்சனை தீர்ந்திருக்குமா? ஆளும் தரகு முதலாளிய நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் ஏகாதிபத்தியங்களின் நலனுக்கு எதிராக செயல்பட்டிருக்குமா? தோழர்களே! இன்னமும் மேலே போவோம் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஒருவேளை வெற்றிவாகை சூடினால் தமிழ் தரகு முதலாளிகளின், நிலப்பிரபுக்களின், எகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கும், தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக புலிகள் செயல்படுவார்களா? இல்லை முற்றுப்புள்ளி வைத்துவிடுவார்களா? தமிழீழம் அல்லது வடக்கும் கிழக்கும் சுரண்டலற்ற, தேசிய ஒடுக்குமுறையில்லாத சுதந்திர பூமியாகிவிட முடியுமா? புரட்சிகர தேசபக்த குழந்தைக்கு கூட இதற்கான பதில் தெரியும். ஆகவே இலங்கை அரசின் வர்க்க தன்மைக்கும், அதன் அடிப்படை நலன்களுக்கு எதிராக யார் செயல்படுவார்கள். யார் செயல்படமாட்டார்கள் என்பது அவர்கள் எந்த வர்க்க நலன்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். எந்த வர்க்க சர்வாதிகாரத்துக்காக போராடுகிறார்கள் என்பதன் அடிப்படைதான் தீர்மானிக்கிறது. பதிலுக்கு இந்த அல்லது அந்த வழிமுறை மட்டும் தீர்மானிப்பதில்லை. மாறாக தேர்தல் அல்லாத வழிகளில் அரசாங்கத்துக்கு வரும் (இராணுவ ஆட்சி கவிழ்ப்பு, ஆயுதப் போராட்டம்) எல்லோரும் இலங்கையின் ஆளும் வர்க்கத் தன்மைக்கும் அடிப்படை நலன்களுக்கு, இனப்பிரச்சனைக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிடுவார்கள் என நம்புவது, கூறுவதும்

நவகாலனிய சமூக அரசமைப்புக்குள், தேசிய இன ஒடுக்குமுறை கூர்மையடைந்துள்ள நாடுகளில் சமகால சர்வதேச சூழ்நிலைமைகளில் குட்டி முதலாளித்துவ முதலாளித்துவ வர்க்கங்களின் தலைமையில் நடைபெறும் ஆயுதப் போராட்டங்கள் கூட எங்கு போய் முடியும் என்பதில் காணப்படும் பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்துக்கு விரோதமான பார்வையை வெளிப்படுத்துகிறது. ''விடுதலைப் புலிகளின் இன்றைய பணி சுயநிர்ணய உரிமைகளை உயர்த்தி பிடிப்பதே'' என்ற தலைப்பின் கீழ்

*''ஈழத்தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமை, அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற முழக்கத்தின் கீழ் அனைத்து சனநாயக சக்திகளையும் திரட்டுவது வி.புலிகளின் தவிர்க்க முடியாத உடனடிப்பணி'' என்கிறது.* புலிகள் இதுவரை காலமும், தமிழீழக்



கோரிக்கை, தேசிய சுய நிர்ணய உரிமை முழக்கத்தை முன் வைத்துதானே அணிதிரட்டி வந்தனர். இப்போது அதை கைவிட்டு விட்ட படியால் தான் மீண்டும் சுயநிர்ணய உரிமை முழக்கத்தை முன் வைத்து அணிதிரட்ட ம.ஜ.இ.க. கோருகின்றது. சரி புலிகள் ம.ஜ.இ.க. விரும்புவது போல் இம் முழக்கத்தை முன் வைத்து அணி திரள கோரினாலும் இந்த முழக்கத்தை மட்டும் நம்பி அணிதிரள தமிழீழத்தின் தேசபக்த சனநாயக சக்திகள் தயாரில்லை. காரணம் புலிகள் கடந்த காலத்தில் தமிழீழ சன நாயக சக்திகளை தேசபக்த புரட்சிகர சக்திகளை தனது இயக்கத்துக்குள்ளேயும், வெளியிலும் எத்தகைய கொடூரமான கொள்கைகள், நடைமுறைகள் வழி கையாண்டு வந்தது என்பது உயிர்வாழும் சனநாயக சக்திகள் தமது வாழ்வின் ஒவ்வொரு நொடியும் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். தொழிலாளி, விவசாயிவர்க்கங்களின், நடுத்தர வர்க்கத்தின் பரந்துபட்ட மக்களின் மத்தியிலுள்ள தேசபக்த சனநாயக சக்திகள் தமிழீழ முதலாளி வர்க்கத்தின் சனநாயகம் புலிகளின் சர்வாதிகாரம் பற்றி சோசலிசம் குறித்து, புலிகளின் ஒவ்வொர போராட்ட நடவடிக்கைகள், முழக்கங்கள், அணுகுமுறைகள், 12 வருட யுத்தத்தின் மூலம் விலைமதிப்பில்லா அனுபவங்கள் ஊடாக தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அன்று தொடக்கம் இன்றுவரை புலித்தலைமையின் சனநாயக விரோத தனி இயக்க சர்வாதிகார, அராஜ கொள்கைகள் நூற்றுக்கணக்கான சக இயக்க போராளிகளை சகோதர யுத்தத்தின் மூலம் அழித்திருக்கிறது, தேசிய விடுதலையிலும் சனநாயகத்திலும் நம்பிக்கை வைத்து உறுதியுடன் புலிகள் இயக்கத்தின் சேர்ந்து போராடிய போராளிகளை சனநாயகம் பற்றி பேசியதற்காக யுத்த முனையில் சாகடித்திருக்கிறது. சிலரை இயக்கத்தை விட்டு ஓடச் செய்து இருக்கிறது. மொத்தத்தில் ஆயிரக் கணக்கான சனநாயக சக்திகளை போர்க்களத்தை விட்டு விரட்டியடித்திருக்கிறது. புலிகளின் தலைமையிடம் இருந்து போரினுடே இத்தனை பாடங்களை கற்றுக் கொண்ட தமிழி சனநாயக சக்திகள், புலிகள் இனி பெரும் ஆரவாரத்துடன் உயர்த்திப் பிடிக்கப்போகும் சுயநிர்ணய உரிமை முழக்கத்தில் மயங்கி அணிதிரள மாட்டார்கள், புலிகள் உட்பட எல்லா அராஜக இயக்கங்களும் செய்ததுபோல், நீர்ப்பந்தத்தின் மேல் கட்டாயத்தின் பேரில் காட்டிச் சொல்லப்பட்டு அணிதிரட்டலாம் அல்லது சூழ்நிலை நிர்ப்பந்தம், புலிகளுடன் இணைவதிலுள்ள வாழ்க்கையில் பெறப்படும் சாதகங்களை

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவிர எந்த தமிழீழ பாலகனும் கூட அரசியல் முழக்கங்களை உணர்ந்து அணிதிரள மாட்டார்கள். புலிகளின் தலைமைக்கே இந்த உண்மைநிலை புரிந்திருக்கிறது. தோழர்களே புலி தன்னுடன் போராளிகளை அணிதிரட்ட என்ன வழிகளை கடைப்பிடிக்கிறது என்பதை உன்னிப்பாக ஆராய்வதால் விளங்கும் அல்லது யாழ் பல்கலைக்கழக மனோவியல் துறை பேராசிரியரின் அறிக்கைகளை படித்தால் புரியும்.

எனவே புலிகளின் தலைமை அப்படி ஒரு முழக்கத்தை வைத்து அனைத்து ஈழ சனநாயக சக்திகளையும் அணி திரட்ட முடியும் என நம்பி அவர்களுக்கு ஆலோசனை சொல்வதும் தமிழீழ தேசபக்த சன நாய சக்திகளை அம்முழக்கத்தை நம்பி அணி திரள கோருவதும், புலிகளை பற்றியும், போராட்ட களத்திலுள்ள வர்க்க சக்திகளின், சனநாயக சக்திகளின் அபிலாசைகள், கோரிக்கைகள் குறித்து மேம்போக்கான புரிதலில் நடப்பதாகும். இன்று பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கம் தேசிய சுயநிர்ணய உரிமை முழக்கத்தை முன்வைப்பதும் அனைத்து தேச பக்த சன நாயக சக்திகளையும் புரட்சிகர தேசபக்த முன்னணியினர் அமைப்பில் அணி திரட்டும் பணிதான் காரிய சாத்தியமானது. தேசியத்தையும் சனநாயகத்தையும் முரண்பாடின்றி இணைக்கும் சக்தி அவர்களுக்கு மட்டுமேயுண்டு. இது நடந்தால் மட்டுமே தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டம் மேலும் புதிய வலிமையுடன் முன்னேறிச் சொல்லமுடியும்.

*"ஈழத் தமிழ் இனத்தின் அரசியல் சுதந்திரம் மற்றும் தேசிய நலன்களின் அடிப்படையில் அமைந்த அரசியல், பொருளாதார, இராணுவ கொள்கைகள் உள்ளடக்கமாக கொண்ட ஒரு குறிப்பானதிட்டத்தை வி.புலிகள் அமைப்பு முன்வைக்க வேண்டும்"*

தோழர்களே! நல்லது, மிக நல்லது! புலிகள் இதுவரை ஒரு குறிப்பான திட்டத்தை கொண்டில்லை என புரிந்த நீங்கள், 12 வருட யுத்தத்தில் ஊன்றி நின்ற புலிகள், மேலும் ஊன்றி நிற்க்க வேண்டும் என்ற நல்ல விருப்பத்தில் இருந்து வலியுறுத்துகிறீர்கள்.

இதற்க்குப் புலிகளிடம் இருந்து என்ன பதில் கிடைக்கும் என எமக்கு தெரியவில்லை. ஒரு உண்மை மட்டும் நமக்கு தெரிகிறது. ஒரு அறிக்கை வடிவில் முன் வைக்கப்படாத திட்டம், அல்லது நீங்கள் விரும்பும் நீண்டகால மக்கள் யுத்தபாதை திட்டம் புலிகளிடம் இல்லை ஆனால் புலித்தலைமையும், தமிழ் முதலாளி வர்க்கமும் தமது வர்க்க நலனை பேணக் கூடிய, வர்க்க அதிகாரத்தை, சர்வாதிகாரத்தை திடப்படுத்தக் கூடிய தேசிய நலன்கள் அடிப்படையில் அமைந்த அரசியல், பொருளாதார இராணுவக் கொள்கைகளை கொண்டிருக்கிறார்கள். இதுவரை கால போராட்டத்தில் தன்னை, தன்னை மட்டுமே ஒரு தீர்மானகரமான போராட்ட இயக்கமாக இக்கொள்கைகள் இன்றி வளர்ந்திருக்க முடியதல்லவா?



போராட்டத்தில் தமிழீழ தேசிய நலன்கள், போராட்டங்கள் பற்றி அரசியல் கொள்கை, யுத்தத்தில் இத்தனை வருடம் போர்புரிய ஒரு இராணுவக் கொள்கை தனது கட்டுப்பாட்டு பகுதியில் கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கை இன்றி புலிகள் உயிர்வாழ்கிறார்களா? இவற்றுக்கு வழிகாட்ட கீழ்மட்டங்கள் எங்கே கற்றுக் கொண்டது? தலைமை எப்படி வழிகாட்டுகிறது? மாற்று இயக்கங்களை புரட்சிகர தேசபக்த சக்திகளை அழிப்பதிலும் தடை செய்வதும் ஒரு கொள்கையற்ற வர்க்க நலனற்ற செயல்பாடுகளா? புலிகள் ஒரு உதிரித் தலைமையோ, கொள்கையற்ற கூட்டமோ அல்ல. தமிழ் ஆதிக்க வர்க்கங்களின் நலன்களை பேணும், அதற்கான கொள்கைகளை முன் வைத்து போராடும் திடகாத்திரமான நம்பிக்கைக்குரிய இயக்கமாகும் என்பதை யாரும் மறந்து விடாதீர்கள். தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திலும் வர்க்க சக்திகளும், நலன்களும் வர்க்க அரசியலும் - இயக்கங்களும் முட்டி மோதிக் கொண்டேயிருக்கும். தமிழீழ போராட்டத்தில் ஒரு புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமையிலான போராட்டமும் பிரதான பங்கை வகிக்க முடியவில்லை என்பது உண்மையே. இந்த உண்மைகள் புலிகள் இறுதிவெற்றி வரை போராட்டத்துக்கு தலைமை தாங்குவார்கள் - தாங்கவேண்டும், பரந்துபட்ட தமிழீழ சனநாயக சக்திகளை இணைத்து செல்வார்கள் என்ற நம்புகின்ற நிலைக்கு நம்மைக் கொண்டு சென்று விடக்கூடாது.

புலிகளின் நெருங்கிய ஆதரவாளர்கள் சிலரும் புலிகளிலிருந்து வெளியேறி புலியின் தத்துவத்துடன் நடைமுறையுடன் திட்டவட்டமாக முறித்துக் கொள்ளாத சிலரும் கூறுவது போல் புலிகளுக்கு ஒரு குறிப்பான திட்டம் இருந்தால் போரில் மேலும் ஊன்றி நிற்க்கமுடியும் தவறுகளை களைவார்கள், புலித்தலைமையுடன் போராடவிரும்பும் அனைவரும் இணைவார்கள் என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மந்திர விளையாட்டில் மயங்கிவிட உணர்வு பெற்ற தமிழீழ தொழிலாளி வர்க்க சக்திகளும், புரட்சிகர தேச பக்த சனநாயக சக்திகளும் சிக்கிவிடமாட்டார்கள். அது போன்ற பிரச்சாரத்துக்கு ஆதரவளிக்கவும் அனுமதிக்க மாட்டார்கள்.

உண்மையில் இன்று தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஊன்றி நின்று போராடவிரும்பும் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களுக்கும், புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளுக்கும் ஒரு குறிப்பான திட்டம் தேவைப்படுகிறது. இது ம.ஜ.இ.க.வுக்கும் தெரிந்த விடயமே. ஆனால் நீங்கள் புலிகள் உங்களிடம் தமது நிலமையை விளக்கி திட்டம் வைக்க விவாதித்தது போன்று புலிகள் ஒருகுறிப்பான திட்டத்தை வைக்க ஆலோசனை கூறியுள்ளதை பார்க்கையில் உங்கள் அன்மிய மதிப்பீட்டில் புலிகள் ஒரு முதிர்ச்சியடைந்த புரட்சிகர தேசிய விடுதலை இயக்கமாக மாறிவருவது போன்றும் பாட்டாளி வர்க்க நலன், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முன்னிறுத்தி இயங்கும் இயக்கமாக கருதத் தொடங்கி விட்டீர்களோ! என்ற அய்யம் எழுகின்றது.

இலங்கை அரசை எதிர்த்து உறுதியாக போராடும் இந்தியரசை எதிர்த்து நிற்க்கும் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாக மட்டுமே பார்த்து இறுதி வெற்றிவரை போராட முன்வரும் உண்மையான புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளை புலிகளின் எந்த கொள்கைகள், நடைமுறைகள், புலியின் தலமையில் அணிதிரள இடம் கொடுக்கும். (இதற்காகத்தான் புலி குறிப்பான திட்டம் வைக்க ஆலோசனை கூறுகிறீர்களோ) நீங்கள் அவ்வாறு நம்புவதற்கு - விரும்புவதற்கு முழுச் சுதந்திரம் உண்டு. அதே போல் தமிழீழ தேசபக்த சனநாயக சக்திகள் தமது சொந்த போராட்ட அனுபவம் மூலம் கற்றுக் கொண்டபடி புலிகளை அவ்வாறு நம்பாமல், அணிதிரளாமல் ஒரு புரட்சிகர தேசபக்த இயக்கத்தை கட்டவும், வளர்க்கவும் பூரண சுதந்திரம் உண்டு என்பதை புலிகளைப் போல் அன்றி நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறோம்.

அடுத்த பந்தியில் *''வி.புலிகளுடன் கருத்து வேறுபாடுகள் முரண்பாடு கொண்டிருப்போர் கூட ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பார்களானால் விடுதலைப் போரை ஆதரித்தால் அவர்களின் சனநாயக உரிமைகளை புலிகள் அங்கீகரிக்க வேண்டும். அமைப்பு ரீதியில் திரள்வதற்கு ஆயுதம் ஏந்துவதற்கும் உரிமை அளிக்க வேண்டும்''*



மதிக்கிறோம். இக்கோரிக்கை இன்று நேற்றல்ல புலிகள் சக குழுக்களை அழிக்க தொடங்கிய காலத்திலிருந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. எதார்த்தத்தில் புலிகள் ம(மி)தித்து வந்து இருக்கிறார்களா? என்பது உங்களுக்குப் புரியும். நீங்கள் எழுதுவது போல் புலியுடன் கருத்து முரண்பாடு கொண்டவர்கள் சுயநிர்ணய உரிமையை விடுதலைப் போரை ஆதரிப்பவர்கள். ''யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனிதவுரிமை அமைப்பு''.... வேறு சில அமைப்புக்கள் மட்டுமே இத்தனை வருட போராட்ட அனுபவத்தின் பின்னும், புலி பற்றிய பட்டறிவுக்கு பின்னும் தங்கள் கருத்தை சொல்ல, அணிதிரள (இவர்கள் ஆயுதம் ஏந்தப் போவதில்லை) புலியிடம் அனுமதி கிடைக்கும் என நம்பிக்கை கொள்ள முடியும். அவர்கள் அப்படித்தான் எதிர்பார்க்கிறார்களா? என்பதும் சந்தேகமே. இதுபோன்றவர்களை புலிகளுடன் சேர்ந்து அணிதிரள, ஆயுதம் ஏந்த ஒரு வேலை புலி அங்கிகரிக்கலாம்.

ஆனால் ஒருபோதும், பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களும், தமிழீழ தேசபக்த சனநாய சக்திகளும் சுயநிர்ணய உரிமையை, விடுதலைப் போரை ஆதரிப்பவர்களல்ல தங்களது சொந்த அரசியல் கோரிக்கையாக முன்னேடுப்பவர்கள். விடுதலைப் போரை தமது தலமையில் நடத்த வேண்டியவர்கள். இவர்களுக்கு புலிகளிடம் இருந்து அனுமதி கிடைக்க போவதில்லை. தம்மீதான புலிகளின் எல்லாவித ஒடுக்குமுறையை தடைவிதிப்பை, அதற்குகந்த பாட்டாளி வர்க்க அணுகுமுறையில் முகங்கொடுத்துத் தமது கருத்தை வெளியீடுகிறார்கள், அமைப்பு கட்டுகிறார்கள், ஆயுதம் ஏந்த தயாராகி வருகிறார்கள். இதை விட்டு வேறு எந்த வழியிலும் தமிழீழத் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் தீர்மானகரமான சக்தியாக நாம் மாற முடியாது. ஆகவே பாட்டாளி வர்க்க புரட்சிகர கட்சியும், புரட்சிகர தேசபக்த சனநாயக இயக்கமும் செயல்பட புலிகள் அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை, புலிகள் குறித்த நிலையை மக்களுக்கு உணர்த்த மட்டுமே பயன்படும்.

9-ம் பக்கத்தின் கடைசிவரி *''பாரம்பரிய பிரதேசத்தின்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிழக்கு பகுதியில் வாழும் இஸ்லாமிய மக்களின் மதவுரிமை மற்றும் சனநாயகவுரிமைகளை ஆதரிக்க வேண்டும் ஈழத்தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் அவர்களின் ஆதரவை வென்றெடுக்க வேண்டும்.'' புலிகளின் இஸ்லாமிய மக்கள் பற்றிய வெளியீட்டில் ''வடக்கு கிழக்கு பகுதியில் வாழும் இஸ்லாமியர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு மதப்பிரிவு என்றும் இஸ்லாமிய மக்களும் தமிழீழ போராட்டத்தில் நேரடியாக பங்கு பற்றுகிறார்கள். புலி இயக்கத்தில் செயல்பட்டு மாவீரர்கள் ஆனதும்'' குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புலிகள் 91-இல் எடுத்த ''மத சுத்திகரிப்பு நடவடிக்கை'' வடக்கிலும், வடமத்திய பகுதியிலும் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இஸ்லாமிய மக்களை இரவோடு இரவாக 24 மணி நேரத்தில் வெளியேற்றியது. இது தமிழீழ போராட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் மதரீதியான, பிரதேசரீதியான மோதல்களை உருவாக்கி வளர்த்து போராட்ட ஒற்றுமையை சிதறடிக்கும் சிறீலங்கா அரசின் ஏகாதிபத்தியங்களின் நோக்கங்களுக்கு புலிகளின் செயல் மறைமுகமாக உதவியுள்ளது உலகறிந்த உண்மை. இஸ்லாமிய மத அடிப்படைவாத சக்திகள் உட்பட பலர் இதைப் பயன்படுத்தி இஸ்லாமியர்கள் ஒரு தேசிய இனம். அவர்களை பாதுகாக்க தனிப்படை அமைத்தல் என்றளவுக்கு போயுள்ளனர். இஸ்லாமிய தொழிலாளர்கள் விவசாயிகள் பரந்துபட்ட மக்கள் மதவாதத்துக்கும், வேறு தீய வழிகளுக்கும் திசை திருப்பப்பட்டு வருகின்றனர்.

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடும், ஆதரவளிக்கும் புலிகளை விட்டு அனைவரும், தங்கள் சொந்த வாழ்விடங்களை விட்டு துரத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இஸ்லாமிய அகதிகளும் சொந்த இடத்தில் மீண்டும் குடியமர உரிமையுண்டு என்ற கோரிக்கையை முன்வைத்து போராடுகிறார்கள். இஸ்லாமியர்களின், அகதிகளின் அப்போராட்டங்களுக்கு தலைமை தாங்குகிறார்கள். ம.ஜ.இ.க. கிழக்கில் வாழும் இஸ்லாமியர்களின் மதவுரிமை, சனநாயகவுரிமை, வடக்கில் புலி நடத்திய மதச்சுத்திகரிப்பு நடவடிக்கையை, மதவுரிமை, சனநாயகவுரிமை மீறல்களை ஆதரிக்கின்றதா? புலித்தலைமை இன்று காதோடு காதாக சொல்வது போல்''சில தப்பு நடந்துவிட்டது. கிழக்கில் வாழும் இஸ்லாமிய மக்களின் உரிமையை நாம் மதிக்கிறோம்'' என்று கூறி வடக்கில் தாங்கள் செய்ததையும், அகதியாகவுள்ள இஸ்லாமிய மக்கள் வடக்கில் மீண்டும் குடியமரும் கோரிக்கையையும் நிராகரிக்கிறது. ஆனால் புலியின் போராட்டத்தை ஆதரிக்கவும், இரத்தம் சிந்தவும் இஸ்லாமியர்கள் வேண்டும்.இதையே ம.ஜ.இ.க.வும் ஏற்றுள்ளதா? இஸ்லாமிய மக்களை விரட்டியடித்து அகதியாக்கிய புலியின் செயலை கண்டிக்காது, மீண்டும் இஸ்லாமிய அகதிகள் தங்கள் பாரம்பரிய வடக்கு பூமியில் வாழ அனுமதிக்காது, அதற்காக போராடாது, தேசிய சுயநிர்ணய உரிமைப் போருக்கு இஸ்லாமியர்களை வென்றெடுப்பது மிகப்பெரிய பிரமை மட்டுமல்ல.



தமிழ் குறுந்தேசியவாதத்துக்கும்,ம தச் சுத்திகரிப்புக்கும் ஆதரவளிப்பதாகவே இருக்கும். இதை ம.ஜ.இ.க. செய்யக்கூடாது என எதிர்பார்க்கிறோம்.

*10*-வது பக்கத்தில்''இலங்கையின் பொருளாதாரத்தை ஏகாதிபத்தியவாதிகளுக்கு அகலத்திறந்து விடும் இலங்கை அரசின் பொருளாதாரக் கொள்கைக்கும் அதன் பாசிச ஒடுக்குமுறைக்கும் எதிராக சிங்கள தேசிய இன மக்கள் நடத்தும் போராட்டத்தை வி.புலிகள் அமைப்பு ஆதரிக்க வேண்டும். சந்திரிகா அரசாங்கத்தின் அமைதிவாத, சீர்திருத்தவாத மோசடிகளை சிங்கள மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டும்'' இப்படி சிங்கள மக்கள் மத்தியில் செய்ய வேண்டிய பணிகளை எழுதி கடைசியில் சிங்களத் தேசிய இனத்தை சேர்ந்த சனநாயகவாதிகளின் ஆதரவை திரட்ட வேண்டும்'' என்கிறது ம.ஜ.இ.க. வெளியீடு. நாம் நினைக்கிறோம் உண்மையில் தங்களுடன் தொடர்பு கொண்டிருந்த தமிழீழ புரட்சிகர குழுக்களை மனதில் பதித்துக் கொண்டு புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்தால் செய்யப்பட வேண்டிய பணிகளை குறித்துவிட்டு புரட்சி குழுக்கள் என்பதற்கு பதில் புலிகள் என்று எழுதுவிட்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சிறீலங்கா அரசுக்கு எதிரான போராட்டமாக மட்டுமே நடைமுறையில் நடத்திவரும் புலிகளின் தலைமை ஏகாதிபத்தியங்களின் சுரண்டலை, தேசிய ஒடுக்குமுறையை தனது சொந்த தேசிய இன தமிழ் மக்களுக்கு தேசியப் போரில் போதிக்காத, தேசிய விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டமாக தொடர்ந்து வழிநடத்தி செல்லாத புலிகளின் தலைமை அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், அய்நா சபை லிபியாவிலும், ஈராக்கிலும், சோமாலியாவிலும்.... நடத்திய யுத்த வெறியாட்டத்தை கண்டிக்காத, உலகின் மூலைமுடுக்கு நாடுகளில் சி.அய்.ஏ. செய்த குண்டு வெடிப்புக்களுக்கு பலியான மூன்றாம் உலக மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்காத புலித்தலைமை இன்று ''ஒக்கலகோமாவில்'' நடந்த குண்டு வெடிப்புக்கு அமெரிக்க அரசுக்கு கிளிண்டனுக்கு அனுதாபம் தெரிவிக்கிறது.

சிங்கள தேசிய இனமக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சிறீலங்கா அரசு எதிர்ப்பு போராட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என கோருவது எவ்வளவுக்கு நமது பலயீனத்தை வெளிப்படுத்துகிறது.

''புலிகள் ஏகாதிபத்தியங்களை எதிர்த்த போராட்டத்தில் நேரடியாக பிரச்சாரம், போராட்டம் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் சிறீலங்கா அரசை எதிர்த்து போராடுவதே ஏகாதிபத்திய எதிர்ப்பு பேராட்டமல்லவா?'' என வினவும் பலர் இருக்கிறார்கள். நவகாலனிய அரசமைப்புள்ள, இலங்கை போன்ற குறிப்பான நாடுகளில், ஏகாதிபத்தியங்களின் உள்முரண்பாடுகளுக்கு ஊடாக இவற்றின் குறிப்பான அணுகுமுறைகளை சர்வதேசிய பார்வைக்குட்பட்டு ஸ்துலமாக ஆராயத்தவறுவதன் விளைவே இது. சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வரும்முன்னரோ - வந்தபின்னரோ மக்கள் கூட்டணி அரசின் அரசியல் பொருளாதார கொள்கை பற்றி தமிழீழ மக்களுக்கு விளக்கிச் சொல்லாத புலித்தலைமை ''பிரதமர் சந்திரிகாவுக்கு வீராப்புடன் மட்டுமல்லாமல், வீரமுடனும் செயல்பட வேண்டிய காலம் இதுவென்பது தமது கருத்தாகும்'' என்று 'களத்தில்' எழுதினார்கள். நல்லெண்ண நடவடிக்கை, வாழ்த்துக்கள், அனுப்பி சந்திரிகாவை வரவேற்றார்கள். இன்று சந்திரிகா என்ன செய்கிறார்? புலிகள் என்ன சொல்கிறார்கள்? ''பேச்சு வார்த்தைகளில்'' உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் கோடிக்கணக்கான மில்லியன் ரூபாய் வடக்கு, கிழக்குக்கு கொட்ட முன்வந்தபோது மவுனம் சாதித்த புலிகள், (புனர்வாழ்வு, புனரமைப்புக்கு பணம் வாங்குவதும் இராஜதந்திரமோ)

சிறீலங்கா அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்க சிங்கள அப்பாவிகளை கிராமங்களில் புகுந்து படுகொலை செய்தவர்கள், (குடி



யேற்றங்களின் சிங்கள காடையர்களை பொலிசை கொன்ற செயல்வேறு) இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக சிறீலங்காவில் சிங்கள மக்களின் போராட்டம் வீறுகொண்ட போது அதை முடமாக்க இந்தியப்படை வெளியேற்றம் பற்றி பேச முன்வந்த அந்த பிரேமதாசாவின் அரசுடன் கூட்டிணைந்த புலிகளை (20 கோடி ரூபாய் பணமும், கோடிக்கணக்கான ஆயுதங்களும் அரசு புலிக்கு கொடுத்தது அம்பலமாகியுள்ளது. சிங்கள மக்களிடம் இருந்து இவ்வளவு பணமும், ஆயுதமும் கிடைக்குமா? புலியின் இராஜதந்திரம் வாழ்க) சிறீலங்கா அரசு எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்த்திலுள்ள சிங்கள தேசிய இனத்தின் எந்த வர்க்க சக்திகளும், சனநாயகவாதிகளும் புலிகளுக்கு ஆதரவாக நடந்து கொள்ள முன்வரமாட்டார்கள்.

முதலில் சிங்கள தேசிய இனத்தின் சனநாயக சக்திகள் பரந்துபட்ட மக்கள் நடத்தும் அரசு எதிர்ப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களை ஆதரிக்கும் அளவுக்கு, சந்திரிகா அரசை சிங்கள மக்கள் முன் அம்பலப்படுத்தும் அளவுக்கு புலிகளிடம் எந்த புரட்சிகரமான கொள்கைகள் நடைமுறைகளும் இல்லை எனவே புலிகளின் வர்க்க தன்மை, அதனது இதுவரை கால நடைமுறைகள், தேசியப் போராட்டத்தில் புலிகள் கடைபிடித்து வரும் அரசியல், இராணுவ, பொருளாதார கொள்கைகள் நடைமுறைகள் தெளிவாகவே இருக்கின்றன. புலிகளை பற்றிய எந்த மாயைகளிலும் சிறீலங்காவின் புரட்சிகர தேசபக்த சனநாயகசக்திகளும், புரட்சிகர தமிழீழ தேசபக்த சனநாயக சக்திகளும் அடிப்படையில் இலங்கைப் பாட்டாளி வர்க்க சக்திகளும் ஏமாந்து விடப் போவதில்லை.

*சிங்கள பெருந்தேசிய இன முதலாளி வர்க்கத்துக்கும், அதன் பெருந்தேசிய இன மதவெறிக்கும் வால் பிடித்த திரிபுவாத கொம்யூனிஸ்ட்டுக்களும், ட்டுராஸ்கியவாதிகளும் கட்சிகளும், குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் எவ்வாறு சிங்கள தொழிலாளி, விவசாயி வர்க்கத்தையும், பரந்துபட்ட மக்களையும் இனவாதத்திற்குப் பலியாக்கினார்களோ - ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் தொழிலாளி, விவசாயி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும் தம்மைப்போல் வால்பிடிக்க கோரினார்களோ இரண்டு தேசிய இனங்களின் தொழிலாளி வர்க்கத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையில் நம்பிக்கையீனங்களை ஏற்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தினரோ அது எந்தளவுக்கு துரோகமானதோ அந்தளவுக்கு
தமிழ் தேசிய இன முதலாளி வர்க்கத்திற்கும், அதன் குறுந்தேசிய
வெறிக்கும் தமிழ் தேசிய இனத்தின் தொழிலாளி விவசாயிவர்க்
கத்தை, பரந்து பட்ட மக்களை வால்பிடிக்க வைப்பதும், சிங்கள
தேசிய இனத்தின் தொழிலாளி வர்க்கத்தை, பரந்து பட்ட மக்
களை இன ஒடுக்குமுறையை எதிர்க்கின்றது போராடுகிறது
என்ற ஒரு காரணத்துக்காக தமிழ் தேசிய இன முதலாளி வர்க்கத்
துக்கும் அதன் தேசிய வெறிக்கும் வால்பிடிக்க ஆதரவளிக்க
கோருவதும், இலங்கை பாட்டாளி வர்க்கத்துக்கும், பாட்டாளி
வர்க்க நலனில் இருந்து நடத்தப்படும் தேசிய சுயநிர்ணய உரி
மைப் போருக்கும், ஏன் சர்வதேச பாட்டாளி வர்க்கத்துக்கே
நாமும் துரோகம் செய்வதாக அமைந்து விடும். நாம் இந்த
பாதையை எதிர்க்கின்றோம். கண்டிக்கின்றோம். நீங்கள்?

இலங்கை பாட்டாளி வர்க்கத்தின் கடமையானது, இன
ஒடுக்குமுறைக்கு எதிராக சிறீலங்கா அரசையும் ஏகாதிபத்தியங்க
ளையும் எதிர்த்து தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமைக்காக
போராடுவதும் தமிழீழ தேசபக்த சனநாயக சக்திகளையும், சிறீ
லங்காவில் சிறீலங்கா அரசையும் ஏகாதிபத்தியங்களையும்
எதிர்த்து போராடுவதும் சிறீலங்கா தேசபக்த சனநாயக சக்திக
ளையும், குறிப்பான அமைப்பு வடிவங்களின் கீழ் அணி திரட்டி
தமது ஒரே எதிரிகளுக்கு எதிராக பரஸ்பரம் உதவி, போராடுவ
தற்கு வழி காட்டுவதும், போராட்ட வளர்ச்சிப் போக்கில் ஒரே
எதிரிகளின் இரு வேறு முகக் கவசங்களையும் இரு பகுதியும்
புரிந்து கொண்டு அய்க்கியப்படுத்துவதற்க்கு தலைமைதாங்குவ
தும் கடமையாகின்றது. இந்த வழி மூலம் மட்டும்தான் இந்த
ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்க புரட்சியுமான லெனினிய
சகாப்தத்தில் நவகாலனிய இலங்கையில் நிலவும் சமூக, பொரு
ளாதார அரசியல் கலாச்சார பிரச்சனைகளை, யுத்தமாக தொட
ரும் இனப்பிரச்சனையை, பிரிந்து போகின்ற உரிமை உள்ளிட்ட
தேசிய சுயநிர்ணய உரிமையை, தமிழீழ, சிறீலங்கா தேசங்களின்
உண்மையான தேசிய சுதந்திரத்தை மக்களின் விடுதலையை
வெல்லமுடியும். இலங்கை மக்களின் புதிய சனநாயக புரட்
சியை நிகழ்த்தி காட்ட முடியும். இலங்கையின் தரகு முதலாளித்
துவ நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங்களை ஏகாதிபத்திங்களை
அவர்களின் அரசை முற்று முழுவதுமாக நிர்மூலமாக்க முடியும்.



பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புதிய சனநாயக சர்வாதி
காரத்தின் கீழ் தமிழ் சிங்கள தேசிய இனங்களின் சுயநிர்ணய
உரிமை அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு தேசிய இனங்க
ளின் தேசங்களின் சுதந்திரமான விருப்பத்துடன் கூடிய தேசிய
இனங்களின் சமத்துவமான மனிதனை மனிதன் சுரண்டாத
இலங்கை மக்களின் புதிய சனநாயகம் சமூக ஏதார்த்தமாக
மாறும்.

எனவே ம.ஜ.இ.க. வெளியீடு கூறுவது போல் ''மேற்கூறப்
பட்டவற்றை சாதிப்பதன் மூலமே ஈழத்தமிழின விடுதலைப்
போராட்டத்தின் இன்றய கட்டத்தில் விடுதலைப் புலிகள்
வெற்றி பெறுவதும் நீண்டயுத்தத்தில் ஊன்றி நிற்பதும் உறுதிப்ப
டும்'' என்கின்றது. தோழர்களே ம.ஜ.இ.க., விரும்புவது
போன்ற ஒரு குறிபபான திட்டத்தை புலிகள் வைக்க போவதும்
இல்லை. இவர்களது ஆலோசனைகளை அமுலுக்கு கொண்டு
வரவும் முடியாது. தமிழ்த் தேசியப் போராட்டத்தில் புலிகள்
பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கமும், வரலாற்று போக்கில் அவ்
வர்க்கத்தினை எல்லைப்படுத்தலும், வர்க்க நலன், வர்க்க அரசி
யல் அதற்குட்பட்ட தேசிய நலன்கள் நீங்கள் விரும்புகின்ற மாதி
ரிக் கொள்கைகள் நடைமுறைகளுக்கு புலிகளை மாற்றியமைக்க
அனுமதிக்கமாட்டாது என்பதை மிக விரைவில் புரிந்து கொள்
வீர்கள். புலிகளின் தலமையில் தேசிய சுயநிர்ணய உரிமைப்
போராட்டம் வெற்றி பெறமுடியாது. ஒருக்கால் கற்பனையில்
புலிகளின் தலமையில் தமிழீழம் பிரிந்தாலும் அல்லது அய்க்கிய
இலங்கையில் தேசிய சுயநிர்ணய உரிமை பெற்றாலும் அந்த
தேசிய சுயநிர்ணய உரிமையும், தேசிய சுதந்திரமும் தரகு முதலா
ளிகளின், நிலப்பிரபுக்களின் சுரண்டல் தேசமாக ஏகாதிபத்தியங்
களின் கொள்ளைக் காடாகவும் தேசிய ஒடுக்கமுறை பூமியாக
வும் மட்டுமே இருக்கும். தமிழ் ஆட்சியும் தமிழ் இராணுவமும்,
பொலிசும், மீண்டும் எழும் தமிழ் மக்களின் உண்மையான
தேசிய சுதந்திர மக்கள் விடுதலைப் போராட்டத்தை நசுக்க
முன்னே நிற்க்கும் அவ்வளவுதான்.

இத்தகைய ஒரு அடிமைத் தேசத்தை, சுரண்டல் பூமியை
அடைய பாட்டாளி வர்க்க சக்திகளும், தமிழ் தொழிலாளி, விவ
சாயிவர்க்கமும் பரந்து பட்ட மக்களும், புரட்சிகர தேசபக்த சன
நாயக சக்திகளும் இனியும் புலியின் தலமையில் நடக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டத்தில் அணிதிரளவும் இரத்தம் சிந்தவும் தயாராக இல்லை. அவ்வாறு செய்யும் படி நாம் அவர்களைக் கோரவும் கூடாது. பதிலுக்கு புரட்சிக்கர கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புரட்சிகர தேசபக்த சனநாயக அமைப்பின் கீழ் அணிதிரளவும் போராடவும் இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கிறார்கள். நாம் அப்படிச் செய்யும்படி அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். கோரவேண்டும்.

மார்க்சிய-லெனினிய மாஒ சிந்தனையை தமது வழிகாட்டும் தத்துவமாக ஏற்றுள்ள இலங்கை பாட்டாளி வர்க்க சக்திகளின் கடமை என்னவென்று தெளிவாக இருக்கின்றது. புரட்சிகர இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிக்கான, புரட்சிகர தேசபக்த சனநாயக அமைப்புக்கான அரசியல் பொருளியல், இராணுவக் கொள்கைகளை வகுப்பதும், அதனடிப்படையில் தமிழீழத்திலும், சிறீலங்காவிலும் மக்களை அணிதிரட்டி போராடுவதும் உடனடிப் பணியாகிறது.

— திலீபன்

குறிப்பு: ம.ஜ.இ.க. வெளியீடு தொடர்பான இந்த விமர்சன பார்வையை படிக்கும் தோழர்கள் தங்கள் கருத்துக்களை விமர்சனங்களை, ஆலோசனைகளை நவசகாப்தம் தொடர்பு முகவரிக்கு ஆசிரியர் குழுவுக்கு எழுதவும். இவ்வெளியீடு வேண்டுவோரும் இம்முகவரிக்கு எழுதவும்.

தேசிய அடிமைப்பாட்டு அபாயம் இருப்பதை நாம் மறுக்கிறோமா? இல்லை, அதை நாம் மறுக்கவில்லை. சீனா இரு சாத்தியக் கூறுகளை, விடுதலை அல்லது அடிமைப்பாட்டை எதிர்நோக்குகின்றது என்பதையும் இரண்டு கடுமையாக மோதுகின்றன. என்பதையும் நாம் அங்கீகரிக்கின்றோம். எமது பணி விடுதலையை அடைவதும் அடிப்பாட்டைத் தகர்ப்பதுமாகும். விடுதலைக்கான நிலைமைகள் அடிப்படையானதான சீனாவின் முன்னேற்றமும், அதேவேளையில் எதிரியின் கஷ்டங்களும் எமது சர்வதேச ஆதரவுமாகும். நாம் அடிமைப் பட்டு வாதிகளில் இருந்து வேறுபட்டவர்கள். புறநிலைப்பட்ட பல அம்சப் பார்வையைக் கொண்டு நாம் தேசிய அடிமைப்பாடும் விடுதலையுமாகிய இரு சாத்தியக் கூறுகளையும் அங்கீகரித்து விடுதலையே மேலோங்கியுள்ள சாத்தியக்கூறு என்பதை வலியுறுத்தி அது அடையப்படுவதற்கான நிலைமைகளைச் சுட்டிக் காட்டி, அவற்றை அடைய பிரயாசைப்படுகின்றோம். அடிமைப்பாட்டு வாதிகளோ மறுபுறத்தில் அகநிலைப்பட்ட, ஒரு தலைப்பட்சப் பார்வையைக் கொண்டு ஒரே ஒரு சாத்தியக் கூறை ஒப்புக் கொள்வதில்லை, விடுதலைக்கு அவசியமான நிலைமைகளைச் சுட்டிக்காட்டுவதோ அவற்றை ஈட்ட முயல்வதோ அறவே இல்லை. மேலும் சமரசப்படும் போக்கை அங்கீகரிக்கையில் நாம் பிறபோக்குகளையும் பிற தோற்றப்பாடுகளையும் காண்பதோடு, நாம் பின்னையவை சிறிது சிறிதாக மேலோங்குப் போபவையும் ஏற்கனவே முன்னையவற்றுடன் கடுமையாக மோதுபவையும் எனச் சுட்டிக்காட்டுகிறோம். அத்துடன் நாம் ஆரோக்கியமான போக்குகளும் தோற்றப்பாடுகளும் மேலோங்குவதற்குத் தேவையான நிலைமைகளையும் சுட்டிக்காட்டி சமரசப்படும் போக்கைக் கடக்கவும், மோசமான நிலையை மாற்றவும் பிரயாசைப்படுகிறோம். ஆகவே அடிமைப்பாட்டுவாதிகளுக்கு நேர்மாறாக நாம் நம்பிக்கையீனமுடைவர்களேயல்ல சீன விடுதலை மீது நம்பிக்கை கொண்டவர்கள்.

விரைவான வெற்றி எமக்கு விருப்பமில்லை என்பதல்ல, 'பிசாசுகளை'' இரவோடிரவாக விரட்டியடித்து விடுவதை எவரும் வரவேற்பர். ஆனால் சிற்சில திட்டவட்டமான நிலைமைகள் இல்லாத போது துரித வெற்றி புறநிலையான யதார்த்தத்தில் இல்லாமல் எமது மனங்களில் மட்டுமே உள்ள ஒன்று. அது ஒரு வெறும் பிரமை; போலித் தத்துவம் என்பதை நாம் சுட்டிக் காட்டுகிறோம். எனவே புற நிலைப்பட்ட, பல அம்சப் பார்வையைக் கொண்டு எதிரியுடனும் எம்முடனும் சம்பந்தப்பட்ட சகல சூழ்நிலைகளையும் கணக்கிலெடுத்து நாம் இறுதி வெற்றிக்கான ஒரே மார்க்கம் நீண்ட கால யுத்தமாகிய யுத்த தந்திரம்தான் எனச் சுட்டிக் காட்டுகிறோம். துரித வெற்றியென்ற சிறிதும் ஆதாரமற்ற தத்துவத்தை நிராகரிக்கின்றோம். இறுதி வெற்றிக்கு இன்றியமையாதவையான நிலைமைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள நாம் முயல வேண்டுமென்றும் இந்த நிலைமைகள் எவ்வளவு பூரணமாயும் விரைவாயும் பெறப்படுகின்றனவோ அவ்வளவுக்கு வெற்றி நிச்சயமாயிருக்கும். அதை நாம் அவ்வளவுக்கு விரைவாக ஈட்டுவோம், என நாம் கொள்கிறோம். இந்த விதமாக மட்டுமே யுத்தத்தின் பாதை குறுக்கப்பட முடியும். வெறும் வீண் பேச்சுக்களும் விஷயங்களை மலிவாக முடித்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியுமான துரித வெற்றித் தத்துவத்தை நிராகரிக்கின்றோம்.

ம ஓ சேதுங்
(நீண்ட கால யுத்தம் பற்றி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வைகாசி 1995

இதழ் - 10

அன்பளிப்பு ரூ. 25/-

★ தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போரை வல்லரசு எதிர்ப்புப் போராகத் தொடர்வோ

★ சிறீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைக்கு திம்பு கோரிக்கைகளை அடிப்படையாக முன் நிறுத்துவோ

★ இந்திய அரசின் நேரடி - மறைமுக இராணுவ உதவிகளை, தலையீட்டை எதிர்ப்போம்!

★ அய்.நா. படையின், அந்நியப் படைகளின் உதவிகளை, தலையீட்டை எதிர்ப்போம்!

★ தமிழீழம், சிறீலங்காவில் இவற்றை அங்கீகரித்துப் போராடும் இயக்கங்களுடன் கூட்டிணைவோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்